
Vol.4, Issue 7 | Annual Subscription ₹420

@NewsRotary /RotaryNewsIndia

டிசம்பர் 2021


# ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org



Rotary

# Share the gift of Rotary




Each of us was given an extraordinary gift when
we were proposed for membership in Rotary.

Extend that gift to others by visiting the Member Center
in My Rotary and referring a new member.

**Refer a new member today**

my.rotary.org/member-center


12


20


26


36


42


44

# உள்ளே


**12** **நம் இதயங்களில் வாழ்கிறார் ரோட்டரி வீரர் சுஷில் குப்தா**
PRID சுஷீல் குப்தாவுக்கு PRIP கல்யாண் பானர்ஜியின் உருக்கமான அஞ்சலி.

**20** **இந்தியாவின் "வெண்மைப் புரட்சி" நாயகன் வர்கீஸ் குரியன்**
வெண்மைப் புரட்சியைக் கட்டமைத்தவர் வர்கீஸ் குரியன், இந்தியாவை உலகின் மிகப் பெரிய பால் தயாரிப்பாளராக ஆக்கியவர்.

**26** **ரோட்டரியின் கூட்டு சக்தி தேசத்தை கட்டியெழுப்ப உதவும்!**
ஹொசப்பேட்டைக்கு வருகை தந்த RI தலைவர் சேகர் மேத்தா, ரோட்டரியன்கள் தொடர்ந்து நல்லவற்றைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினார்.

**28** **இந்தியா-பாகிஸ்தான் அமைதிப் பூங்கா நிருவும் ஆர்வத்தில் ரோட்டேரியன்கள்**
இந்திய, பாகிஸ்தான் ரோட்டரி சங்கங்களுக்கிடையிலான ஜூம் கூட்டம், இந்நாடுகளிடையிலான தடைகளை அகற்றும் வழிகளை விவாதித்தது.

**36** **தில்லியிலுள்ள சேரி மக்களுக்கு 100 கை பம்ப்கள்**
ஒரு குடியிருப்பின் தண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்த்துவைத்துள்ள RC டெல்லி சவுத் சென்ட்ரலின் திட்டம்.

**42** **மும்பையில் நைஜீரியக் குழந்தைக்கு இதய அறுவைச் சிகிச்சை**
இந்த ரோட்டரி ஆண்டில், பிறவி இதயக் குறைபாடு கொண்ட 100 வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய உறுதிகொண்டுள்ளது RID 3141.

**44** **ஆதிவாசி பழங்குடியினர் வாழ்வில் ஒளியேற்றிய "சூரியசக்தி மின்சாரம்"**
ஒரு பழங்குடியினக் குக்கிராமத்துக்குச் சூரிய ஒளி விளக்குகள், தேவையான பொருட்களை வழங்கிய RC சேலம் சென்ட்ரல்.

**66** **குற்றவுணர்ச்சி இல்லாமல் பரிசளிப்போம்**
இந்தப் பண்டிகை நேரத்தில், சுற்றுச்சூழலுக்கு இதமான பரிசுகளை வழங்கி மகிழ்ச்சியைப் பரப்புங்கள்.


இந்த QR code-ஐ ஸ்கேன் செய்து எங்கள் வலைதளத்திற்கு செல்லலாம்.

அட்டைப்படம்
**PRID சுஷீல் குப்தா**

இந்த QR code-ஐ ஸ்கேன் செய்து எங்கள் இதழை படிக்கலாம்.

## போதை பழக்கத்திற்கு அடிமையாதல் பற்றிய நல்ல பதிவுகள்


*நவம்பர் இதழின் அட்டைப்படம் மிக நன்றாக இருந்தது. PRID சுசீல் குப்தா காலமானதை அறிந்து நான் மிகவும் வருந்தினேன். ரோட்டரி உலகம் அவரை எப்போதும் நினைக்கும். RI தலைவர் மேத்தா TRFஐ தாஜ் மகாலுடன் ஒப்பிட்டிருப்பது மிகச் சிறப்பானது. குழந்தைகளை அடிமையாக்கும் பல விஷயங்களையும், இந்தத் தீமையை எதிர்க்கும் ரோட்டரியின் முயற்சிகளையும் ஆசிரியர் குறிப்பு விவரிக்கிறது. விரிவான அட்டைப் படக் கட்டுரை நம் கண்களைத் திறக்கிறது.*

*இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதில் ரோட்டரியின் முயற்சிகளை RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி நன்கு விளக்குகிறார். பல மக்களுக்குக் காது கேட்கும் கருவிகளை வழங்கிச் சமூகத்துக்குச் சிறந்த சேவை புரியும் RC ஹரிப்பாடு-க்குப் பாராட்டுகள். ரோட்டரி இந்தியாவின் இளம்பிள்ளைவாத நாள் கொண்டாட்டங்களின் புகைப்படங்கள் சிறப்பாக அமைந்திருந்தன.*

*Rtn பெஞ்சமின் லிஸ்ட் வேதியியலில் நோபல் பரிசு பெற்றதைப்பற்றிப் படித்து மகிழ்ந்தோம். மற்ற அனைத்துக் கட்டுரைகளும் உயர்ந்த தரத்தில் இருந்தன.*

*ஃபிலிப் முலப்பொனெ M T*
*RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

*போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் ஒரு சிக்கலான நோய், மரபியல் முன் தீர்மானம், வீட்டில் வன்முறை நிகழ்வுகள், அழுத்தம் போன்ற பல காரணிகளால் இது*




*நடக்கிறது. நவம்பர் ஆசிரியர் பக்கம் இளைஞர்களிடையில் பல வகை அடிமையாதல்களைப்பற்றிப் பேசியது.*

*K M K மூர்த்தி*
*RC செகந்திராபாத் — D 3150*

*PRIP கல்யாண் பேனர்ஜி தலைமையில் இயங்குகிற, அடிமையாதலைத் தடுக்கும் ரோட்டரி செயல் குழு (RAG-AP) கடந்த மூன்று ஆண்டுகளாகக் கடுமையாக உழைத்துவருகிறது, இதை நவம்பர் அட்டைப் படக் கட்டுரை விவரிக்கிறது. ரோட்டரியன்களுடைய கடின உழைப்பு, இந்த RAG தன்னுடைய இலக்குகளில் வெற்றியடைய உதவும்.*

*மனித குலத்தின் மேம்பாட்டுக்காக இன்னும் பெரிய திட்டங்களை நிறைவேற்றும் திறன் ரோட்டரியன்களுக்கு உண்டு என்று RI தலைவர் மேத்தா தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார். நாம் நம்முடைய ஒட்டுமொத்தப் பேரார்வத்தை வாழ்க்கைகளை மாற்றும் திட்டங்களாக மாற்றவேண்டும் என்று அவர் விரும்புகிறார்.*

*செயல் வீரர்கள்: பெண்களுக்கு ஆற்றல் அளித்தல் சாதனையாளர்கள் விருதைப் பெறும் ஆறு பேருக்கு நம் வாழ்த்துகள். மார்ச் மாதத்தில் UNICEFல் ரோட்டரி நாளின்போது அவர்கள் பெருமைப்படுத்தப்படுவார்கள் என்று தெரிந்துகொண்டு மகிழ்ந்தோம்.*

*S முனியாண்டி, RC திண்டுக்கல்*
*ஃபோர்ட் — D 3000*

*அடிமையாதலை ரோட்டரி வழியில் எதிர்த்தல் என்ற ஆசிரியர் பக்கம் பொது மக்களுடைய கண்களைத் திறக்கும்; RC சென்னை பாரதி 1,000 பெண்களுக்கு ஆற்றல் அளிக்க இலக்கு அமைத்துள்ளது என்ற கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. ரஷீதா பகத் எழுதிய காது கேட்கும் கருவிகளின் வழியாக மகிழ்ச்சியைப் பரப்பும் RC ஹரிப்பாடு என்ற கட்டுரை நன்றாக இருந்தது, குறிப்பாக, உள்ளூர் MLA ரெமேஷ் சென்னிதலா பலன் பெறும் ஒருவருக்குக் காது கேட்கும் கருவியைப் பொருத்துகிற புகைப்படம் சிறப்பாக அமைந்திருந்தது. கிரண் எழுதிய சிறுமிகள், பெண்களை ஆதரித்தல் என்ற அறிக்கை ஆர்வமூட்டியது.*

*அக்டோபர் இதழின் அட்டைப் புகைப்படம் (பிறவி இதயக் குறைபாடு கொண்ட ஒரு குழந்தை சத்ய சாய் மருத்துவமனையில் சிகிச்சை பெறுதல்) நெஞ்சைத் தொட்டது. RC பிலாஸ்பூர், சத்திஸ்கரின் மனிதத்தன்மைச் சேவைகளுக்காக அவர்களுக்குப் பாராட்டுகள். கிரண் ஜெஹ்ரா எழுதிய கோவிட் உதவிப்*

### ஊக்கம் அளிக்கும் ஒரு கட்டுரை

“வருங்காலத்துக்கான சொற்கள்” என்ற கட்டுரை (அக்டோபர் இதழ்) மிகுந்த ஊக்கம் அளித்தது. காரணம், நான் எப்போதும் எழுத்தறிவின்மீது பேரார்வம் கொண்டுள்ளேன். இந்தத் திட்டத்தின் பலன்களுடைய தாக்கம் இன்னும் மேம் பட்ட மனிதர்களை உருவாக்கும், அதனால் இன்னும் மேம்பட்ட தலைவர்களையும் உருவாக்கும். ரோட்டரி யுடன் GoI இணைந்து பணியாற்றுவது, இன்னும் பல பொருளுள்ள திட்டங்கள் சரியான வெளிச்சத்தைப் பெறுவதற்கான வரவேற்கவேண்டிய அடையாளம். நாம் எழுத்தறிவு தொடர்பாக இன்னும் நிறையச் செய்யவேண்டும்.

விவேக் கந்தேல்வால்
RC டியோனர் — D 3141

RI தலைவர் மேத்தா TRFஐ அன்புச் சின்னமாகிய தாஜ் மகாலுடன் சரியாக ஒப்பிட்டுள்ளார். நாம் அதைத் தாய் (ரோட்டரி அறக்கட்டளை) தன் குழந்தைகள்மீது (மனித குலம்) கொண்டுள்ள சுயநலமற்ற அன்புடனும் ஒப்பிடலாம்.

பியுஷ் தோஷி
RC பேளூர் — D 3291

14 கோடி செலவில் ஹைதராபாதில் ஒரு ரோட்டரி ஹாஸ்பைஸ் என்ற கட்டுரையைக் கண்டு நான் மகிழ்ந்தேன். RC

பணிக்காகப் பெருமைப்படுத்தப்பட்ட ரோட்டரியன்கள் கட்டுரை மிக நன்றாக அமைந்திருந்தது. ரோட்டரி செய்திகள் குழு எழுதிய பெண்கள் நலனில் கவனம் செலுத்துவோம் என்ற கட்டுரை நன்றாக இருந்தது. RID 3080 பள்ளிக் குழந்தைகளுக்கு நல்ல இருக்கை வசதிகளை வழங்கியிருப்பதை அறிந்து மகிழ்ந்தோம்

டேனியல் சிட்டிலப்பிள்ளி
RC கலூர் — D 3201

பசுமைப் பொருட்களைக் கொண்ட முளையின் அட்டைப் படத்தை வெளியிட்ட ஆசிரியருக்கு நன்றி. இந்தப் படம், சமீபத்தில் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற COP26 மாநாட்டுக்குப் பொருந்துகிறது. இங்கு, G-27ன் அனைத்து உலகத் தலைவர்களும் பிற அமைப்புகளும் எதிர்வரும் ஆண்டுகளில் கார்பன் உமிழ்வு இலக்குகளை எட்ட நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள். ரோட்டரி சங்கங்கள் மிகப் பெரிய மரம் நடும் நிகழ்ச்சிகளை நடத்து கின்றன, பசுமை மனங்களை உருவாக்குவதற்கான சரியான படிநிலை இது. வாழ்வதற்கும், நலன், பசி மற்றும் மனித குலம் தொடர்பான ரோட்டரி பங்களிப்புகளை அனுப விப்பதற்கும் இன்னும் மேம்பட்ட ஒரு பூமிக்காகச் சிந்திக்கிற, செயல்படுகிற ஒரு பசுமை யோசனையைச் சுட்டிக் காண்பித்ததற்காக ஆசிரியர் குழுவை நான் பாராட்டுகிறேன்.

அபய் கிஷோர் சந்த்வார்
RC தன்பாத் மிட்-டவுன் — D 3250

பஞ்சரா ஹில்ஸ் 60,000 சதுர அடியில் ஒரு கட்டடத்தைக் கட்டி, தீவிர நோய் கொண்ட நோயாளிகளுக்கான ஓர் இல்லமாக இந்த ஹாஸ்பைஸை அமைத்துள்ளது. தாங்கள் இந்தப் பெரிய திட்டத்தில் படிப்படியான முறையில் பணியாற்றியதாகச் சங்கத் தலைவர் விகாஸ் ரங்கா சொல்கிறார். இந்த ஹாஸ்பைஸில் சுமார் 4,000 நோயாளிகள் தங்கலாம் என்று அறிந்து மகிழ்கிறோம்.

N ஜகதீசன், RC ஏலூரு — D 3020




கிளிஃப் டோக்டெர்மன் மறைந்தார்

நவம்பர் 24 அன்று RI முன்னாள் தலைவர் கிளிஃப் டோக்டெர்மன் காலமானார் என்று நாங்கள் ஆழமான வருத்தத்துடன் தெரிவிக்கிறோம். அவர் 1992–93ல் RI தலைவராகவும், 1997–98ல் TRF தலைவராகவும் சேவை புரிந்தார். ABCs of Rotary என்ற சிற்றேட்டை அவர் எழுதினார். உண்மையான மகிழ்ச்சி, பிறருக்கு உதவுதல்'' என்பதுதான் அவருடைய தலைமைக் கருப்பொருள்.

Now you can **scan this QR code**
**to pay your magazine subscription**




We welcome your feedback. Write to the Editor:
**rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.**
Mail your project details, along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/ webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus**
on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

# ரோட்டரியிற்கு மக்கள் நலம் ஒரு மனித உரிமை

SERVE TO CHANGE LIVES

நம்முடைய மற்றும் நம் அன்புக்குரியவர்களுடைய பாது காப்பை இன்னும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் பன்னாட்டு நோய்ப்பரவலால், பொது நலன் எல்லார் மனத்திலும் உள்ளது. ஒருவிதத்தில், Covid-19ல் நாம் அனைவரும் மருத்துவத் தொழில் வல்லுனர்களுடைய பணிகளையும் பொறுப்புகளையும் இன்னும் நன்றாக அறிந்திருக்கிறோம்.

டிசம்பர் மாதம், ரோட்டரியில் நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை மாதம் ஆகும். துரதிருஷ்டவசமாக, ஒரு நோய் நம் சமூகங்களை எப்படியெல்லாம் துன்பப்படுத்தும் என்பதை இந்த நோய்ப்பரவல் பெரும்பாலான மக்களுக்குக் கற்றுத்தந்துள்ளது.

ரோட்டரியன்கள் என்ற முறையில், நலனும் நல்வாழ்க்கையும் ஒரு மனித உரிமை என்று நாம் நம்புகிறோம், உலகெங்கும் 400 மில்லியன் மக்களுக்கு அடிப்படை நலச் சேவைகள் கிடைக்காதபோதும் கூட. மருந்தகங்கள், கண் மருத்துவ மனைகள், ரத்த வங்கிகளை அமைத்தல், நலிந்த சமூகங்களில் மருத்துவ வசதிகளுக்கான உள் கட்டமைப்புகளை உருவாக்குதல் என நாம் செய்யும் பணி முழுவதும் ஒரு மையமான நம்பிக்கையை உணர்த்துகிறது.

என்னுடைய நலப் பணிகள் என்னுடைய ரோட்டரி சங்கமான கல்கத்தா-மகாநகரில் தொடங்கின. அங்கு நான் சிறு இதயங்களைக் காப்பாற்றுதல் என்ற திட்டத்தை நடத்த உதவினேன். அடுத்த பல ஆண்டுகளில் இந்தத் திட்டம் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், ஆப்பிரிக்காவைச் சேர்ந்த குழந்தைகளுக்கு 2,500 இலவச இதய அறுவைச் சிகிச்சைகளை வழங்கியது. அந்தத் திட்டம் உள்ளூரில், எங்கள் சமூகத்தில் வெறும் ஆறு அறுவைச் சிகிச்சைகளைச் செய்கிற இலக்குடன்தான் தொடங்கியது, பின் உலக அளவில் முன்னேறியது. இன்று, அடுத்த ஐந்து ஆண்டுகளில் மேலும் 20,000 அறுவைச் சிகிச்சை களை நிறைவு செய்ய நாங்கள் இலக்கு அமைத்துள்ளோம்.

இதுபோன்ற சவால்களைக் கையாள்வதற்கு உலகம் ரோட்டரியைச் சார்ந்திருக்கிறது, இதில் நாம் பிறருக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறோம். முந்தைய பத்து ஆண்டுகளில், உலகெங்கும் ரோட்டரியன்கள் நடத்தும் குடும்ப நல நாட்களின்போது மருத்துவத் தொழில் வல்லுனர்களும் அரசுப் பணியாளர்களும் 10 நாடு களில் 2.5 மில்லியன் மக்களுக்கு இலவச நலச் சேவைகளை வழங்கியுள்ளார்கள். ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவுக்குச் செல்லும் மருத்துவக் குழுக்கள், நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சையில் நேரடிக் களப்பணிக்கு மிகச்சிறந்த எடுத்துக் காட்டாகும். உள்ளூர் நிலையிலும் ரோட்டரி உறுப்பினர்கள் ஈடுபடலாம்; எடுத்துக்காட்டாக, அமெரிக்கா, மெக்சிகோவில் உள்ள சங்கங்கள் மெக்சிகோவில் உள்ள குயெர்ரெரோ-வில் ஓர் இலவச நல மருந்தகத்துக்கு நிதியளிக்கின்றன.

அத்துடன், இளம்பிள்ளை வாதத்தை அகற்றுவதற்கு நாம் செய்த முயற்சிகள், இதுவரையிலான சமூக நலப்பராமரிப்பில் மிகச் சிறந்த வரலாறாகும்.

இந்த மாதம், நோய்களைத் தடுத்தல் மற்றும் நோய்களுக்கு எதிராகப் போராடுதலில் உங்கள் சங்கம் எப்படிக் கவனம் செலுத்தலாம் என்பதுபற்றிச் சிந்தியுங்கள். இன்னும் கூடுதல் மக்களுக்கு உதவக்கூடிய சங்க, மாவட்டத் திட்டங்களின் வழியாக இன்னும் பெரிய, இன்னும் சிறந்த, இன்னும் துணிவான அணுகு முறையை எடுக்கும் நேரம் இது. உங்கள் இலக்குகளை மீண்டும் மதிப்பிடுங்கள். மாதக் கணக்கு வேண்டாம், ஆண்டுக் கணக்கில் நீடிக்கும் மாற்றங்களுக்கான வியூகங்களை உருவாக்குங்கள்.

அனைவருக்கும் ஒரு நீண்ட, நலமான வாழ்க்கை தேவை. நீங்கள் வாழ்க்கைகளை மாற்றுவதற்குச் சேவை புரியும்போது, இன்றைய உங்கள் செயல்பாடுகள் பிறருடைய வாழ்க்கைகளை நீட்டிக்க உதவலாம்.



Shekhar Mehta

**சேகர் மேத்தா**
**RI தலைவர்**



# மறக்கமுடியாத மாமனிதர் சுஷில்குப்தா

ஒரு கனத்த இதயத்துடன் ரோட்டரி நியூஸில் பணிபுரியும் நாங்கள் இந்த இதழை வெளிக்கொணர்கிறோம். மறக்கமுடியாத ரோட்டேரியன் ஒருவரின் படம் இந்த இதழின் அட்டைப்படத்தில் இடம் பெற்றுள்ளது. ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராக இருந்த சுஷில் குப்தா என்ற அந்த மனிதர் இப்போது நம்மிடையே இல்லை. எங்களால் 2020–21 ஆம் ஆண்டுக்கான RI தலைவராக பரிந்துரைக்கப்பட்டதன் மூலம் ரோட்டரியின் உச்சத்தை தொட்டவர், உடல்நலக்குறைவு காரணமாக பதவி விலக நேரிட்டது. அவர் பன்முகத்தன்மை கொண்ட அனைவராலும் விரும்பப்பட்ட ஒரு நபர். அவருடைய கனிவான பேச்சு, எளிமையான வாழ்க்கையை பார்க்கும் போது இந்தியாவின் ஹோட்டல் தொழிலதிபர்களில் ஒருவர் என்பதை யாரும் நம்பமாட்டார்கள். அவருக்கு தொழில்துறையிலும், அரசியல்துறையிலும் பலருடன் தொடர்புகளும் செல்வாக்குகளும் இருந்தன. சமூக சேவை திட்டங்களில் அவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். அரசின் எந்த ஒரு துறையிலும் ஏதாவது ஒரு விஷயத்துக்காக அனுமதி பெற வேண்டுமானால், கௌரவம் பார்க்காமல் தாமே நேரில் சென்று அதைச் செய்து முடிப்பார். அதிகாரிகளும் அவரிடம் அன்பும் மரியாதையும் வைத்திருந்ததால் அவரால் வெளிப்படையாக எதையும் செய்ய முடிந்தது.

தில்லி கோல்ஃப் மைதானத்தில் கோல்ஃப் விளையாடுவது அவரது சிறந்த பொழுதுபோக்கில் ஒன்று. ஒரு நேர்காணலின்போது அவர், என்னுடன் கோல்ஃப் விளையாடுபவர்களில் பலர் அரசின் உயர் பதவிகளில் இருக்கிறார்கள். ரோட்டரி ஒரு குறிப்பிட்ட சமூக சேவையை செய்ய விரும்புகிறது என்றால், அதுபற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னால், ரோட்டரிக்காக எதையும் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று என்னிடம் குறிப்பிட்டார். அவர் ஒரு சிறந்த நபர் மட்டுமல்ல, செயல்வீரர். நகைச்சுவை உணர்வுடன் பேசுவதை அவருக்கு கைவந்த கலை. எப்போதும் சிரித்த முகத்துடன் நண்பர்களை வரவேற்று வீட்டில் அல்லது ஹோட்டலில் விருந்து கொடுப்பார். மற்றவர்களுடன் அவர் வைத்துள்ள நட்பு இதயபூர்வமானது. அவரது ஹோட்டலில் பணிபுரியும் சமையல்காரர்கள் உங்களிடம் தனிக்கவனம் செலுத்தும் போது நீங்கள் ராணி போலவே உணரலாம்.

அவர் எதையும் உன்னிப்பாக கவனித்து பின்தொடர்வார். பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டுவது, நீர் ஆதாரங்களைப் பெருக்கி, நீர் சேகரிப்பு திட்டங்களைச் செயல்படுத்துவது அவருக்கு விருப்பமான செயல்களாகும். இதை ரோட்டரி உலகமே நன்கு அறியும். இதனாலேயே "வின்ஸ்" திட்டங்கள் அறிமுகமானபோது அவர் இத்திட்டத்தின் சர்வதேச தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார். கர்நாடகப் பள்ளி ஒன்றில் வின்ஸ் திட்ட செயல்பாடு தொடர்பான செய்திகளை ஜெய்ஸ்ரீ சேகரித்த போது கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறை கட்டுவதில் துடிப்பான பள்ளி மாணவி ஒருவர் சாம்பியனாக உருவானார். ரோட்டேரியன்கள் விடைபெற்றபோது அந்த சிறுமி அவர்களிடம், பள்ளிக்கு ஒரு மடிக்கணினி வழங்குமாறு கேட்டுக் கொண்டார். இந்தச் செய்தி ரோட்டரி நியூஸ் இதழில் வெளியானது. இதைப் படித்த குப்தா, அதை நினைவில் வைத்துக் கொண்டார். அடிக்கடி ஜெய்ஸ்ரீ மற்றும் சங்கத்தின் தலைவர்களைத் தொடர்பு கொண்டு அந்தப் பள்ளிக்கு உறுதியளித்தபடி மடிக்கணினி வழங்கப்பட்டுவிட்டதா என்று கேட்பார். அந்த பள்ளிக்கு மடிக்கணினி கொடுக்கப்படும் வரை அவரது அழைப்புகள் நிற்கவேயில்லை.

ரோட்டரி சேவையில் அவர், நேர்மையாகவும், கவனத்துடனும் செயல்பட்டு வந்தார். எந்த ஒரு திட்டத்தையும் சிறியதாக எண்ணமாட்டார். அவர் எப்போதுமே பெரியதாக சிந்தித்தார், பெரிதாக கனவு கனவு கண்டார், பெரியதாக சாதித்தார். ஒரு கிராமத்தில் அறியப்படாத பள்ளி மாணவியாக இருந்தாலும் சரி, கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார். இதிலிருந்தே அவர் எப்படிப்பட்டவர் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

சுஷில்ஜி, ரோட்டரி உலகமே உங்களை இழந்து தவிக்கிறது. நீங்கள் ரோட்டரியுடன் பின்னிப் பிணைந்தவர். ரோட்டரியின் கொள்கைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதைவிட அதிகம் சேவை செய்தவர். இன்றும் ரோட்டேரியன்களின் இதயத்தில் வாழ்பவர்!



ரஷீதா பகத்

## Governors Council

RID 2981 S Balaji
RID 2982 K Sundharalingam
RID 3000 R Jeyakkan
RID 3011 Anup Mittal
RID 3012 Ashok Aggarwal
RID 3020 Rama Rao M
RID 3030 Ramesh Vishwanath Meher
RID 3040 Col Mahendra Mishra
RID 3053 Sanjay Malviya
RID 3054 Ashok K Mangal
RID 3060 Santosh Pradhan
RID 3070 Dr Upinder Singh Ghai
RID 3080 Ajay Madan
RID 3090 Parveen Jindal
RID 3100 Rajiv Singhal
RID 3110 Mukesh Singhal
RID 3120 Samar Raj Garg
RID 3131 Pankaj Arun Shah
RID 3132 Dr Omprakash B Motipawale
RID 3141 Rajendra Agarwal
RID 3142 Dr Mayuresh Warke
RID 3150 K Prabhakar
RID 3160 Thirupathi Naidu V
RID 3170 Gaurishkumar Manohar Dhond
RID 3181 A R Ravindra Bhat
RID 3182 Ramachandra Murthy M G
RID 3190 Fazal Mahmood
RID 3201 Rajasekhar Srinivasan
RID 3203 Shanmugasundaram K
RID 3204 Dr Rajesh Subash
RID 3211 Srinivasan K
RID 3212 Jacintha Dharma
RID 3231 Nirmal Raghavan W M
RID 3232 Sridhar J
RID 3240 Dr Mohan Shyam Konwar
RID 3250 Pratim Banerjee
RID 3261 Sunil Phatak
RID 3262 Santanu Kumar Pani
RID 3291 Prabir Chatterjee


Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions — original content — is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

# RI இயக்குனர்

## உங்கள் மாவட்ட கருத்தரங்கில் கலந்து கொள்ளுங்கள்

கிறிஸ்துமஸ் விரைவில் வரப்போகிறது, உலகெங்குமுள்ள மக்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்குப் பரிசளித்து மகிழப்போகிறார்கள். இது அன்பும் நேசமும் தோழமையும் நிறைந்த நேரம்.

டிசம்பர் மாதத்துடன் ரோட்டரி ஆண்டின் முதல் பாதி நிறைவடைகிறது: ஆறு மாதங்கள் நிறைந்தன; இன்னும் ஆறு மாதங்கள் வரவுள்ளன. ரோட்டரியன்களாக, ரோட்டரி சங்கங்களாக நம்முடைய சொந்தச் செயல்திறனை மதிப்பிடும் நேரம் இது. நாம் நம்முடைய ரோட்டரி அறக்கட்டளைக்குப் போதுமான அளவு வழங்கியுள்ளோமா? ரோட்டரிக்கு நாம் போதுமான அளவு புதிய உறுப்பினர்களை அழைத்து வந்துள்ளோமா? வாழ்க்கைகளை மாற்றுவதற்குச் சேவை புரிவதற்கு நாம் போதுமானவற்றைச் செய்துள்ளோமா?

முடக்கக் கட்டுப்பாடுகள் மெதுவாக விலக்கப்படும் இந்த நேரத்தில், ரோட்டரி சங்கங்கள் படிப்படியாக வழக்கமான நேரடிக் கூட்டங்களுக்குத் திரும்புகின்றன. முந்தைய 18 மாதங்களில் மெய்நிகர் தளங்களில் நாம் நம்மால் இயன்ற அளவுக்குப் பணியாற்றினோம். ஆனாலும், சென்ற ஆண்டின் உறுப்பினர் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள சரிவு, ஒருவரை ஒருவர் நேரில் சந்திப்பதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது.

இப்போது, DG தங்கள் பதவிக் காலத்தின் உயர்ந்த புள்ளியாகிய மாவட்டக் கருத்தரங்கங்களுக்குத் தயாராகிக் கொண்டிருப்பார்கள். எல்லா இடங்களிலும் உள்ள ரோட்டரியன்கள் மாவட்டக் கருத்தரங்குகளில் கலந்து கொள்வதன் மூலம் கிடைக்கப்போகும் மிகச்சிறந்த தோழமை, யோசனைகளின் பரிமாறல், உலகை அறிதல் ஆகியவற்றை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். கருத்தரங்குக் குழுக்கள் பரபரப்பாகப் பெரும் எண்ணிக்கையிலானோரைப் பதிவு செய்துகொண்டிருப்பார்கள், உங்களுக்காக மிகச் சிறந்த பேச்சாளர்கள், மிகச் சிறந்த பொழுது போக்கைக் கொண்டுவருவார்கள்.

புதிய ரோட்டரியன்கள் எல்லாரும் தங்கள் மாவட்டக் கருத்தரங்கில் கண்டிப்பாகக் கலந்துகொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கு தான் நீங்கள் சங்க நிலையைத் தாண்டிய ரோட்டரி மாயத்தை அனுபவிப்பீர்கள். ரோட்டரி தலைமையின் எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்வதற்காக RI தலைவருடைய பிரதிநிதியும் அங்கு இருப்பார்.

உங்கள் ஒவ்வொருவரையும் சந்தித்துக் கை குலுக்குவதற்காக உங்கள் மாவட்டக் கருத்தரங்குக்கு வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய கிறிஸ்துமஸ் வாழ்த்துகள், ஜனவரி 1, 2022 அன்று புத்தாண்டை வரவேற்கத் தயாராவோம்!



**Dr மகேஷ் கோட்பாகி**
RI இயக்குனர், 2021–23

# களின் செய்திகள்

## பூமிதான் நம் ஒரே வீடு



நம் பொதுவான மரபுச்சொத்தாகிய சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் ரோட்டரிக்கு மிகுந்த ஆர்வம் உள்ளது. நாம் சமீபத்தில் சேர்த்துள்ள இந்தக் கவனப் பகுதி உலகெங்கும் பல ரோட்டரியன்களை ஈர்த்துள்ளது, குறிப்பாக, இளம் தலைமுறையினரை. நம் பகுதியில் உள்ள சங்கங்கள் காடு வளர்ப்பு, நீர் நிலைகளைப் பாதுகாத்தல் போன்ற செயல்பாடு களில் சுறுசுறுப்பாக ஈடுபடுகிறார்கள். புதைபடிவ எரிபொருட்களைச் சரியான முறையில் பயன்படுத்து வதும், மக்காத பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைப்பதும் இன்னும் பரந்த, இன்னும் பெரிய அளவில் முன்னிறுத்தப்படவேண்டும்.

நாம் மற்ற உயிர்களுடன் இணைந்து வாழ்கிறோம் என்கிற உண்மையை நாம் உணரவேண்டும், பல வகைத் தாவரங்கள், விலங்குகளுக்கு இடையிலான இந்த மென்மையான சமநிலை நம் எண்ணத்தில், செயல்பாட்டில் முதல் இடத்தில் இருக்கவேண்டும். இளம் தலைமுறையினர் இதில் தங்களுடைய பங்கு இன்னும் கூடுதலானது என்று எண்ணுகிறார்கள். அதனால், இது இளம் தலைமுறையினருக்குக் கூடுதல் ஆர்வம் அளிக்கலாம் என்றாலும், நாம் அனைவரும் இந்தப் பூமியைக் காப்பதில் பங்குவகிக்கிறோம் என்பதை எல்லாரும் உணரவேண்டும்.

ரோட்டரியன்கள் இந்தப் பரப்புரையின் முன் வரிசையில் இருக்கவேண்டும். நாம் பேசினால் போதாது, செயல்படவேண்டும். நாம் ஒவ்வொருவரும் இதற்காக நிறையச் செய்யலாம்: நம் அன்றாடத் தனிப்பட்ட வாழ்க்கையில், தொழில் செயல்பாடுகளிலும். பன்னாட்டு நல்கைகள் கிடைப்பதும், இந்த நோக்கத்தை ஆதரிப்பதற்குப் பல பெருநிறுவனங்கள் காண்பித்துள்ள ஆர்வமும் சேர்ந்து ஒரு நல்ல மாற்றத்தைச் சுட்டிக்காண்பிக்கின்றன. ஆனால், நாம் விரைந்து செயல்படவேண்டும். சங்கங்களும் ரோட்டரியன்களும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் திட்டங்களைச் சிந்தித்துத் திட்டமிட்டுச் செயல்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்குத் தகவல் வளங்களாக இருந்து உதவக்கூடிய பல வல்லுனர்கள் நம் பகுதிகளில் உள்ளார்கள். இந்தப் பூமி, நம் வீடு. இதை ஒழுங்காக வைத்துக்கொள்வதும், வருங்காலத் தலைமுறையினருக்காக இதைக் காப்பாற்றுவதும் நம் பணியாக இருக்கவேண்டும்.

நம்மில் பலர் நம்முடைய தொழில் செயல்பாடுகளில், முதல் திட்டம் தோற்றால் இரண்டாவது திட்டத்தை வைத்திருக்கிறோம். ஆனால், இந்த விஷயத்தில் நமக்கு இரண்டாவது கோள் என்கிற ஆடம்பரம் இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும், இதில் நாம் தோற்கக்கூடாது, அதற்கு, உடனடியாக இப்போதே செயல்படவேண்டும்!

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23


### Board of Trustees

Shekhar Mehta — RID 3291
**RI President**

Dr Mahesh Kotbagi — RID 3131
**RI Director &**
**Chairman, Rotary News Trust**

AS Venkatesh — RID 3232
**RI Director**

Gulam A Vahanvaty — RID 3141
**TRF Trustee**

Rajendra K Saboo — RID 3080
Kalyan Banerjee — RID 3060
Panduranga Setty — RID 3190
Ashok Mahajan — RID 3141
P T Prabhakar — RID 3232
Dr Manoj D Desai — RID 3060
C Basker — RID 3000
Dr Bharat Pandya — RID 3141
Kamal Sanghvi — RID 3250

### Executive Committee Members (2021–22)

Gaurish Dhond — RID 3170
**Chairman**
**Governors Council**

Anup Mittal — RID 3011
**Secretary**
**Governors Council**

Ramesh Meher — RID 3030
**Secretary**
**Executive Committee**

V Thirupathi Naidu — RID 3160
**Treasurer**
**Executive Committee**

Jacintha Dharma — RID 3212
**Member**
**Advisory Committee**




**Editor**
Rasheeda Bhagat

**Deputy Editor**
Jaishree Padmanabhan

**Rotary News Trust**
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Now share articles from
*rotarynewsonline.org*
on WhatsApp.

# ஒன்றாகச் சேர்ந்தால், நாம் நம்முடைய இலக்குகளை எட்டலாம்



இந்த ஆண்டு நாம் நம்முடைய இலக்கை எட்டவேண்டுமென்றால், போலியோப்ளஸ்ஸுக்கு $50 மில்லியன் திரட்ட வேண்டும், அப்போதுதான் பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை வழங்கும் 2-க்கு-1 பொருத்தம் அதை $150 மில்லியனாக ஆக்கும். நம் ரோட்டரி அறக்கட்டளைத் திட்டங்கள் தொடர்ந்து வலுவாக இயங்கவேண்டுமென்றால், நாம் ஆண்டு நிதிக்கு $125 மில்லியன் திரட்டுவதாக இலக்கு அமைத்துள்ளோம். நேரடிப் பரிசுகள், புதிய உறுதியளித்தல்களில் நன்கொடை நிறுவல் நிதிக்கு $95 மில்லியன் திரட்டவும், மற்ற நேரடிப் பரிசுகளில் மேலும் $40 மில்லியன் திரட்டவும் நாம் இலக்கு அமைத்துள்ளோம்.

ஒட்டுமொத்த இலக்கான $410 மில்லியன் நாம் எப்படி எட்டுவோம்? ரோட்டரி உள்பட நம்முடைய எல்லா மிகச் சிறந்த முயற்சிகளிலும் நாம் ஓர் அணியின் (TEAM) பகுதியாக உள்ளோம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்: Together, Everyone Achieves More (ஒன்றாகச் சேர்ந்தால், எல்லாரும் கூடுதலாகச் சாதிப்பார்கள்).

நாம் நம்முடைய இலக்குகளை மீண்டும் ஆராயும்போது, ஏன்'' என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். இதற்குப் பெரிய விளக்கம் தேவையில்லை என்று நினைக்கிறேன். ரோட்டரி அறக்கட்டளை நல்கை ஒன்றை ஆதரிப்பதன்மூலம் கர்ப்பிணித் தாய்மார்கள், அவர்களுடைய குழந்தைகளுடைய நலனுக்கும் வளத்துக்கும் நீங்கள் உதவமாட்டீர்களா என்ன? நம்முடைய சிறந்த இல்லமாகிய சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உதவும் திட்டங்களை நீங்கள் தொடங்கமாட்டீர்களா என்ன? வாழ்க்கை விலைமதிப்பு மிக்கது, பிறருடைய வாழ்க்கையை மேம்படுத்தும் ஒவ்வொரு வாய்ப்பையும் நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற என் எண்ணங்களை நோய்ப்பரவல் புதுப்பித்துள்ளது.

நீங்கள் நம் அணியில் உள்ள மக்களில் ஒருவர். இந்த மாதம், ரோட்டரி அறக்கட்டளைக்குப் பரிசு அளிப்பதன் மூலம் ரோட்டரியின் வலுவான நன்கொடைப் பண்பாட்டில் பங்கேற்கும் பிற தலைவர்களுடன் நீங்களும் இணையவேண்டும் என்று நான் ஊக்குவிக்கிறேன். இது வாரி வழங்கும் பருவம், ஒவ்வொரு பரிசும் முக்கியம். தயவுசெய்து, உங்களுக்குச் சரியாகத் தோன்றும் எந்தவொரு தொகையையும் 31 டிசம்பருக்குள் பங்களியுங்கள். உங்கள் பரிசு 2022இலும் அதற்குப்பின் வரும் ஆண்டுகளிலும் பலருக்குத் தொடர்ந்து உதவும்.

உலகில் மாற்றத்தை உண்டாக்குவதற்கு ரோட்டரி அறக்கட்டளை நமக்குப் பலப்பல வாய்ப்புகளை வழங்குகிறது. அந்த வாய்ப்புகளை நாம் எப்போதும் வீணடிக்கக்கூடாது, நம் அறக்கட்டளையைச் சிறிதாக எண்ணவும் கூடாது.

ஜூடியும் நானும் உங்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த விடுமுறை வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.

**ஜான் F ஜெர்ம்**
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்



# சிறு துளி பெறு வெள்ளம்



ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஒரு சேவை அமைப்பாக ரோட்டரி வளர்ந்திருப்பதும் அங்கீகரிக்கப்பட்டிருப்பதும் TRF உடன் நெருக்கமாக இணைந்துள்ளது. உலகத்தில் நல்லவற்றைச் செய்வதால் பலன்கள் கிடைக்கும்; ரோட்டரியன்கள் மற்றும் பிறருடைய பங்களிப்புகளை TRF உலகெங்கும் வாழ்க்கை களை மாற்றும் சேவைத் திட்டங்களாக மாற்றுகிறது.

ரோட்டரி நமக்கு எப்படி இருந்தாலும் சரி, உலகைப் பொறுத்தவரை, அது சாதிக்கும் பலன்களால்தான் அது அறியப்படும்'' என்றார் பால் ஹாரிஸ். உலகம் ரோட்டரியைக் கவனிக்கும்படி செய்த ஒற்றை அறக்கட்டளைத் திட்டம், இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் பரப்புரைதான்.

1979ல், ஃபிலிப்பைன்ஸில் 6 மில்லியன் குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு ஆற்றலை வழங்கும் ஒரு திட்டத்தை ரோட்டரி தொடங்கியது. இதன் வெற்றியால், 1985ல் பன்னாட்டு அளவில் போலியோ ப்ளஸ் தொடங்கப்பட்டது. வெவ்வேறு பகுதிகளில் TRFன் பணியைப்பற்றிப் பல வரலாறுகள் உள்ளன. ஆனால், கீழுள்ள வரலாறு மிக மிகச் சிறப்பானது.


வடக்கு இலங்கையில் கிளர்ச்சி ஏற்பட்டபோது, RI குழந்தைகளுக்கு வாய்வழி இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்தை அளிப்பதற்காக 4 நாள் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. TRFக்காகப் பங்களிப்புகளை நாடும் ரோட்டரி வல்லுனர்கள் அனைவரும் இதுபோன்ற கதைகளைச் சொல்லவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், மாற்றத்தை உருவாக்கும் கதைகளைக் கேட்டு எல்லாரும் நெகிழ்வார்கள்.

பங்களிக்க விரும்புகிற, ஆனால், தாங்கள் மனத்தில் வைத்திருக்கும் தொகை பெரிய அளவில் எந்த மாற்றத்தையும் கொண்டுவராது என்ற தவறான நம்பிக்கையால் பங்களிக்காமல் இருக்கிற ரோட்டரியன்களுக்கு நான் சொல்வது, சிறு துளி, பெருவெள்ளம். ரூ.42 நன்கொடையளித்தாலும் போதும், ஒரு குழந்தையை இளம்பிள்ளைவாதத் திலிருந்து காப்பாற்றலாம். ரூ.3500 அளித்தால் போதும், நீரால் பரவும் நோய்களைத் தடுப்பதற்காகத் தூய நீரை வழங்க அது உதவும்.

நண்பர்களே, நம் அறக்கட்டளைக்கு வழங்குவதை ஒரு கடமையாக எண்ணாதீர்கள், ஒரு சிறப்புரிமையாக எண்ணுங்கள்.

**குலாம் வாஹன்வதி**
TRF அறங்காவலர்

# Advertise in Rotary News




| Tariff | |
|---|---|
| Back cover | ₹1,00,000 |
| Inner Front Cover | ₹60,000 |
| Inner Back Cover | ₹60,000 |
| Inside Full Page | ₹30,000 |
| Half Page | ₹20,000 |
| **Specifications** | |
| 17 x 25 cm | Full page |
| 17 x 12 cm | Half page |

**Advertisements in colour only**

**Phone: 044 42145666**
**e-mail: rotarynews@rosaonline.org**

# Rotarians!

**Visiting Chennai for business?**

**Looking for a compact meeting hall?**



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

**₹2,500 for 2 hours**
**₹5,000 for 4 hours**
**₹1,000 for every additional hour**

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## District Wise TRF Contributions as on October 2021

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contributions |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 51,542 | 1,112 | 0 | 151,814 | 204,468 |
| 2982 | 27,046 | 5,633 | 0 | 2,449 | 35,128 |
| 3000 | 3,630 | 11 | 0 | 1,500 | 5,140 |
| 3011 | 6,322 | 3,572 | 0 | 81,879 | 91,774 |
| 3012 | 19,993 | 3,811 | 25,041 | 228,613 | 277,458 |
| 3020 | 31,924 | 5,828 | 19,596 | 4,620 | 61,968 |
| 3030 | 13,187 | 267 | 18,027 | 0 | 31,481 |
| 3040 | 18,924 | 250 | 0 | 20,328 | 39,502 |
| 3053 | 3,052 | 211 | 27 | 0 | 3,290 |
| 3054 | 2,902 | 766 | 0 | 166,680 | 170,348 |
| 3060 | 32,014 | 176 | 0 | 64,607 | 96,797 |
| 3070 | 8,395 | 0 | 0 | 27,600 | 35,995 |
| 3080 | 7,033 | 4,086 | 0 | 1,404 | 12,523 |
| 3090 | 13,498 | 0 | 28,000 | 0 | 41,498 |
| 3100 | 16,170 | 0 | 0 | 2,137 | 18,307 |
| 3110 | 5,120 | 0 | 0 | 0 | 5,120 |
| 3120 | 21,030 | 1,000 | 0 | 0 | 22,030 |
| 3131 | 167,336 | 26,206 | 0 | 187,001 | 380,543 |
| 3132 | 18,860 | 1,139 | 5,000 | 3,507 | 28,506 |
| 3141 | 224,282 | 1,876 | 64,865 | 181,499 | 472,521 |
| 3142 | 132,508 | 1,554 | 8,145 | 24 | 142,231 |
| 3150 | 12,721 | 6,087 | 0 | 18,120 | 36,928 |
| 3160 | 4,449 | 2,387 | 17,264 | 0 | 24,100 |
| 3170 | 26,454 | 8,504 | 1,710 | 29,297 | 65,964 |
| 3181 | 5,411 | 1,999 | 0 | 0 | 7,410 |
| 3182 | 8,762 | 5,225 | 0 | 0 | 13,986 |
| 3190 | 81,600 | 6,437 | 30,411 | 0 | 118,448 |
| 3201 | 37,266 | 51,967 | 0 | 203,255 | 292,488 |
| 3203 | 14,149 | 13,706 | 6,086 | 145,938 | 179,878 |
| 3204 | 1,091 | 412 | 0 | 1,036 | 2,539 |
| 3211 | 13,655 | 280 | 0 | 13,200 | 27,135 |
| 3212 | 9,268 | 1,099 | 1,036 | 588 | 11,991 |
| 3231 | 7,278 | 5,203 | 0 | 2,851 | 15,332 |
| 3232 | 32,932 | 47,321 | 16,601 | 208,433 | 305,287 |
| 3240 | 18,615 | 9,686 | 0 | 34,070 | 62,371 |
| 3250 | 4,098 | 2,335 | 1,036 | 12,746 | 20,215 |
| 3261 | 3,645 | 304 | 0 | 28,489 | 32,438 |
| 3262 | 1,670 | 277 | 0 | 250 | 2,197 |
| 3291 | 45,042 | 1,651 | 11,171 | 10,166 | 68,029 |
| **India Total** | **1,152,875** | **222,375** | **254,014** | **1,834,100** | **3,463,364** |
| 3220 Sri Lanka | 34,232 | 6,383 | 1,510 | 1,000 | 43,125 |
| 3271 Pakistan | 308 | 316 | 0 | 5,240 | 5,865 |
| 3272 Pakistan | 12,595 | 10,623 | 0 | 0 | 23,217 |
| 3281 Bangladesh | 12,173 | 4,121 | 13,000 | 16,399 | 45,693 |
| 3282 Bangladesh | 9,881 | 1,182 | 1,000 | 500 | 12,563 |
| 3292 Nepal | 29,440 | 4,898 | 0 | 62,704 | 97,041 |
| **South Asia Total** | **1,251,504** | **249,897** | **269,524** | **1,919,943** | **3,690,869** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office.

# நம் இதயங்களில் வாழ்கிறார் ரோட்டரி வீரர் சுஷில் குப்தா

கல்யாண் பானர்ஜி



நான் சந்தித்த மறக்கமுடியாத நபர் பற்றி எப்போதாவது கட்டுரை எழுத நேர்ந்தால், சுஷில் குப்தா என்ற ரோட்டேரியனை பற்றித்தான் எழுதுவேன். சுஷில் மறக்க முடியாதவர். ஏனெனில் அவர் பல நற்குணங்கள் கொண்ட ஒரு மனிதர். அவரைப் பற்றி நீங்கள் எந்த அளவு தெரிந்துகொண்டீர்களோ அந்த அளவு அவரை நீங்கள் விரும்பினீர்கள் அல்லது நேசித்தீர்கள் எனலாம்.

1980-களின் மத்தியில், அப்போதைய RID 301ன் PDG என்ற முறையில் சுஷில் குப்தாவை நான் முதல் முறையாகச் சந்தித்தேன். தில்லியில் நாடாளுமன்ற வளாகக் கட்டடத்தில் PRID சுதர்ஷன் அகர்வால் அலுவலகத்தில் அவரை சந்தித்தேன். அவரது வித்தியாசமான அணுகுமுறை, அவரின் சிறப்பு மற்றும் மாறாத புன்சிரிப்பு, அவரது செயல்பாடுகள், அவரது உற்சாகம் என் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. நாற்பது ஆண்டுகள் நாங்கள் இணைபிரியாத நண்பர்களாக இருந்தோம். அது தான் அவர் மீது நான் வைத்திருந்த அபிமானத்தை அதிகரித்தது.

*கோல்ஃப் விளையாட்டிலும் சுஷில் ஆர்வம் மிக்கவராக இருந்தார். தில்லி கோல்ஃப் சங்கத்தில் முக்கியப் பிரமுகர்கள் முதல் சாதாரண நபர்கள் வரை அனைவரும் அவரை தெரிந்துவைத்திருந்தனர்.*

உண்மையில் சுஷில் பலவித குணங்களைக் கொண்ட அற்புதமான மனிதர். அதீத மத நம்பிக்கை உள்ளவர் என்பதைத் தவிர ஒரு சிறந்த பிராண சிகிச்சை நிபுணர். (அதாவது டாக்டர்களால் கைவிடப்பட்ட நோயாளி களை, அவர்களைத் தொட்டு உணராமலேயே குணப்படுத்தும் ஒருவகை சிகிச்சைதான் பிராணிக் ஹீலர் எனப்படும் பிராண சிகிச்சை. இந்தியாவில் பண்டையக் காலத்தில் ரிஷிகள் இந்த முறையைத்தான் பின்பற்றினார்கள். பிலிப்பின்ஸ் நாட்டின் மணிலாவிலும் இந்த சிகிச்சை முறை பிரபலமானது.) அவரை எனது குருவாகவே நான் கருதுகிறேன். பிராண சிகிச்சை மீது அவர் நம்பிக்கை வைத்தது மட்டுமல்லாமல் அதை முழுமையாகக் கற்றுக்கொண்டு, சில மந்திர சக்திகள் மூலமும், கைகளை அசைத்தும் நோயாளிகளை குணப்படுத்தி வந்தார்.



PRID *சுஷில் குப்தா மற்றும்* PRIP *கல்யாண் பானர்ஜீ.*

யாருக்காவது முதுகுவலி அல்லது தலைவலி இருந்தால் அவருக்கு சிகிச்சை அளிப்பார். பின்னர் அவர்களிடம் இப்போது எப்படி இருக்கிறது என்று கேட்பார். நிச்சயமாக சிகிச்சைக்குப் பின் அவர்களுக்கு வலி குறைந்திருக்கும்.

கோல்ஃப் விளையாட்டிலும் சுஷில் ஆர்வம் மிக்கவராக இருந்தார். தில்லி கோல்ஃப் சங்கத்தில் முக்கியப் பிரமுகர்கள் முதல் சாதாரண நபர்கள் வரை அனைவரும் அவரை தெரிந்துவைத்திருந்தனர்.

பயணம் செய்வது அவருக்கு பிடித்தமானது. இமயமலையில் கடுமையான பகுதிகளில் மலையேற்றம் செய்வார். திபெத் செல்வதற்காக சீனாவின் அனுமதியுடன் மானஸரோவருக்கு அவர் மேற்கொண்ட பயணம் எனக்கு நினைவுக்கு வருகிறது. அவரது மகள் குஞ்சன், என் மகள், ரூமா அனைவரும் திபெத்திய எல்லைக்கு அப்பால் கூடாரத்தில் முகாமிட்டிருந்தனர்.

சுஷில் நண்பர்களை உருவாக்கு வதில் வல்லவர். தில்லி, கொல்கத்தா, மும்பையில் ஹயாத் ரீஜென்ஸி ஹோட்டல்களை நிறுவி நடத்தி வந்தார். அதன் மூலம் அவருக்கு தொடர்புகள் பல மடங்கு அதிகரித்தன. அவர் தொழிலதிபராக இருந்தபோதிலும், அரசு தொடர்பு களையோ அல்லது சலுகைகளையோ எதிர்பார்க்காதவர். சட்டத்திற்கு புறம்பாக எதையும் செய்யமாட்டார். ஆனாலும், தில்லியில் உள்ள அதிகார வட்டங்கள் அவர் மீது தனி மரியாதை வைத்திருந்தன. இது எனக்கு வியப்பை அளித்தது. சமீபகாலத்தில் அவர் தில்லியில் 6 நட்சத்திர அந்தஸ்துள்ள 500 அறைகள் கொண்ட J W மாரியட் ஹோட்டலை நிறுவினார். ஹோட்டலை கட்டுவதற்கான அனுமதி பெறுவதிலிருந்து தீப்பாதுகாப்பு, தரமான உணவு வசதி, பர்னிச்சர், பாதுகாப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு அனுமதி பெற கடுமையாக உழைத்தார். “அரசு துறைகளிலிருந்து அனுமதி பெறுவதற்காக நான் ஒரு போதும் சட்டப்படியான தொகைக்கு மேலாக செலவழிக்கவில்லை” என்று என்னிடம் பெருமிதத்துடன் சொன்னார். தமது மகன் சந்தீப் மற்றும் தொழில் கூட்டாளிகளின் உதவியுடன் ஹோட்டல்களை நிர்வகித்து வந்தார். மிகுந்த அன்பு மற்றும் அக்கறையுடன் ஹோட்டல்களை நடத்தினார். பிரதமர்



*பிரதமர் மற்றும் மன்னர்களின் விருப்பமான விருந்தாளிகளில் அவரும் ஒருவராக இருந்தார். அவரது சேவையை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.*

மற்றும் மன்னர்களின் விருப்பமான விருந்தாளிகளில் அவரும் ஒருவராக இருந்தார். அவரது சேவையை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு பத்மஷ்ஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

ரோட்டரி அவர் மிகவும் நேசித்த அமைப்பாகும். அவர் போல் ரோட்டரி மீது முழு ஈடுபாடு கொண்டு செயல்பட்டவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். நீர் நிர்வாகம், வறட்சி மற்றும் வெள்ளக்காலங்களில் தடுப்பணைகள் கட்டி நீரைத் தேக்கிவைப்பது, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவது மழைநீர் சேகரிப்பு என பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து செயல்படுத்தியவர். வறட்சி காலத்தில் ராஜஸ்தான் உள்ளிட்ட பகுதிகளில் நிதி திரட்டி நீர் ஆதாரங்களை பெருக்கியவர். மாசுபடுதலை கட்டுப்படுத்து தல், மக்கள் பயன்பாட்டுக்காக கழிப்பறைகளை கட்டுதல் மற்றும் சுனிதா நாராயணன் அல்லது ராஜேந்திர சிங் அல்லது டாக்டர் பிந்தேஸ்வர் பிரசாத் ஆகியோருடன் இணைந்து கட்ச் பகுதியில் பள்ளிகள் கட்டுதல், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித்தருவது ஒடிசா, சென்னை போன்ற இடங்களில் புயல் மற்றும் சுனாமி பாதித்த கடலோரப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை அவர் விரும்பி செய்தார். ஒரு சிறந்த ஹோட்டல் நிர்வாகி, அர்ப்பணிப்பு உணர்வுள்ள சமூக சேவகர், சிறந்த கோல்ஃப் விளையாட்டு வீரர், மலையேற்றத்தில் ஆர்வம் கொண்டவர், ரோட்டரி சேவைக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர், அன்பான குடும்பத் தலைவர் என்பதற்கு மேலாக மறக்கமுடியாத நண்பராகவும் அவர் இருந்தார்.

2015–16ம் ஆண்டுகளில் அவர் ரோட்டரியின் இயக்குநராகவும், TRF அறங்காவலராகவும் பணியாற்றினார். ரோட்டேரியன்களும் நண்பர்களும் அவரை உலக அளவில் ரோட்டரிக்கு சேவை செய்ய வருமாறு அவரை வலியுறுத்தினர். இந்த நிலையில் அவரது புதிய J W மாரியட், தில்லி விமான நிலையம் அருகே செயல்பாட்டுக்கு வந்தது. அப்போது அவருக்கு சேவை செய்வதற்கு நேரமும் இருந்தது. அவருக்கு பெரும்பாலானவர்களின் ஆதரவு இருந்ததால் 2020–2021ம் ஆண்டின் RI தலைவர் பதவி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த உயரிய பதவிக்கு போட்டியிட தேர்ந்தெடுக்கப் பட்ட நான்காவது இந்தியர் சுஷில் குப்தா.

மூன்று மாத காத்திருப்புக்குப் பின், வினிதாவுடன் சேர்ந்து சுஷில் ரோட்டரி மாவட்டச் சங்கங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலைவர்களையும் உறுப்பினர்களையும் சந்தித்து வந்தார். முன்னாள் தலைவர் ராஜாவுடன் (ராஜேந்திர சாபூ) இணைந்து தனது பதவிக்காலத்துக்கான திட்டங்களை வகுத்து செயல்படத் தொடங்கினார். பணி தொடர்பான தனது பயணங் களின் போது சில சமயங்களில் தமது பேச்சில் தடுமாற்றம் இருப்பதை கவனித்தார். பேச்சின் முடிவில் குழப்பம் அடைந்தார்.




*2012யில் தில்லியில் நடைபெற்ற ஒரு போலியோ மாநாட்டில் PRID குப்தாவுடன் PRIP பானர்ஜி மற்றும் PRID ஜாக்ஸன் சே ஆகியோர்.*

மேலும் அடிக்கடி சோர்வடைந்தார். இதையடுத்து RID 3011-ன் DGE Dr சுப்பிரமணியன் உள்ளிட்ட ரோட்டரி மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனை கலந்தார். அவருக்கு நரம்புக் கோளாறு இருப்பது போலத் தோன்றியது. எனவே அவருக்கு முழு உடல் பரிசோதனை தேவை என மருத்துவர்கள் ஆலோசனை கூறியதை அடுத்து மனைவி வினிதாவுடன் அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் நகருக்குச் சென்று அங்குள்ள மருத்துவ மனையில் ஆய்வு செய்துகொண்டார். அப்போது அவர் நரம்பியல் நோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. அதற்கு என்ன தீர்வு என்றும் தெரியவில்லை. இது ஒரு பரம்பரை நோயாக இருக்கலாம் என்றும் கருதப்பட்டது. எனினும் மருந்து மற்றும் மருத்துவச் சிகிச்சைகள் மூலம் நோயின் தீவிரத்தை குறைக்க முடிந்தது.

பின்னர் இந்தியா திரும்பியதும், தம்மால் ரோட்டரி பொறுப்புகளை சரிவர நிறைவேற்ற முடியாத காரணத்தினால் வருத்தம் தெரிவிப் பதாகவும், ரோட்டரி தலைவர் பதவி வேட்பாளர் என்ற நிலையிலிருந்து விலகுவதாகவும் தெரிவித்தார்.

சுஷில் வீட்டிலேயே தங்கி யிருந்தார். ஆரம்ப கட்டத்தில் வீட்டிற்குள்ளேயே நடக்க முடிந்தது. பின்னர் சக்கர நாற்காலியில் அமர்ந்த படியே நடமாடிக் கொண்டிருந்தார். இறுதியில் படுக்கையிலேயே இருக்கும் நிலை ஏற்பட்டது.

தனக்கு என்ன நோய் என்பதை யும், அதன் விளைவுகள் என்ன என்பதையும் சுஷில் நன்கு அறிந் திருந்தார். ஆனாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. அவரது நினைவாற்றல், செயல்பாடு, தொடர்புகள் நீண்டகாலம் இருந்தது. அவர், தனக்குத் தேவையானதை எழுதிக்காட்டினார் அல்லது ஐ.பேட் (IPad) மூலம் தெரிவித்தார். அவரது குடும்பத்தினரும், அவருக்காக நியமிக்கப்பட்ட உதவியாளரும் நன்றாகவே கவனித்துக் கொண்டனர். மனைவி வினிதாவும் 24 மணிநேரமும் அவர் அருகிலேயே இருந்தார். சில நேரங்களில் பார்வையாளர்களின் வருகை அதிகரித்தது. பின்னர் அதுவும் படிப்படியாகக் குறைந்து கடைசியில் நின்றுபோனது.

சுஷில் கடைசி வரை ஒரு செயல் வீரராகவே இருந்தார். வினிதா அவருக்கு பிளாரன்ஸ் நைட்டிங்கேள் போன்று துணையாக இருந்தார். அவர் ஒருபோதும் நம்பிக்கையை விட்டுவிடவில்லை. கடைசி வரை போராடினார். இத்தகைய மனிதரை பற்றி ஒருவர் என்ன சொல்ல முடியும்? அப்படியானால் அவரது விதி என்ன?

இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு, பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்க தளபதியாக இருந்த ஜெனரல் டக்ளஸ் மெக்ஆர்தர் இப்படிச் சொன்னார்: பழைய வீரர்கள் ஒருபோதும் சாவதில்லை. அவர்கள் மங்கிப்போய் விடுவார்கள் என்றார்.


ஆனால், சுஷில் என்னும் ரோட்டரி வீரர், மங்கிப் போய்விடவில்லை. அவர் இன்றும், என்றும் நம் இதயங்களில் வாழ்கிறார்.

என் நண்பர் சுஷில் குப்தா ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார். மறைந்தும் மறையாமல் வாழ்கிறார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத் and from Sushil Gupta's archives.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# சுஷில் குப்தா... சில நினைவுகள்



PRID சுஷில் குப்தா அவர் மனைவி வினிதாவுடன்.



PRID பரத் பாண்ட்யாவுடன்.



PRID குப்தா மற்றும் வினிதா, PRIP கேரி ஹுவாங் மற்றும் கொரினாவுடன்.



PRIP கல்யாண் பானர்ஜியுடன்.



PRIP KR ரவீந்திரன் மற்றும் வானதியுடன் PRID குப்தா.



PRID குப்தா மற்றும் PRIP ராஜேந்திர சாபூ 2015 இன்டர்நேஷனல் அசம்பிளியில் (IA).



PRID PT பிரபாகருடன்.







சோனல் சங்வியுடன் PRID குப்தா 2019 IAயில் நடனம் ஆடுகிறார்.

1. ராஜஸ்தானில் தடுப்பு அணை துவக்க விழாவில் PRIP பானர்ஜி மற்றும் PDG அஷோக் குப்தாவுடன் PRID குப்தா. 2. PRID மனோஜ் தேசாய், PRIP ஜான் ஜெர்ம், RI தலைவர் சேகர் மேத்தா, PRID குப்தா மற்றும் PRID Y P தாஸ் துபாய் இன்ஸ்டிட்யூட்டில். 3. PRIDs பாண்ட்யா, C பாஸ்கர், குப்தா, TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் PRID கமல் சங்வி. 4. முன்னாள் தில்லி முதலமைச்சர் ஷீலா திக்ஷித் அவர்களுடன் (இடதிலிருந்து) PRIDs குப்தா, Y P தாஸ், அஷோக் மகாஜன், PRIP பானர்ஜி மற்றும் பினோதா. 5. PRID குப்தா மற்றும் வினிதா, தில்லியில் ஒரு விழாவில் PRIP சாபூ, அறங்காவலர் வஹன்வதி, PRIP பானர்ஜி, PRID தேசாய் மற்றும் PRID பாஸ்கர் ஆகியோருடன். 6. **இடதிலிருந்து:** INPPC தலைவர் தீபக் கபூர், PRIP பானர்ஜி, பாகிஸ்தான் போலியோ குழு தலைவர் அஜீஸ் மேமன், PRID குப்தா மற்றும் PRIP சாபூ.










4



5





6

*படங்கள்: ரஷீதா பகத் மற்றும் சிறப்பு ஏற்பாடு.*

*வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்*

# இந்தியாவின் "வெண்மைப் புரட்சி" நாயகன்
# வர்கீஸ் குரியன்

ரஷீதா பகத்

நவம்பர் 26, 1921ம் ஆண்டு பிறந்த இந்தியாவின் வெண்மைப் புரட்சி நாயகன் வர்கீஸ் குரியனின் நூற்றாண்டு பிறந்தநாளை நாம் கொண்டாடும் வேளையில், குஜராத் மாநிலம், ஆனந்தில் உள்ள அமுல் தலைமையகத்தில் தி ஹிந்து பிஸினஸ்லைன் பத்திரிகைக்காக (நான் அப்போது அங்கு பணியிலிருந்தேன்) 1998 மற்றும் 1999ம் ஆண்டுகளில் அவருடன் நான் நடத்திய இரண்டு நேர்காணல்களை நினைத்துப் பார்க்கிறேன். அவரது புத்திசாலித் தனம், நகைச்சுவை உணர்வுடன்கூடிய பேச்சு, அதிகாரத்தை செயல்படுத்தும் திறன் ஆகியவற்றை கண்டு நான் திகைத்துப் போனேன். தனியார் நிறுவனமான பார்ஸி போல்ஸன், பன்னாட்டு நிறவனமான நெஸ்லே போன்றவற்றால் ஏற்பட்ட சவாலை ஏற்று சாதனை படைத்தவர் குரியன்.

அரசியல்வாதிகளிடமும், அதிகாரிகளிடமும் கடுமையாகவும் அதேநேரத்தில் விவசாயிகளிடம் அன்புடனும், நட்புறவுடனும் மென்மையாகவும் நடந்துகொண்ட அவர், தேசிய பால்வள வாரியத்துக்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைவராக வருவதை விரும்பவில்லை. அதை எதிர்த்து கடுமையாகப் போராடினார்.

அமுல் நிறுவனத்தில் தனக்கு பிறகு யார் அதிகாரத்துக்கு வருவது என்பது தொடர்பாக அரசுடன் நீண்ட போராட்டம் நடத்தி அதில் வெற்றிகண்டார். அதன் பின்னர் 1998ம் ஆண்டு அவரை நேர்காணல் செய்யும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நான் அவருடன் பேசிக் கொண்டிருந்த போது விவசாயிகள் ஒரு குழுவாக அவரை பார்க்க வந்திருந்தனர். அவர்களை உள்ளவர அனுமதித்த குரியன் என்னிடம், நீங்கள் தவறாக எண்ணமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இந்த விவசாயிகள் எனக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக நீண்ட தொலைவிலிருந்து வந்திருக்கின்றனர். இன்றே அவர்கள் தங்கள் கிராமத்துக்கு திரும்பிச் செல்லவேண்டும் என்றார். இதையடுத்து பால் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள், அவரை கடவுளாக நினைத்து அவரது காலை தொட்டு வணங்கியதுடன், அவருக்கு தலைப்பாகை அணிவித்து கையில் வாள் கொடுத்து மகிழ்ந்தனர். அந்த சமயத்தில் அவருடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.


இதைத் தொடர்ந்து அவர் விவசாயிகளிடம் சுமார் பத்து நிமிடங்கள் நகைச்சுவையுடன் பேசிக் கொண்டிருந்தார். அதன் பிறகு நேர்காணலை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார். அப்போது அவருக்கு வயது 76 இருக்கும். அவரது கூர்மையான அறிவும், மென்மையான, தாராளமான மனதும் என் மனதில் ஆழப்பதிந்தது. அவரைப் பற்றி அறிந்தவர்கள், அவருடன் பணியாற்றியவர்கள் அவரது கூர்மையான பேச்சையும், நகைச் சுவை உணர்வையும் நினைவுகூர்வார்கள். அவரது தாராள மனப்பான்மையும், நம்பகத் தன்மையும் யாராலும் குறைகூற முடியாதது.

அவர் தனது வாழ்க்கை கதையைச்



வர்கீஸ் குரியன்

ரஷீதா பகத்



சொல்ல விரும்பினார். அவர், தனது வேலையை இழந்திருந்தபோது நான் சந்தித்தேன். டிஸ்கோவில் (இப்போது டாடா ஸ்டீல்) வேலை பார்த்தது குறித்து விவரித்தார். நான் டாடா நிறுவனத்தில் சிறந்த பயிற்சியாளராக இருந்தேன். அந்த நிறுவனத்தின் உயர் பதவியில் எனது மாமா (ஜான் மத்தாய்) இருப்பது அவர்களுக்குத் தெரியவந்தது. நான் மனமகிழ் மன்றத்துக்குச் சென்றால் அங்கு பெண்கள் என்னை சுற்றிச்சுற்றி வருவார்கள். எனது மேற்பார்வையாளர் என்னிடம் இரவு விருந்துக்கு போகலாமா என்று கேட்பார். எனவே நான் அங்கிருந்து வெளியேற முற்பட்டேன் என்றார்.

அங்கிருந்து வெளியேறிய பின் இந்திய அரசின் உதவித் தொகை மூலம் பிட்ஸ்பர்க்கில் பால் வளம் தொடர்பான பொறியல் படிக்கச் சென்றார். உதவித் தொகை பெறுவது எளிதாக இருந்ததா? என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அளித்த பதில் எனக்கு வியப்பை ஏற்படுத்தியது.

தேர்வுக்குழுவுக்கு இந்திய தலைமை நீதிபதிதான் தலைவராக இருந்தார். அவர் என்னிடம், Pasteurisation என்றால் என்ன? என்று கேட்டார். அதற்கு நான் 'பதப்படுத்துதல், பாலுடன் தொடர்புடையது' என்றேன். இதையடுத்து சரியான பதில் நீ தேர்வு செய்யப்பட்டாய் என்று அவர் கூறினார். இதற்கு காரணம் எந்த ஒரு பொறியாளருக்கும் இந்த சொல்லுக்கு அர்த்தம் தெரியவில்லலை. மேலும், இந்தியாவில் பால் பதப்படுத்தும் ஆலை எதுவும் அப்போது இல்லை. 'உலோகவியல்' தொடர்பாக ஏதேனும் ஒரு பிரிவு எனக்கு தரப்படுமா என்று கேட்டதற்கு, இதுதான். வேறு எதுவும் கேட்கக் கூடாது என்றார்.

ஆனால் குரியன், அரசாங்கத்தை ஏமாற்றி உலோகவியல் மற்றும் அணுசக்தி இயற்பியலில் முதுகலை படித்தார். அந்த சமயத்தில் நிலத்தடியில் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. இதையடுத்து அணுசக்தி விஞ்ஞானியாக அவர் விரும்பினார். ஆனால், விதி யாரை விட்டது? அப்போது இருந்த கீழ்நிலை செயலாளர் என்னை மும்பை அருகே ஆனந்த் என்ற இடத்தில் ரூ.350 மாத

## தாய்லாந்துக்கு பறக்கும் எருமைகள்

*குரியனின் கதை சொல்லும் திறமை ஆச்சரியமானது. நான் அவரை சந்தித்த நேரத்தில், தாய்லாந்து மன்னர் ஆட்சிக்கு வந்த 50வது ஆண்டை கொண்டாடும் வகையில் அவருக்கு தேசிய பால்வள வாரியம் 50 எருமைகள் பரிசளிக்க திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றை எப்படி தாய்லாந்துக்கு கொண்டு செல்வது என்பது குறித்து பத்திரிகைகள் பல்வேறு தகவல்களை வெளியிட்டு வந்தன. குரியனின் வாரிசான அமிர்தா படேல், மாடு மேய்க்கும் பெண் போல உடையணிந்து உடன் செல்வாரா என்றெல்லாம் எழுதப்பட்டன. அது குறித்து அம்ரிதாவிடம் கேட்டபோது, ஆமாம். டாக்டர் குரியன், நான் அணிந்துகொள்வதற்கு நிறைய வெள்ளி நகைகளைத் தருவதாகச் சொன்னார். எனவே நானும் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றார்.*

*எருமைகளை முதலில் கப்பலில் அனுப்ப அவர் முடிவு செய்தார். ஆனால், கப்பல் கிடைக்கவில்லை. எனவே ஏர் இந்தியா நிறுவன நிர்வாக இயக்குநரிடம் பேசி தனி விமானம் வேண்டும் என்றார். உடனே அவர் சொன்னார், "நீங்கள் எருமைகளுடன் பறக்கறீர்கள். அதற்கு நிறைய செலவாகும்" என்றார். ஆனாலும் குரியன் ஒப்புக்கொண்டதால் அவருக்கு வேறு வழியில்லை.*

*குரியன் மேலும், எருமைகள் முதல் வகுப்பில்தான் பயணம் செய்யும் என்பது உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். விமானத்தினுள் ஏற்படும் நாற்றம் பற்றி ஏர் இந்தியா நிறுவனத்தினர் கவலைப்படுவார்கள். ஆனால், நாம் மாடுகளுக்கு அளவுக்கு அதிகமாக உணவளிக்கமாட்டோம், குடிப்பதற்கு எதுவும் கொடுக்க மாட்டோம் என்பது அவர்களுக்குத் தெரியாது. மேலும் அவற்றை மயக்கமடையச் செய்து விடுவோம். இரண்டு எருமைகள் சண்டையிடத் தொடங்கினால் விமானம் நொறுங்கிப்போகும் என்றார்.*

*விலை பற்றி நான் கருத்து தெரிவித்தபோது, அவர், உங்களுக்கு வாரியத்தின் லாபம் பற்றி தெரியும் என்று நினைக்கிறேன். ரூ.50 கோடியை மறைத்தாலும் லாபம் ரூ.117 கோடி. மேலும் நான் எந்த வரியும் செலுத்துவதில்லை. இது சட்டத்தில் உள்ளது. நிச்சயமாக அந்த சட்டத்தை எழுதியது நான்தான் என்றார்.*

சம்பளத்தில் முதல்நிலை அதிகாரியாக மாடுகளை பராமரிக்கும் பணிக்கு அனுப்பினார். TISCOவில் இது போல் இரண்டு பங்கு சம்பளத்தில் பணியாற்றியதை அவர் கூறியைதை யாரும் ஏற்கத் தயாராக இல்லை. ஒப்பந்தத்தில் இருந்ததால் அவருக்கு வேறுவழியில்லை.

இதுதான் உண்மை. அமெரிக்காவில் படித்த, புத்திசாலித்தனமும், துடிப்பும் இருந்த குரியனுக்கு அந்தவேலை பிடிக்கவே இல்லை. இந்த நிலையில் காந்தியவாதியான திருபுவன்தாஸ் படேல் என்பவர், பன்னாட்டு நிறுவனங்களை எடுத்து கூட்டுறவு பால் சங்கத்தை நடத்த முடியாமல் திணறினார். இதையறிந்த குரியன், அதை சவாலாக ஏற்று பணியாற்றத் தொடங்கினார். பால் கூட்டுறவு சங்கத்தை கொஞ்சம் கொஞ்சமாக வளப்படுத்தி, பால் பதப்படுத்ததுதலை அதிகரித்து, கூட்டுறவு சங்கம் சிறப்பாக செயல்படவும், விவசாயிகள் முன்னேறவும் உதவினார்.

ஆனந்த் மில்க் யூனியன் லிமிடெட் என்கிற அமுல் நிறுவனம் அபரிமிதமான வளர்ச்சி கண்டதை அறிந்த அப்போதைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி, நாடு முழுவதும் பால் உற்பத்தியை பெருக்க உதவுமாறு குரியனை கேட்டுக் கொண்டார். உடனே குரியன் சில நிபந்தனைகளை விதித்தார். பால் வள வாரியத்தின் தலைமையகம் ஆனந்த், தில்லியில் உள்ள அதிகாரிகளின் தலையீடு இல்லாமல் செயல்பட அனுமதிக்க வேண்டும் என்று கூறினார். அவரது நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்

## *தாய்லாந்து மன்னருடன் சந்திப்பு*

*தாய்லாந்து மன்னர் என்னைச் சந்திக்க விரும்புவதாக அந்த நாட்டுக்கான இந்திய தூதர் என்னிடம் தெரிவித்தார். மேலும் இங்கு வரும் அமைச்சர்கள் பலரும் மன்னரை சந்திக்க நேரம் கேட்கிறார்கள். ஆனால், என்னால் அது முடியவில்லை. உங்களை மன்னர் சந்திக்க விரும்புவதன் சிறப்பு என்ன என்று கேட்டார். நான் அவரிடம் “வேறு என்ன? பசுக்கள்தான்” என்றேன்.*

**தேசிய பால்வள வாரியம் இலங்கையுடன் கூட்டு வர்த்தகம் செய்வது தொடர்பாக எம்,என்.சி. தலைவருடன் நடந்த சந்திப்பு:** *பன்னாட்டு நிறுவனத்தலைவரைச் சந்திக்க நான் தில்லிக்கு செல்லமாட்டேன் என்று நான் அவரிடம் கூறினேன். எனவே அவர் இங்கு வந்தார். இங்கு நமக்கு என்ன நடக்கும்? என்றார். அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை. எனக்கு நேரம் முக்கியம் என்றேன். எல்லா இந்தியர்களும் விற்பனைக்கல்ல என்பதை அந்த வெள்ளைக்காரர் புரிந்துகொண்டிருப்பார். இந்தியாவில் சிலரை விலைக்கு வாங்கமுடியாது. அவர்கள் இந்தியாவின் வர்த்தக நலன்களை பாதுகாப்பார்கள்.*

**பாகிஸ்தான் பால் உற்பத்தியை பெருக்க உதவுதல்:** *பால் உற்பத்தியில் அவர்கள் தன்னிறைவு பெற விரும்பினார்கள். நான் அவர்களிடம், நீங்கள் தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் என்ற பெயரில் பசுக்களை தின்றுவிட்டீர்கள். உங்களுக்கு மூளையே இல்லை. நான் ஒரு கிறிஸ்துவன். பசுக்கள் மீது தனிப்பட்ட முறையில் எனக்கு அன்பு எதுவும் கிடையாது. ஆனால், நல்ல பசுக்கள் இறையாவதற்கு நான் உடன்படமாட்டேன் என்று தெரிவித்து விட்டேன்.*

**தேசிய பால்வள வாரியத்தின் தலைவராக அம்ரிதா படேலுக்கு சிறந்த தகுதி:** *அவருக்கான சிறந்த தகுதிகளில் ஒன்று அவர் குரியனால் வளர்க்கப்பட்டவர்.*

**விவசாயிகள்:** *விவசாயிகளுக்கு பேரம் பேசும் திறன் இல்லை. எந்தவிலை நிர்ணயித்தாலும் விவசாயி பாலை விற்றுத்தான் ஆக வேண்டும். அதனால்தான் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் உற்பத்தி பொருள்களைச் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றுக்கு தீர்வு இதுதான். பால் பண்ணை விவசாயிகளுக்குச் சொந்தமானதாக இருக்க வேண்டும். அதனால்தான் சர்தார் படேல், “பால்சனை தூக்கி எறியுங்கள்” என்றார்.*

**பாகிஸ்தானுக்கு பால் ஏற்றுமதி:** *ஏன் முடியாது? என்னால் தில்லியிலிருந்து கொல்கத்தாவுக்கு பால் அனுப்ப முடியும் என்றால், தில்லியிலிருந்து லாகூருக்கு அனுப்ப முடியாதா? அதற்கு லஞ்சம் கொடுத்தால் போதுமானது!*

பட்டன. அதன்பின் உள்ள வரலாறு அனைவரும் அறிந்ததே.


### அதிகாரிகளுக்கு அவமதிப்பு

தேசிய பால்வள வாரியத்தின் தலைவராக தமக்குப் பிறகு ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக குரியன் இந்திய அரசுடன் நீண்டபோராட்டம் நடத்தினார். அந்த சமயத்தில் பால்வள வாரியத்தை தங்கள் கட்டுப் பாட்டில் கொண்டுவர அதிகாரிகள் காத்திருந்தனர். அப்போது பால்வள வாரியத்தின் விற்று முதல் ரூ.300 கோடியாக இருந்தது. நான் அவரை சந்தித்தபோது அவரது வளர்ப்பான அம்ரிதா படேல், அவருக்குப் பின் அதிகாரத்துக்கு வருவார் என்று அறிவிக்கப்பட்டார். இது அவருக்கு மகிழ்ச்சியை அளித்தது.

உதாரணத்திற்கு, இப்போது நான் இறந்துவிடுகிறேன் என்று வைத்துக் கொள்வோம். உடனே துறைச் செயலாளர் அமைச்சரிடம் சென்று ‘ஒரு வருத்தமான செய்தி, குரியன் இறந்து விட்டார். நான் அது தொடர்பான செய்தியை தந்தியாக தயாரித்துள்ளேன். இதனிடையே நான் கூடுதல் பொறுப்பு ஏற்கிறேன்’ என்று கூறியிருப்பார். அது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் தலையீட்டுக்கு வழிவகுத்திருக்கும் என்றார் குரியன்.

அதிகாரிகளுக்கு குரியன் செய்தது பிடிக்கவில்லை. அவரது துணிச்சலான செயலையும் வெறுத்தார்கள். ஏன் இந்திய அரசாங்கத்தை மிரட்டும் வகையில் அவர் செயல்பட்டதாகவும் கதைசொன்னார்கள். சில டன்கள் நெய் தேவைப்படுவதாக நேபாள மன்னர் வீரேந்திரா இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தது தொடர்பாக ஒரு கதையை வர்த்தகத் துறையின் முன்னாள் செயலர் ஒருவர் என்னிடம் கூறினார். இது இரண்டு அரசுகளுக்கு இடையிலான விவகாரம் என்ற போதிலும், தில்லியில் உள்ள அதிகாரிகள், இந்தியாவின் நெய் உற்பத்தி மன்னரிடம் அனுமதி பெற பிரம்மபயத்தனம் செய்யவேண்டியிருந்தது என்று கோபத்துடன் கூறினார்.

இந்தியாவின் பால்கூட்டுறவு இயக்கத்தையும், கூட்டுறவு சங்கங் களையும் பால் உற்பத்தியாளர்களான

விவசாயிகளிடமிருந்து அதிகாரிகள் பறித்துவிடாமலிருக்க குரியன் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டு வந்தார். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்றாலே அவருக்கு அலர்ஜியாக இருந்ததால் ஒரு முறை ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமை வகித்த கேரள கூட்டமைப்பிற்கு தேசிய பால்வள வாரியத்திடமிருந்து நிதி வழங்க மறுத்துவிட்டார்.

டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் அம்ரிதா படேல், குரியன் வாரிசாக நியமிக்கப்பட்ட பிறகு நான் அவரை நேர்காணல் செய்தேன். தேசிய பால்வள வாரியத்தின் தலைவராக அவர் 33 ஆண்டுகள் பணியாற்றினார். அவர் என்னை மகிழ்ச்சியுடன் வரவேற்றார். எனக்கு இப்போது நேரம் இருக்கிறது. நான் எனது வேலையை இழந்துவிட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒவ்வொரு முறை நான் வாயைத் திறக்கும்போதும் சிக்கலில் மாட்டிக் கொள்கிறேன். அதனால் என்ன பரவாயில்லை என்றார்.

அவர் வாரிசுப் போராட்டத்தில் வெற்றிபெற்றது தொடர்பாக எனது முதல் கேள்வி அமைந்தது. அதற்கு அவர் பெருங்குரலுடன் சிரித்துக் கொண்டே பதில் கூறினார். எனக்குப் பிறகு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை இந்திய அரசு புத்தி சாலித்தனத்துடன் தேர்ந்தெடுத்திருந்தால், அவர் அமுல் வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார் என்று நினைக்கிறீர்களா? எங்களிடம் படேல் இருக்கிறார். (அம்ரிதா முன்னாள் நிதியமைச்சர் H M படேலின் மகள்) படேல் ராஜ்தான் எங்களுக்கு வேண்டும் என்று படேல்கள் கூறியிருப்பார்கள். அமுல் தலைவர் என்னிடம் வந்து, அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி யார்? அவரை நாங்கள் கவனித்துக்கொள்வோம் என்றார். நான் அவரிடம், அதற்குத் தேவை இருக்காது, இது அவர்களின் கடைசி முயற்சியாகத்தான் இருக்கும் என்றேன்.

அம்ரிதா திறமையாகவும், நிர்வாகத் திறனுடனும், ஒருங்கிணைப்புடனும் செயல்பட்டதால் அனைவராலும் பாராட்டப்பட்டார். எங்களிடம் பணம் அதிகம் இருப்பது உங்களுக்குத் தெரியும். பணம் திருடர்களை ஈர்த்து விடும் என்றார் குரியன்.


நான் அதே நாளில் அம்ரிதா படேலையும் நேர்காணல் கண்டேன். தமது குரு, வழிகாட்டி பற்றி பேசும் போது மரியாதையாகவே பேசினார். தமது நிர்வாகச் செயல்பாடுகள் குரியனின் செயல்பாடுகளிலிருந்து வித்தியாசமானது என்பதையும் தெளிவுபடுத்தினார். ஒருவேளை அதுவே சில சமயங்களில் இருவரும் பகிரங்கமாக சண்டையிட்டுக் கொள்ள காரணமாக இருக்கலாம்.

துரதிருஷ்டவசமாக குரியனின் பிற்கால வாழ்க்கையில் நிழல் படிந்தது. அமுல் மற்றும் தேசிய பால்வள வாரியத்தை நிறுவி கட்டமைத்த குரியன் போன்றவர்கள் தலைமைப் பதவியில் நீண்டநாள் இருந்தால் அவர்களுக்கு என்ன வரவேற்பு இருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. 2006ம் ஆண்டு குஜராத் பால் கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு குரியன் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானமும் கொண்டுவரப்பட்டது. அதற்கு அவர், நான் இதுபோன்று நடத்தப்படுவதற்கு தகுதியானவனா என மனம் நொந்து கூறினார். 2012ம் ஆண்டு அவர் காலமானார்.

ஆனால், அவர் இந்திய விவசாயிகளுக்குச் செய்த நன்மைகளை யாராலும் பறித்துவிடமுடியாது. இருள் சூழ்ந்த நேரங்களின் போதும், தாக்குதலுக்கு ஆளானபோதிலும் எனக்கு பக்கபலமாகவும், ஆதரவாகவும் இருந்தது இந்திய விவசாயிகள் தான். இந்திய விவசாயிகளுடன் இணைந்து செயலாற்றியது எனது அதிர்ஷ்டம் என்று குரியன் தெரிவித்துள்ளார்.

பால் கொள்முதல் மற்றும் சந்தைப் படுத்துதலில் புரட்சியை ஏற்படுத்தி, விலைமதிப்பற்ற பொருள்களை உற்பத்தி செய்பவர்களுக்கு அதற்கான வெகுமதியை பெறுவதற்காக போராடி அதில் வெற்றியும் கண்ட சாதனையாளர் குரியன்.

1970ல் மும்பையில் பால் பற்றாக் குறை பொருளாக இருந்து என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா? அடுத்த முறை நீங்கள் சூப்பர் மார்க்கெட்டுக்குள் நுழைந்து பல்வேறு வகையான பால் பொருள்களை விற்பனைக்கு கிடைப்பது குறித்து மகிழ்ச்சியுடன் சொர்க்கத்தில் இருக்கும் நூற்றாண்டு விழா காணும் நாயகனுக்கு ‘ஹலோ’ சொல்லுங்கள். அவர் நிச்சயமாக உங்களுக்கு கையசைத்து நன்றி சொல்வார். ■



# தாதா — என் தாத்தா

சித்தார்த் ஷெத்


நான் வளர்ந்து வரும் பொழுது குறும்புக்கார குழந்தையாக இருந்தேன். பள்ளி நாட்களில் நான் பெரும்பாலும் வகுப்பின் கூறை மீது ஏறுவது, புத்தகங்களை ஜன்னலுக்கு வெளியே வீசி அவை எவ்வளவு தூரம் பறக்கின்ற என்று பார்ப்பது உள்ளிட்ட முடிவில்லாத விஷமச் செயல்களில் ஈடுபட்டு வந்தேன். என் அம்மா கோபப்படுவார், ஆனால், தாதா அவற்றை ரசிப்பார்.

எப்போதாவது என்னை காப்பாற்றும் முயற்சியில் என் அம்மாவுடன் தாதாவும் வருவார். பால் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாக இருந்து உலகில் இந்தியாவை பால் உற்பத்தியின் மெக்காவாக மாற்றிய குரியனின் பேரன் நான் என்று தெரிந்ததும் முதல்வர்கள் அதிர்ச்சி அடைந்தனர். தாதா என்னை அடிக்கடி மலையாளத்தில் “மந்தன்” (முட்டாள் பயலே) என்று அழைப்பார், அவரது தத்துவம் எளிமையானது. அதாவது குழந்தைகளின் துடிப்பான செயல்களை தடுக்கக்கூடாது என்பதுதான்.

எனது தாத்தா, பாட்டி அடிக்கடி சென்னையில் உள்ள என் தாயை பார்க்க வருவார்கள். வழக்கமாக அவர்கள் வார இறுதி நாட்களில்தான் வருவார்கள். அப்போது அவர்கள் தாஜ் கொரமண்டல் ஹோட்டலுக்கு விரும்பிச் செல்வார். என்னிடம் நண்பர்களையும் அழைத்து வரச் சொல்வார். அங்குள்ள நீச்சல் குளத்தில் நீச்சல் அடித்த பின் சிற்றுண்டி சாப்பிடுவோம். எனது நண்பர்கள் தாத்தா-பாட்டியுடன் அரட்டை அடிப்பதையும், உணவு சாப்பிடுவதையும் விரும்பினர். தாத்தா நீச்சல் குளத்தின் ஓரத்தில் அமர்ந்துகொண்டு பருந்துபோல பார்த்துக் கொண்டிருப்பார், நீங்கள் இப்படி நீந்துங்கள். அப்படிச் செய்யுங்கள் என்று அறிவுரை கூறிக்கொண்டே இருப்பார். பாட்டி சிரித்துக் கொண்டே இருப்பார். நான் மோசமாக செயல்படுவதை நினைத்து சிரிக்கிறாரோ என்று நினைப்பேன். ஆனால், பின்னர்தான் தெரிந்தது தாத்தாவுக்கு நீச்சல் தெரியாது. அது மட்டுமல்ல அவருக்கு தண்ணீர் என்றாலே பிடிக்காது.

நானும் எனது நண்பர்களும் சைக்கிள் ஓட்டுவோம். ஒரு நாள் அதிகாலையில் போக்குவரத்து அதிகம் இல்லாததால் எங்கள் வீட்டின் அருகே உள்ள, தாத்தா-பாட்டி தங்கியிருந்த ஹோட்டல் இருக்கும் பிரதான சாலையில் சென்றோம். உடனே வாசலில் நின்றிருந்த காவலாளி, தாத்தாவுக்கு போன் செய்து தகவல் தெரிவித்துவிட்டார். அடுத்த சில நிமிடங்களில் இரவு உடையில் இருந்த எனது தாத்தா கீழே இறங்கிவந்து எங்களை அவரது அறைக்கு அழைத்துச் சென்று “தகவல் தெரிவிக்காமல் இதுபோன்ற சாகசங்களில் ஈடுபடக்கூடாது” என்று கோபித்துக் கொண்டார். வீட்டை விட்டு

*வர்கீஸ் குரியன் மற்றும் அவர் மனைவி மோலியுடன், அவர் மகள் நிர்மலா மற்றும் பேரன் சித்தார்த் ஷெத்.*



## *இந்தியாவின் தலைசிறந்த பால்காரர்*

*நிர்மலா குரியன்*

*அமெரிக்காவில் MSc பட்டம் பெற்ற உடனேயே வர்கீஸ் குரியன், இந்தியா சுதந்திரம் அடைந்த நிலையில் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். அந்த நாள்களில் வறுமையும், ஏழ்மையும் இல்லாத மக்கள் வாழும் ஒரு நாடாக இந்திய தேசத்தை கட்டியெழுப்புவது தான் உன்னதமான பணியாக இருந்தது. இந்தியா உலகில் முதன்மையான நாடுகளில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே கனவாக இருந்தது. அவர் ஒருபோதும் தேசத்தின் விவசாயி களுக்குச் சேவைசெய்ய விரும்பு வில்லை. ஆனால், தொடர் சம்பவங்கள் அவரை குஜராத்தின் ஆனந்த் நகரில் இருக்கவைத்தன. உலோகவியல் அல்லது அணுசக்தி விஞ்ஞானத்தை தொடர்வதைவிட கூட்டுறவு இயக்கத் துக்கு பாடுபடவே அவர் விரும்பினார். வெண்மைப் புரட்சியின் தந்தை மற்றும் இந்தியாவின் பால்காரர் என்று அழைக்கப்பட்ட குரியன் சமூகத்துக் கான தொழில் முனைவோராகவே இருந்தார். அவரது பில்லியன் லிட்டர் யோசனை மற்றும் வெண்மை புரட்சி பால்வளத் துறையில் இந்தியா சுயசார்பு நிலையை எட்ட உதவியது. கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் துறையாகவும், கிராமப்புற வருமானத்தில் மூன்றில் ஒருபங்கை அளிப்பதாகவும் இருந்தது.*

*1964ம் ஆண்டு, பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி ஆனந்த்-க்கு விஜயம் செய்ததுடன் கிராமத்தில் ஒருநாள் இரவு தங்கியிருந்தார். கூட்டுறவு இயக்கம் பற்றி விவசாயிகளிடம் கேட்டறிந்தார். பின்னர் தில்லி திரும்பியவுடன் குரியனுடன் தொடர்பு கொண்டு தேசிய பால்வள வாரியத்தை (National Dairy Development Board-NDDB) ஏற்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். ஆனந்த் மாடல் பால் கூட்டுறவு அமைப்புக்கு முன்னோடியாக இருந்த குரியன், தேசிய அளவில் ஓர் அமைப்பை ஏற்படுத்தினார். அதற்கு விவசாயிகள் மனமுவந்து பால் வழங்கினர். விவசாயிகளின் முன்னேற்றத்தில் நம்பிக்கை கொண்டிருந்த அவர், அவர்களது உழைப்பையும் உற்பத்தித் திறனையும் சந்தேகித்ததில்லை. சிறு, குறு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு பால் உற்பத்தி கூடுதல் வருவாய் ஈட்டும் தொழிலாகவும் பாதுகாப்பானதாகவும் அமைந்தது. பால் உற்பத்திப்பணியில், மாடுகளுக்கு தீவனம் வைப்பது, நிர்வகிப்பது, மாடுகளின் உடல்நலத்தை பேணுவது என பல வேலைகளை பெரும்பாலும் பெண்களே செய்து வந்தனர்.*

*இது பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தொலைநோக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இருந்தது. கோவிட் தொற்று காலத்தில் உலகமே தத்தளித்துக் கொண்டிருந்தது. வேலைவாய்ப்புகள் குறைந்தன. பல குடும்பங்களுக்கு பால் உற்பத்தி நடவடிக் கைகள் மூலம் கிடைக்கும் வருமானம் முக்கியமாக இருந்தது. அதுமட்டுமல்ல, பெண்களின் முக்கியத்துவத்தையும் அதிகரித்தது.*

*இந்தியாவில் ஒரு தலைமுறையினர் அதிக பால் நுகர்வு மூலம் தங்களது சராசரி உயரத்தை அதிகரித்தற்கும், ஆயிரக்கணக்கான பால் கூட்டுறவு சங்கங்கள், லட்சக்கணக்கான அதன் உறுப்பினர்கள் ஜனநாயகத்தின் அடித்தளத்தை அனுபவிக்கவும், லட்சக் கணக்கான கிராமப்புற இந்தியர்கள் அதிகாரம் பெறவும் அவரே காரணமாக இருந்தார் என்று சொன்னால் அது மிகையாகாது.*

வெளியில் சைக்கிளில் வரக்கூடாது என்று கட்டளையிட்டார். அவர் சற்று அமைதியானவுடன் எங்களை காலை உணவுக்கு அழைத்தார். எங்கள் சைக்கிள் பயணத்தால் அவர் ஈர்க்கப்பட்டாலும், பாட்டியின் முன் கடுமையான முகத்தை வைத்திருந்தார்.

ஒரு நாள் என் அம்மா வெளியில் போயிருந்ததால், மதியம் உணவு சாப்பிட ஹோட்டலுக்கு செல்ல வேண்டியிருந்தது. தாத்தாவிடம் பணம் கேட்டபோது, தனது பர்ஸிலிருந்து ஒரு 50 ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார். என்னுடன் மூன்று நண்பர்கள் இருக்கிறார்கள். இது போதாது என்றேன். அவர் கடுமையான முகத்துடன் பர்ஸிலிருந்து மூன்று நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து என்னிடம் கொடுத்தார். சில மணி நேரம் கழித்து திரும்பி வந்து அவரிடம் பணத்தை திருப்பிக் கொடுத்தபோது மதியம் உணவு சாப்பிட்டீர்களா என்று கேட்டார். நான் என்னுடன் வந்த பெண்கள் அதற்கான செலவை கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னபோது எப்போதும் உணவுக்கு பெண்கள் பணம் கொடுக்க அனுமதிக்கக் கூடாது என்றார். நான் பாலின சமத்துவம் பற்றி அவருக்கு விளக்க முயன்ற போது அவர், பெண்களை மதிக்க வேண்டும், அவர்களை நன்றாக நடத்த வேண்டும் என்றார்.

நண்பர்களாக இருந்தாலும் சரி, நெருங்கிய உறவினராக இருந்தாலும் சரி அவர் பெண்களை எழுந்து நின்று வரவேற்றது எனக்கு நினைவுக்கு வருகிறது. அவர் ஒரு துணிச்சலான ஜென்டில்மென். கடைசிவரை தனது பழக்க வழக்கங்களை அவர் கைவிட்டதில்லை.

(நிர்மலா, வர்கீஸ் குரியனின் மகள். சித்தார்த் அவரது பேரன்.)

# ரோட்டரியின் கூட்டு சக்தி தேசத்தை கட்டியெழுப்ப உதவும்!

ஜெய்ஸ்ரீ

தேசிய அளவில் பெரிய மாற்றத்தை உருவாக்கும் கூட்டு சக்தி உங்களிடம் உள்ளது. ரோட்டரி மாவட்டங்கள் அல்லது ரோட்டரி சங்கங்கள் இணைந்து ஒரு நல்ல திட்டத்தை செயல்படுத்தினால் அது தேசம் முழுவதற்கும் பயனளிப்பதாக இருக்கும். நமது ஒருங்கிணைப்புத் திறன்தான் பலம் என்பதால் ஒவ்வொரு துறையிலும் அரசின் பணிகளில் 10 சதவீதத்தை நம்மால் செய்ய முடியும் என்று RID 3160-க்கு உட்பட்ட ஹோஸ்பெட் ரோட்டரி சங்கம் நடத்திய பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் RI தலைவர் சேகர் மேத்தா கூறினார். உலகம் முழுவதும் போலியோவுக்காக நாம் ஒன்றுபட்டு செயல்பட்டிருக்கா விட்டால் போலியோவை ஒழித்திருக்க முடியாது என்றார் அவர்.

ரோட்டரி இயக்குநர் மகேஷ் கோட்பாகியுடன், மாவட்ட ஆளுநர் V திருப்பதி நாயுடுவின் சங்கத்தின் பல்வேறு சேவைத் திட்டங்களை அவர் பார்வையிட்டார். சங்க உறுப்பினர்கள் உற்சாகத்துடன் சமூக சேவையாற்றி வருவதைப் பாராட்டிய மேத்தா, வளருங்கள் அதிக சேவையாற்றுங்கள் என்று நான் எப்போதும் சொல்வதுண்டு. அதை நீங்கள் செயலில் காட்டியுள்ளீர்கள். அறக்கட்டளை நிதிப் பங்களிப்பு, உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் சேவைத் திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நீங்கள் வளர்ந்து வருகிறீர்கள் என்றார். இரத்தம் உறையாமல் இருக்கும் நோய்க்கு சிகிச்சை அளிக்கும் வகையில் ஹீமோபிலியா (Haemophilia) அதற்கான பிரத்யேக மருத்துவ வாகனத்தை அவர் தொடங்கிவைத்தார். மேலும் சங்கத்தின் சார்பிலான ரோட்டரி இரத்த வங்கிக்கு அடிக்கல் நாட்டினார். ஒரு டயாலிசிஸ் சிகிச்சை மையம், ஒரு பள்ளி மற்றும் தொழிற் பயிற்சி மையம் ஆகியவை சங்கத்தின் நீண்டகால திட்டங்களாகும்.

நாற்பது உறுப்பினர்கள் கொண்ட அனைத்து மகளிர் சங்கம் உள்ளிட்ட 6 புதிய ரோட்டரி சங்கங்களுக்கு பட்டயச் சான்றிதழ்களையும் ரோட்டரித் தலைவர் மேத்தா வழங்கினார். DG நாயுடுவின் மகன் சைதன்யா, பட்டயத் தலைவராக இருக்கிறார். அவர், தனது முதல் பங்களிப்பாக TRF நிதியாக 10,000 டாலர் வழங்கினார். நாயுடுவின் மகள் சௌம்யா உள்ளிட்ட 10 ரோட்டேரியன்கள் நிகழ்ச்சியில் தலா 10,000 டாலர் TRF நிதிப் பங்களிப்பாக நன்கொடை வழங்கினர். மேலும் பல பால் ஹாரிஸ் ஆதரவாளர்கள் இருந்தனர். அவர்களில் நாயுடுவின் பேரனும் ஒருவர். மேத்தாவின்

*RI தலைவர் சேகர் மேத்தா ரத்த வங்கியிற்கு அடிக்கல் நாட்டுகிறார். DG திருப்பதி நாயுடு, RID மகேஷ் கோட்பாகி மற்றும் ரோட்டராக்ட் கமிட்டி தலைவர் ரவி வட்லாமணி ஆகியோரும் உடன் உள்ளனர்.*





*RI தலைவர் மேத்தா வித்யா சேது திட்டத்தை துவக்கி வைக்கிறார். RC ஹோஸ்பெட் தலைவர் K S ராஜேஷ், DLCC ஸ்ரீனிவாஸ், DG நாயுடு, RID கோட்பாகி, அமீதா மற்றும் நிர்மலா நாயுடு ஆகியோரும் உள்ளனர்.*

“ஒவ்வொருவரும் ஒருவரைக் கொண்டு வருவோம்” திட்டத்தையும் ரோட்டரி மாவட்டம் சிறப்பாகச் செயல்படுத்தியுள்ளது.

உங்கள் சங்கம் சிறியது என்று நினைக்க வேண்டாம். நீங்கள் ஒரு பெரிய அமைப்பின் பகுதியாக இருக்கிறீர்கள். உங்களின் பங்களிப்பு முக்கியமானது. உலகில் ரோட்டரி மூலம் 35,000 தலைவர்கள் மலையை நகர்த்தி வருகிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அமைப்பில் இருப்பதற்காக பெருமை கொள்ளுங்கள் என்றார் மேத்தா.

பெரிய திட்டங்களைத் தொடர வேண்டும் என்று குறிப்பிட்ட மேத்தா, இந்திய அரசுக்காக RILM மின் கற்றல் திட்டத்தை உருவாக்கியதை அவர் சுட்டிக்காட்டினார். பிரதமரின் இணைய வழி கல்வி அலைவரிசைகள் கோடிக் கணக்கான குழந்தைகள் ஆன்லைன் மூலம் கல்வி கற்றுவருவதாக அவர் குறிப்பிட்டார். தினமும் அரை மணி நேரம் பாடங்கள் நடத்தப்படுகின்றன. குழந்தைகளுக்கான கல்வி முறையில் மாற்றத்தை கொண்டுவர நாம் உதவி செய்துள்ளோம். இப்படித்தான் தேசத்தை கட்டியெழுப்புவதில் நாம் முக்கியப் பங்கு வகித்து வருகிறோம். 2025ஆம் ஆண்டுக்குள் இந்தியா முழு எழுத்தறிவு பெற்ற நாடாக உருவாக்கப்படும் என்று நான் பிரதமருக்கு உறுதியளித்திருக்கிறேன். அதுவரை நானும் தூங்கமாட்டேன், உங்களையும் தூங்கவிடமாட்டேன். இவற்றை நான் திட்டங்களாகவோ, நிகழ்ச்சிகளாகவோ கருதவில்லை. நம்நாட்டிற்கான சேவையாகவும் பணியாகவும் கருதுகிறேன்.

பிரதமர் நரேந்திர மோடியுடன் ஒரு முறை விவாதித்துக் கொண்டிருந்த போது மகளிர் ஊட்டச்சத்துக்கு ரோட்டரி உதவ வேண்டும் என கேட்டுக் கொண்டார். இது தொடர்பான பெரிய மற்றும் விரிவான திட்டத்தை விரைவில் தொடங்க நாங்கள் தயாராகி வருகிறோம் என்றார்.

சங்கத்தின் டயாலிசிஸ் சிகிச்சை வசதியை பாராட்டிய ரோட்டரி இயக்குநர் மகேஷ் கோட்பாகி, இதன் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும் என்றார். மாவட்டத்தின் ஒட்டு மொத்த சாதனைகளுக்காக மண்டல தலைவர்களான ரோட்டரி ஒருங்கிணைப்பாளர் ரவி டோத்ரே, உதவி RC ராஜலட்சுமி வாத்லாமணி, RRFC லக்கராஜு சத்தியநாராயணன், DRFC மதுபிரசாத் குருவாடி மற்றும் ARPIC சின்னப்ப ரெட்டி ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

மாவட்டத்தில் விஜயவாணி பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து “வித்யா சேது” திட்டம் தொடங்கப்பட்டு, 10 மற்றும் 12ம் வகுப்புகளில் படிக்கும் கிராமப்புற மாணவர்களுக்கு ரூ.25 லட்சம் மதிப்பில், 50,000 அறிவியல் மற்றும் ஆங்கில பாட கையேடுகள் விநியோகிக்கப்பட்டன. இரத்த வங்கி மற்றும் தீவிர சிகிச்சை வசதியுடன் கூடிய ஆம்புலன்ஸ் வாகனம் ஆகியவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றார் நாயுடு. காக்னிஸன்ட் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு 2,500 கணினிகளை நன்கொடையாக வழங்க திட்டமிட்டுள்ளோம். மேலும் இன்ஃபோஸிஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் பள்ளிகளுக்கும் வேறு சில கல்லூரிகளுக்கும் 15,000 கணினிகள் வழங்கவும் ஏற்பாடு செய்து வருகிறோம். இதன் மூலம் மாணவர்கள் டிஜிட்டல் கல்வி பெற முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ரோட்ராக்ட் குழு இணை தலைவர் ரவி வாத்லாமணி, ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் இரண்டு ரோட்ராக் சங்கங்களை ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். NCC, NSS போல அனைத்து கல்லூரிகளிலும் ரோட்ராக்ட் சங்கங்களை உருவாக்குவது தொடர்பாக தெலங்கானா அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

DGக்கள் Dr ஓம் பிரகாஷ் P மோதிபவாலே (3132), K பிரபாகர் (3150) மற்றும் M ராமாராவ் (3020) ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இறுதியில் ஹோஸ்பெட் ரோட்டரி சங்கத் தலைவர் ராஜேஷ் நன்றி கூறினார்.■

INDUS PEACE PARK

# இந்தியா–பாகிஸ்தான் அமைதிப் பூங்கா நிருவும் ஆர்வர்தில் ரோட்டேரியன்கள்

ரஷீதா பகத்

கடந்த அக்டோபர் மாதம் நான்காவது வாரத்தில் இந்தியா-பாகிஸ்தான் இடையே இருந்துவந்த தடைகள் நீங்கிய நிலையில், இந்தியாவில் இருந்து மூன்று ரோட்டரி சங்கங்கள்- காஷிபூர் கோர்பெட், காஷிபூர் மற்றும் அலிகார் மற்றும் பாகிஸ்தானின் மூன்று ரோட்டரி சங்கங்கள்-லாகூர் காரிஸான், கராச்சி கார்டன் மற்றும் பூபர் சக்வால் இணைந்து இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதிப் பூங்கா ஏற்படுத்தும் முயற்சியாக மெய்நிகர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தன.

இந்த கூட்டத்தில் 170-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரும் காஷிபூர் கோர்பெட் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவருமான அனில் காய் தெரிவித்தார். இந்த சந்திப்பு 2015ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சிந்து அமைதிப் பூங்கா சங்கம் (Indus Peace Park Society-IPPS) பல கூட்டங்களில் முதன்மையானது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆப்பிரிக்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 18 இயக்குநர்களை உள்ளடக்கியது இந்த அமைப்பு. அமைதியை விரும்பும் நோக்கில் ரோட்டேரியன்களாகிய நாங்கள் இதில் இடம்பெற்றுள்ளோம். இதில் சேருவதற்கு இன்னும் அதிகமான ரோட்டேரியன்களை நாங்கள் தேடிவருகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அமைப்பு, கனடாவில் உள்ள RID 5080க்கு உட்பட்ட நகுஸ்ப் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த PDG கீஸ் வான் டெர் போல் என்பவரால் வழி நடத்தப்படுகிறது. கடந்த 2015ம் ஆண்டில் இந்தியா-பாகிஸ்தான் நட்புறவு பரிமாற்ற நிகழ்ச்சியை அவர் வழிநடத்தியபோது தோன்றிய யோசனையாகும்.

ரோட்டரி கூட்டுறவு மூலம் கடந்த 6 ஆண்டுகளில் எனது குடும்பம் விரிவடைந்துள்ளது. இதில் இந்தியா-பாகிஸ்தானைச் சேர்ந்த பல சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் இடம் பெற்றுள்ளனர் என்றார் அவர். எல்லைப் பகுதியில் அமைதிப் பூங்காவை உருவாக்க இருநாடுகளும் ஒருபோதும் சம்மதிக்காது என்று பலரும் எங்களிடம் கூறினர். அதேசமயத்தில் அவநம்பிக்கையும், பகைமையும் நிறைந்த ஒரு பிராந்தியத்தில் புதிய காற்றை சுவாசிப்பதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருப்பதாகவும் சிலர் கூறினர். யாராவது அல்லது ஏதாவது ஒரு குழு இந்த சவாலை ஏற்கும் நேரம் வந்து விட்டது. மேலும் பல தசாப்தங்களாக கண்ட கனவு நனவாக வேண்டும் என்று மக்கள் விரும்புவதாகவும் சிலர் எங்களிடம் தெரிவித்தனர்.

PDG போல் மேலும் பேசுகையில், அமெரிக்கா-கனடா இடையிலான எல்லைப் பிரச்னையில் வாட்டர்டன்-கிளேசியர் சர்வதேச அமைதிப்பூங்கா நடவடிக்கையின்போது அக்குழுவில் தாம் இயக்குநராக இடம் பெற்றதாகவும் குறிப்பிட்டார். இது 1932ம் ஆண்டில் அர்ப்பணிப்புள்ள ரோட்டேரியன்களால் இது உருவாக்கப்பட்டதாகவும், அவர்கள் இரண்டு நாடுகளின் அரசு களிடமும் பேச்சுவார்த்தை நடத்தியதன் மூலம் கனவுகள் நனவானதாகவும் அவர் குறிப்பிட்டார். இது நடந்தது 90 ஆண்டுகளுக்கு முன்னால். அதன் பிறகு ரோட்டேரியன்கள் ஒவ்வொரு ஆண்டும் இதை நட்புறவு கூட்டம் மூலம் கொண்டாடி வருகிறார்கள். 8,900 கி.மீ. எல்லைக்கு வெளியே மூன்று எல்லை தாண்டிய பூங்காக்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மெய்நிகர் சந்திப்பில்



PDG *கீஸ் வான் டெர் போல்*

உரையாற்றிய RID 3110ன் மாவட்ட ஆளுநர் முகேஷ் சிங்கால், இந்த சந்திப்புக் கூட்டம் மூலம் இருநாடு களுக்கு இடையிலான கசப்புணர்வு குறைந்து முன்னேறம் ஏற்படும் என்று நம்புவதாக தெரிவித்தார். உலகெங்கிலும் உள்ள சுயநல விரும்பிகள், குறிப்பாக ஆயுத விற்பனையாளர்கள் மற்றும் போரை விரும்புவர்கள் அமைதியை விரும்ப வில்லை. சண்டை சச்சரவுகளை வளர்த்து அதன் மூலம் வர்த்தகம் செய்து லாபம் ஈட்டுவதுதான் அவர்களின் நோக்கமாகும். ஆனால், ரோட்டேரியன்கள் விரும்பினால் இரு நாட்டு அரசாங்கங்களும் பேச்சு வார்த்தை நடத்தி பிரச்னைகளுக்குத் தீர்வுகண்டு வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வதற்கான நம்பிக்கை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் மக்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியும். ஆனால், இது “அரசியல் அல்ல, சேவைதான்” என்பதை ரோட்டேரியன்கள் உறுதிசெய்ய வேண்டும் என்றார் அவர்.

இந்த விவாதம் இரு நாட்டு மக்களும் பகிர்ந்து கொள்ளும் பொதுவான கலாசார DNA பாரம்பரியத்தின் மீது கவனம் செலுத்தியது. சிந்து நாகரீகத்தையும் மேலும் அமைதியான சமூகம் மற்றும் திறமையான நீர் மேலாண்மையையும் எதிரொலிக்கிறது. விலைமதிப்பற்ற கற்களைக் கொண்டும், உலோகங் களைக் கொண்டும் அலங்காரமான பொம்மைகளை தயாரிப்பதிலும் நிபுணத்துவம் பெற்றவர்கள் என்றார் காய்.

இக்கூட்டத்தில் பங்கேற்ற ரோட்டரியினர், ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கியது போலவே இருநாட்டு மக்களையும் ஒன்றிணைத்து அமைதிக்கான வழியை உருவாக்க முடியும் என்று தெரிவித்தனர். போலியோ ஒழிப்பு நடவடிக்கைகளில் காட்டிய விடாமுயற்சியும், மன உறுதியும்தான் ரோட்டரியின் பலத்தை வெளிப்படுத்துகிறது என்றும் அவர் கூறினார்.

மற்றொரு பங்கேற்பாளர் கூறுகையில், இது சுயநலத்திற்கு அப்பாற்பட்ட சேவையாகும். எங்களின் முக்கிய கருவி நான்கு வழிச் சோதனை என்பதால் எந்தவிதமான



**இடதிலிருந்து:** IIPS *துணைத்தலைவர் முகமது அயஸ்,* DGs *பவன் அகர்வால்* (RID 3110), PDG *டோனி சர்மா* (RID 1130) *மற்றும்* IIPS *இயக்குனர் ராஜீவ் சபர்வால்.*

பயமோ அல்லது சலுகையோ இல்லாமல் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா-பாகிஸ்தான் இடையே இருந்துவரும் இறுக்கமான சூழலை முடிவுக்கு கொண்டு வருவது தான். பிரிவினையால் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றங்களுக்கு முடிவு காண்பது தான்.அதாவது அமைதிச் சோலையை உருவாக்குவதுதான்.

RID 3272க்கு உட்பட்ட லாகூர் காரிஸன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த PDG ஷெஹ்ஸாத் அகமது அமைதிப் பூங்கா திட்டம் மற்றும் அதன் பின்னணியை விளக்கினார். இதை ரோட்டேரியன்கள் “உலகின் எட்டாவது அதிசயம்” என்று விவரிக்கின்றனர்.

எங்கள் கனவு என்னவெனில் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு பகுதிகளிலும் எதிர் எதிரே சுற்றுச்சூழல் பூங்காக்களை அமைக்க வேண்டும் என்பதுதான். பிரிவினையின்போது இழந்த நல்லிணக்கத்தை மீட்டெடுப்பதே இதன் நோக்கமாகும். இப்போது அமைதிச் சமூகத்திற்கு தலைவராக இருப்பவரும், கனடாவில் RID 5080க்கு உட்பட்ட நகுஸ்ப் ரோட்டரி சங்கத்தின் PDG, DGN ஆக இருந்த கீஸ் வான் டெர் பால் 2015 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சென்ற போது எங்கள் கதை தொடங்கியது. வாகா மற்றும் அட்டாரி எல்லையில் ராணுவத்தினர் கொடியேற்றி இறக்கும் நிகழ்வை காணவேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால், பாதுகாப்பு காரணங்களால் அவரது எண்ணம் நிறைவேறவில்லை.

ஆனால், அவர் பாகிஸ்தானில் தங்கி, பல்வேறு முகாம்களில் நடந்த போலியோ நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை பார்வை யிட்டார். ரோட்டேரியன்களின் அர்ப்பணிப்பு அமைதி முயற்சியில் அமெரிக்க- கனடா எல்லையில் வாட்டர்டன்-கிளேசியர் சர்வதேச அமைதிப்பூங்கா 1932ல் நிறுவப்பட்டது போல இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதிப்பூங்கா உருவாக வேண்டும் என்பதே அவரது லட்சியமாகும். 500 ஏக்கர் பரப்பளவில் ஓர் நினைவுச் சின்னம், அமைதி மையம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பூங்கா வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

அமைதிப் பூங்கா அமிருதசரஸ்-லாகூர் எல்லைப் பகுதியில் அமைய வேண்டும் என்பது தான் அவரது எண்ணமாகும், ஆனால், அந்தப் பகுதி மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியாகவும், வர்த்தக கேந்திரமாகவும் இருப்பதால் 500 ஏக்கர் நிலப்பரப்பு கிடைக்குமா என்பது சந்தேகமே. கர்தார்பூர் வழித்தடத்தில் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதி இல்லை என்பதால் அங்குகூட இதை அமைக்கலாம். இந்தியா, பாகிஸ்தான் மக்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதும் உள்ள மக்கள் விரும்பும் வகையில்

இந்த அமைதிப்பூங்கா அமைய வேண்டும் என்பதுதான் எங்களது கனவாகும். அந்த இடம் மக்கள் சுதந்திரமாக உலவும் இடமாகவும், குழந்தைகள் ஒருவரை ஒருவர் சந்தித்து மகிழும் இடமாகவும் இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

RID 3110 DGE பவன் அகர்வால் மற்றும் லண்டன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவரும் அமைப்பின் துணைத் தலைவருமான முகமது அயாஸ், பாகிஸ்தானைச் சேர்ந்த PDG அக்தர் அலவி மற்றும் PDG ஃபைஸா கமர் ஆகியோரும் மெய்நிகர் சந்திப்பில் உரையாற்றினர்.

குழு விவாதத்தில் பங்கேற்ற PDG அக்தர் அலவி, தமது 40 ஆண்டுக்கால ரோட்டரி பயணத்தில் இந்தியாவுக்கு பலமுறை வந்து சென்றுள்ளதாகக் குறிப்பிட்டார். இந்தியாவில் தமக்கு நண்பர்கள் உள்ளதாகவும், இந்தியாவைச் சேர்ந்த PRIP ராஜேந்திர சாபூ மற்றும் கல்யாண் பானர்ஜி ஆகிய இருவரையும் பற்றி தெரிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்ததாகவும் அவர் கூறினார். இது ஒரு சிறந்த திட்டம். நெல்சன் மண்டேலா கூறியது போல எதுவும் சாதிக்க முடியாதது அல்ல, மனமிருந்தால் மார்க்கம் உண்டு. நம்பிக்கையும் மன உறுதியும் இருந்தால் சாதிக்கலாம் என்றார்.

IPPS இயக்குநர் காய் கூறுகையில், இரு நாட்டு அரசாங்கங்களும் நிலத்தை நன்கொடையாக வழங்குவார்கள், அமைதிப் பூங்கா கனவு விரைவில் நனவாகும் என்று ரோட்டேரியன்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியா-பாகிஸ்தான் அமைதிப் பேச்சு மேம்படவேண்டும் என்று அவர் கருதுவதற்கு தனிப்பட்ட காரணங்கள் உள்ளன. அவரது தந்தை இஸ்லாமாபாதிலிருந்து 72 கி.மீ. தொலைவில் உள்ள சக்வால் என்னுமிடத்திலிருந்து இந்தியாவுக்கு வந்தார். பிரிவினையின்போது அந்த இடம்தான் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் சொந்த ஊராக இருந்தது. எனது மனைவியின் குடும்பத்தினர் மூல்தானைச் சேர்ந்தவர்கள். நாங்கள் 1996ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு சென்றுவந்தோம். இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே அமைதி நிலவ வேண்டும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று புன்னகையுடன் அவர் தெரிவித்தார்.■

### *அமைதிப் பூங்கா எப்படி இருக்க வேண்டும்?*

- *மனிதநேயத்தை மக்கள் கொண்டாடும் விதத்தில் அமைதிச் சோலையாக இருக்க வேண்டும்.*
- *கலாசாரம், உணவு, இசை, நாட்டியம், கலைகள், கட்டடக்கலை, பாரம்பரியம், விளையாட்டு உள்ளிட்டவற்றை பரஸ்பரம் இருதரப்பினரும் சுதந்திரமாக பரிமாற்றம் செய்துகொள்ளும் வகையில் இருக்கவேண்டும்.*
- *கல்விக்கான வாய்ப்புகளை பகிர்ந்து கொள்ளும் இடமாக இருக்க வேண்டும்.*
- *இரு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், சமாதான கூட்டாளிகள், உலகம் முழுவதிலுள்ள தங்கள் வகுப்புத் தோழர்களுடன் சேர்ந்து உலக மக்கள் அமைதி மற்றும் நல்லிணக்கத்துடன் இணைந்து வாழும் வகையில் ஊக்குவிக்கும் வகையில் பணியாற்ற வேண்டும்.*

Rotary & Partners

# 1,000 கழிப்பறைகள் கட்டும் RC கொல்கத்தா யுவிஸ்

ரோட்டரி செய்திகுழு



RID 3291-க்கு உள்பட்ட கொல்கத்தா யுவிஸ் ரோட்டரி சங்கம் வடக்கு மற்றும் தெற்கு 24 பர்கானாக்கள் மற்றும் ஹுக்ளி மாவட்டங்களில் உள்ள கிராமங்களில், தங்களின் முதன்மைத் திட்டமான "சுசித்ரா" திட்டத்தின் கீழ் மூன்று ஆண்டு காலத்தில் ரூ.1 கோடியில் 1,001 வீடுகளில் கழிவறைகள் கட்டியுள்ளனர். இதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் 14,000 கி.மீ. தொலைவு பயணம் செய்துள்ளோம் என்றார் சங்கத்தின் முன்னாள் தலைவர் சஞ்சய் பஸாரி. இந்த திட்டத்துக்கு RSH குளோபல், கிரெடெண்ட் பவுண்டேஷன் மற்றும் கொல்கத்தா மெட்ரோ மைதான் இன்னர் வீல் சங்கம் ஆகியவை நிதியுதவி செய்துள்ளன.■

ADVT.


RTN SHEKHAR MEHTA
RI PRESIDENT
RTN A S VENKATESH
RI DIRECTOR
RTN Dr MAHESH KOTBAGI
RI DIRECTOR
RTN GULAM VAHANVANTY
TRF TRUSTEE
Rotary
SERVE TO CHANGE LIVES
RID 2981
ZONE V
RTN PDG. A.MANI
ROTARY DISTRICT TRAINER
New Members!
1000 + NEW MEMBERS INDUCTED
Adopt a Village
132 VILLAGES ADOPTED
ONE VILLAGE BY ONE CLUB EACH
elite
DISTRICT 2981
5200 PROJECTS UPLOADED
IN ROTARY INDIA APP
CHANGE MAKERS
PROJECT Orange
a ray of sight
AVOIDABLE BLINDNESS 8 VISION CENTRE
TO BE STARTED ACROSS THE DISTRICT
MAMMOGRAPHY BUS TO BE DEDICATED TO
THE STATE OF TAMILNADU & PONDICHERRY
AKS
2.5 LAKH
DG.S.BALAJI HAS CONTRIBUTED
AND BECOME DISTRICT FIRST AKS MEMBER
Rotary
ALABANAI
ஆலாபனை
DISTRICT CONFERENCE 2981
JANUARY 7,8,9 - 2022
CONFLUENCE HALL, MAHABALIPURAM
Rtn.AKS.S.BALAJI
DISTRICT GOVERNOR
Rtn.JEYASHREE BALAJI
DISTRICT FIRST LADY
Mobile : +91 - 98424 32271 | E-mail : dgbalaji2122@gmail.com

# RID 3170க்கு வருகை தந்த ரோட்டரி தலைவர்கள்

ரோட்டரி செய்திக் குழு

RI தலைவர் சேகர் மேத்தா, RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி இரண்டு நாள் பயணமாக கோலாப்பூர், தார்வாட் வந்தார்கள், பொறுப்பில் உள்ள RI தலைவர் ஒருவர் கோலாப்பூர் வருவது இதுதான் முதன்முறை என்றார் RID 3170 மாவட்டச் செயலாளர் (ஆண்டு வழங்கல்) அஜய் மேனன்.

கோலாப்பூரில், மேத்தாவும் கோட்பாகியும் இந்த மாவட்டத்தின் குறிப்பிடக்கூடிய ரோட்டரி திட்டங் களைப் பார்த்தார்கள்: சிவில் மருத்துவ மனையில் டயாலிசிஸ் மையம், ரோட்டரி சமாஜ் சேவா கேந்திரா, ஷாஹு ரத்த வங்கி, கேட்டல், பேச்சுக் குறைபாடு உள்ளவர்களுக்கான மறுவாழ்வு மையம், நீரிழிவுப் பராமரிப்பு மையம், ஃபிசியோ மற்றும் நீர்ச் சிகிச்சை மையம்... இவை அனைத்தும் பல்வேறு பன்னாட்டு நல்கைகளின் ஆதரவுடன் அமைக்கப்பட்டவை.

கோவிட் நோய்ப்பரவலின் போது மகாராஷ்டிர மாநிலத்தில் ரோட்டரியின் மதிப்பு மிக்க சேவையை அங்கீகரிக்கும் விதமாக, உள்விவகாரங்களுக்கான துணை மாநில அமைச்சர் Rtn சடேஜ் படீல் மகாராஷ்டிர அரசு சார்பாக மேத்தாவுக்கு ஒரு பெருமைச் சுருளையும் ஆவணத்தையும் வழங்கினார். TRFக்கு இந்த மாவட்ட ரோட்டரியன்களுடைய தாராளமான பங்களிப்பைப்பாராட்டும் வகையில் DG கௌரிஷ் தோண்ட் RI தலைமை இரவு உணவை நடத்தினார். தங்களுடைய AKS உறுதிப்பாட்டை நிறைவுசெய்த PDG வினய்குமார் பாய் ராய்க்கர்; RC சங்கலி உறுப்பினர் கிஷோர் லுல்லா, PDG திலீப் சல்கோவ்கர் ஆகியோரை மேத்தாவும் கொட்பாகியும் பெருமைப் படுத்தினார்கள். கிஷோருடைய மகனும் பெல்காம் ரோட்டரி மின் சங்க உறுப்பினருமான அமித் லுல்லா AKS உறுப்பினராக உறுதியளித்தார். DG தோண்ட் மற்றும் உதவி ஆளுநர் சச்சின் ஜன்வார் உள்ளிட்ட

*RID 3170 ரோட்டரியினர் RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் RID மகேஷ் கோட்பாகி ஆகியோரை வரவேற்கின்றனர்.*



வேறு 12 ரோட்டரியன்கள் TRFக்குப் பல நிலைகளில் மிகப் பெரிய நன்கொடையாளர் பங்களிப்பு வழங்கியதற்காக அங்கீகரிக்கப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 225 பேர் முன்னிலையில் இரு தலைவர்களும் பேசினார்கள்.

அடுத்த நாள், அவர்கள் RC தார்வாடுக்குச் சென்று அதன் 80ம் ஆண்டுக் கொண்டாட்டங்களில் பங்கேற்றார்கள். தாராதேவி வாலி, பல்லவி தேஷ்பாண்டே மற்றும் பினோய் மொமோயா ஆகிய மூன்று மிகப் பெரிய கொடையாளர்களை மேத்தாவும் கோட்பாகியும் பெருமைப்படுத்தினார்கள்.

DGN நசீர் பொர்சட்வாலா RI தலைவருடைய உதவியாளராகச் செயல்பட்டார்.■




Rtn *கிஷோர் லுல்லா* RI *தலைவர் மேத்தாவிடம் காசோலை வழங்குகிறார். அவர் மகன் அமித் லுல்லா,* PDG *வினய் ராய்க்கர்,* DG *கௌரிஷ் மற்றும் ப்ரதிமா தோண்ட், செயலாளர் அஜய் மேனன் ஆகியோரும் உள்ளனர்.*

---

# RID 3090 இன்டராக்டர்களுக்குப் பணிவாழ்க்கை அறிவுறுத்தல் முகாம்

கிரண் ஜெஹரா



*மாவட்ட இன்டராக்ட் தலைவர் மனிக் ராஜ் சிங்க்ளா மற்றும் இன்டராக்டர்கள் பணிவாழ்க்கை அறிவுறுத்தல் முகாமில்.*

7ம் வகுப்பிலிருந்து 12ம் வகுப்பு வரை பயிலும் இன்டராக்டர்களும் மாணவர்களும் தொழில்முனைவோர்கள், கலைஞர்கள், பல துறைகளைச் சேர்ந்த தலைவர்களுடைய பேச்சுகளைக் கேட்கிற, பணிவாழ்க்கை வழிகாட்டிகளுடன் உரையாடுகிற, ரோட்டரியின் அமைதித் தோழமைகள், RCC, RYLA, இளைஞர் பரிமாற்ற மற்றும் புதிய தலைமுறைகள் சேவைப் பரிமாற்றத்திட்டங்களைப் பற்றிக் கற்றுக் கொள்கிற வாய்ப்பைப் பெற்றார்கள். இது, RID 3090 மாவட்ட இன்டராக்ட் தலைவர் மணிக்ராஜ் சிங்க்ளா நடத்திய பணிவாழ்க்கை அறிவுறுத்தல் முகாம்களில் சாத்தியமானது. இந்த மாவட்டம் இவருடைய தலைமையின்கீழ் 50 புதிய இன்டராக்ட் சங்கங்களைச் சேர்த்துள்ளது; பணிவாழ்க்கை அறிவுறுத்தல் முன்னெடுப்பு ஒவ்வொரு வார நிறைவிலும் கிட்டத்தட்ட 200 இன்டராக்டர்களுக்குப் பயிற்சியளிக்கிறது. ரோட்டரி பற்றிய அறிவுடன், அவர்கள் விரும்பும் பணிகள், கல்லூரிகள், பிறநாடுகளில் வழங்கப்படும் பாடங்கள், கல்வி உதவித்தொகைகள் மற்றும் போட்டித் தேர்வுகளைப் பற்றிய தகவல்களையும் நாங்கள் வழங்குகிறோம்'' என்றார் சிங்க்ளா.

இந்த ஆண்டு, ரோட்டரியின் வழியாகத் தங்கள் சமூகத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்தபடி ஒரு வலுவான பணிவாழ்க்கையை அமைத்துக்கொள்வது எப்படி என்று மாணவர்கள் புரிந்து கொள்ள உதவுவதற்காக இன்டராக்டைப் பகுதியளவு கிராமப்புறப் பகுதிகளில் அறிமுகப்படுத்த இவர் விரும்புகிறார்.

வார நிறைவு நாட்களில் இன்டராக்டர்களுடைய பள்ளிகளில் சைக்கோமெட்ரிக் மற்றும் ஆப்டிட்யூட் தகுதித் தேர்வுகள் நடத்தப்படுகின்றன, இவற்றில் கலந்து கொள்ளவேண்டும் என இவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத்துடன், இந்த இன்டராக்ட் முன்னெடுப்பில் பெற்றோரை ஈடுபடுத்துவது முக்கியம் என்று சிங்க்ளா வலியுறுத்துகிறார். குழந்தை தன் முழுச்சாத்தியத்தை எட்டத் தேவையான ஆதரவைப் பெற்றோரால் தான் வழங்க இயலும். எங்கள் பெற்றோர் வழிகாட்டுதல் திட்டத்தின் வழியாக, எல்லா குழந்தைகளும் கல்வியில் சிறந்து விளங்குவதில்லை என்று புரிந்து கொள்ள நாங்கள் அவர்களுக்கு உதவுகிறோம்.

இதுவரை நாங்கள் பணிவாழ்க்கை வழிகாட்டுதல் திட்டத்தில் பெற்றோரை ஈடுபடுத்தியதில்லை. இது ஒரு மிகச் சிறந்த யோசனை, என்கிறார் வீர் ஹகிகத் பள்ளியின் முதல்வர் சர்ளா பட்னாகர்.■

# மூங்கில் வளர்ப்புக்கு வழிகாட்டும் RID 3181

ஜெய்ஸ்ரீ

ரோட்டரியின் ஏழாவது பகுதியின் மீதான கவனம் இப்போது அதிகம் பேசப்படுகிறது. அதாவது சமீபத்தில் கிளாஸ்கோவில் முடிவடைந்த COP26 பருவநிலை மாற்ற மாநாட்டில் RI தலைவர் சேகர் மேத்தா சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் ரோட்டரி மேற்கொண்டுவரும் முயற்சிகளை எடுத்துரைத்தார். சதுப்புநில மறுசீரமைப்பில் கவனம் செலுத்தவேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தியா, நேபாளம் மற்றும் மாலத்தீவு முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்களுக்கு RID 3181, 1,275 கிலோ மூங்கில் விதைகளை வழங்கியுள்ளது. ஒரு கிலோவில் சுமார் 80,000 விதைகள் உள்ளன. அது 10 கோடி விதைகளுக்குச் சமம் என்கிறார் மாவட்ட ஆளுநர் A R ரவீந்திர பட். சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாவட்டக் குழுத் தலைவர் C R ஹனுமந்த், முட்கள் நிறைந்த இந்திய மூங்கில் பூத்துக் குலுங்குவதைக் கண்டு, கர்நாடக வனத்துறையைத் தொடர்பு கொண்டு அடர்ந்த வனப்பகுதியான சாமராஜநகர் மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியினர் மூலம் மூங்கில் விதைகளை அதிக அளவில் திரட்டினார். இந்த விதைப் பைகள் ஒரு கிலோ ரூ.350 என்ற விலையில் கொள்முதல் செய்யப்பட்டன.

DG பட், மாவட்டத்தில் உள்ள ரோட்டரி சங்கங்களை மூங்கில் சாகுபடியை மேம்படுத்த அணி திரட்டினார். ரோட்டரி மாவட்டம் முழுவதும் 865 கிலோ மூங்கில் விதைகள் விநியோகம் செய்யப்பட்டன. கோனிகொப்பல் ரோட்டரி சங்கத்தின் தலைவர் நீதா கவரெம்மா தலைமையில் நிதி திரட்டப்பட்டு நாகர்ஹோல் புலிகள் காப்பகத்துக்கு 250 கிலோ விதைகளும், ஹனுமந்தப்பாவின் சொந்த சங்கமான மைசூர் வெஸ்ட் ரோட்டரி சங்கம் மூலம் பந்திபூர் புலிகள் காப்பகத்துக்கு 200 கிலோ விதைகளும் வழங்கப் பட்டன.

பத்து சதவீத விதைகள்தான் முளைத்து செடியாகும் என்று வைத்துக் கொண்டாலும் ஒரு வருடத்தில் 50 லட்சம் மரக்கன்றுகள் கிடைக்கும். பலவித நன்மைகள் கொண்ட புல் வகை. இது கார்பன் பிரிப்புக்கு உதவுகிறது. ஏராளமான மூங்கில்கள் இருந்தால் யானைகள் விவசாய நிலங்களுக்குச் செல்லாமல் காடுகளிலேயே தங்கியிருக்கும். ஆறாவது ஆண்டிலிருந்து அறுவடை செய்யப்படும் மூங்கில்கள் கிராமப்புற மக்களுக்கு மாற்று வருமானமாக இருக்கும் என்கிறார் ஹனுமந்த்.

“Friends of Evvironment” என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் தொடர்புடைய PDG அஜய் குப்தாவின் வழிகாட்டுதலுடன் ஹனுமந்த, மூங்கில் விதை நடவு குறித்த விடியோவை உருவாக்கி 450 ரோட்டேரியன்கள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான ரோட்டரி செயல்குழு (ESRAG-Enivironment Sustainability Rotary Action Group) உறுப்பினர்களுக்கு ஆன்லைன் மூலம் திரையிட்டு காட்டினார். உடனடியாக நாடு முழுவதிலிருந்து ஆர்டர்கள் வந்து குவிந்தன என்றார் ஹனுமந்த்.■

DG A R *ரவிந்திர பட் பன்டிப்பூர் புலிகள் சரணாலயத்திற்கு மூங்கில் விதைகளை அளிக்கிறார்.* Rtn C R *ஹனுமந்த், துணை ஆளுநர்* S R *ஸ்வாமி மற்றும்* RC *மைசூர் வெஸ்ட் தலைவர்* Dr B *சந்திரா ஆகியோரும் உடன் உள்ளனர்.*



# ரோட்டரி பின்னை ஒரு மனிதத்தன்மைச் சாதனையாளருக்கு வழங்கிய RI தலைவர் மேத்தா

ரோட்டரி செய்திக் குழு

புவனேஸ்வருக்கு (RID 3262) வருகை தந்த RI தலைவர் சேகர் மேத்தாவுக்குக் கல்வியாளர், கலிங்கா தொழில்துறைத் தொழில்நுட்பக் கல்விக் கழக நிறுவனர் அச்யுதா சமந்தா ஒரு கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கினார். உலகில் அமைதி, மகிழ்ச்சியைப் பரப்பும் நோக்கத்துடன் சமந்தா வழிநடத்தும் வழங்குதல் கலை (Art of Giving) என்ற மனிதத்தன்மை இயக்கத்தின் உலகத் தூதுவராக மேத்தா இருப்பார். இந்த NGO 100க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ளது, மக்களிடையில் அமைதி, மகிழ்ச்சியை உண்டாக்கும் சமூகச் செயல்பாடுகளில் ஈடுபடுகிறது.

அத்துடன், கலிங்கா சமூக அறிவியல் கல்விக் கழகம் RID 3262ல் சுமார் 30,000 ஏழைக் குழந்தைகளுக்குக் கிண்டர்கார்டன் முதல் உயர் கல்விவரை இலவசமாக வழங்குகிறது, அவர்களுக்குத் தங்குதல், உணவு வசதிகளையும் வழங்குகிறது. இந்த நிகழ்ச்சியில் பேசிய மேத்தா வழங்குதலின் அழகைப்பற்றியும், கல்வியால் முழு எழுத்தறிவு கிடைக்கும், நாட்டில் ஏழைமை, பசி நீங்கும் என்றும் பேசினார்.



*RI தலைவர் சேகர் மேத்தா கலிங்கா கல்வி கழக நிறுவனர் அச்யுதா சமந்தா அவர்களுக்கு DG சாந்தனு குமார் பானி முன்னிலையில் 'ரோட்டரி பின்' இடுகிறார்.*

மேத்தா சமந்தாவுக்கு ரோட்டரி லேபெல் பின்னை வழங்கி, அவரை ரோட்டரியில் இணைத்தார். புகழ் பெற்ற சமூகப் பணியாளராகவும் MPஆகவும் உள்ள இவர், தன்னுடைய வழங்குதல் கலை இயக்கத்தின் வழியாக இலவச கல்வியை வழங்கி உலகப் பசி மற்றும் ஏழைமையை நீக்கும் தன்னுடைய பணிக்காகப் பல நாடுகளில் பல குடிமையியல் பெருமைகளைப் பெற்றுள்ளார். ஒரு சிறந்த ரோட்டரியனுடைய எல்லாப் பண்புகளும் இந்தக் கல்வியாளரிடம் உள்ளன என்று குறிப்பிட்ட மேத்தா, சமந்தாவை உறுப்பினராகக் கொள்வதில் ரோட்டரி பெருமைப்படுகிறது'' என்றார். இந்த நிகழ்ச்சியில் RID 3262ன் DG சாந்தனு குமார் பானி, PDGகள், மூத்த ரோட்டரியன்கள், இரு அமைப்புகளின் கல்வியாளர்கள் கலந்து கொண்டார்கள்.




*(சமந்தாவின் பணியைப்பற்றி, ரோட்டரி நியூஸ் அக்டோபர் 2014 இதழில் படியுங்கள்: https://rotarynewsonline.org/their-smiles-tell-the-story/)* ■

# தில்லியிலுள்ள சேரி மக்களுக்கு 100 கை பம்ப்கள்

**V முத்துகுமரன்**



கிழக்கு தில்லியில் உள்ள யமுனா கத்தர் சேரிக் குடியிருப்பில் வசிக்கும் 45 வயது மாயா தேவி, அவருடைய நண்பர்கள், அவர்களுடைய குடும்பத்தினருடைய வாழ்க்கையில் ஒரு மகிழ்ச்சித் திருப்பம்: இந்தப் பகுதியில் 100 கை பம்ப்களை நிறுவியது RC டெல்லி சவுத் சென்ட்ரல், RID 3011. அதற்குக் காரணம், சங்கத் தலைவர் ரஜ்னீஷ் மிட்டலின் முன்னெடுப்பு. இப்போது, அவர்கள் குடிக்க அல்லது துணிகளைத் துவைக்க, சமையல் பாத்திரங்களைத் தேய்க்க நீரைக் கொண்டுவருவதற்கு வேறு எங்கும் செல்லவேண்டியதில்லை. யமுனை ஆற்றின் கரையில் 5–6 சதுர கிலோ மீட்டருக்குப் பரந்து விரிந்துள்ள “இந்த மிகப் பெரிய சேரிக் குடியிருப்பில் உள்ள மக்களுடைய துன்பங்களைப்பற்றி முன்னாள் நகரத்தலைவர், உள்ளூர் அவை உறுப்பினர் பிபின் பிகாரி சிங் எனக்குச் சொன்னார். இந்தக் குடும்பங்களின் துன்பங்களைக் குறைக்க ஏதேனும் செய்யும்படி அவர் என்னைக் கேட்டுக் கொண்டார்'' என்று நினைவுகூர்கிறார் மிட்டல்.

அக்ஷர்தாம் கோயிலுக்கும் தில்லி-நோய்டா நேரடிப் பறக்கும் சாலைக்கும் நடுவில் உள்ள கத்தர் சேரியில் சுமார் 3,000 குடும்பங்கள் (10,000 பலன் பெறுவோர்) வசிக்கிறார்கள், ஆனால், இங்கு குடிநீர், மின்சாரம், முறையான சாலைகள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லை. அவ்வப்போது இங்கு வருகிற தண்ணீர் டாங்கர்களைதான் இவர்கள் முழுதும் சார்ந்துள்ளார்கள். மோசமான தூய்மையின்மையால் இங்கு துர்நாற்றம் வீசுகிறது. வெளி ஆட்கள் இங்கு வந்து பணிபுரிவது சிரமம். “இங்கு வசிப்போருடைய தண்ணீர்ப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குக் கை பம்ப்களை நிறுவலாம் என்று நாங்கள் தீர்மானித்தோம்.

ஆனால், இங்கு 30 அடி தோண்டிய பிறகும் தண்ணீர் சேறு நிறைந்திருந்தது, பயன்படுத்த ஏற்றதாக இல்லை, இது அவர்களுக்கு ஏமாற்றம் அளித்தது. அதனால், நாங்கள் 50 அடி கீழே சென்று குடித்தல், மற்ற தேவைகளுக்கான பாதுகாப்பான தூய நீரைப் பெற்றோம்'' என்கிறார் மிட்டல். ஜல் (தண்ணீர்) என்று பெயரிடப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கை பம்பும் சுமார் ரூ.12,000–15,000 செலவில் நிறுவப் பட்டுள்ளது. மொத்தச் செலவான சுமார் 13




*இடதிலிருந்து 4வது சங்கத்தலைவர் ரஜினிஷ் மிட்டல், DGs அனுப் மிட்டல், அஜய் மதன் (3080), RID 3011 செயலாளர் விவேக் ஜெயின் மற்றும் AKS உறுப்பினர் முகேஷ் அகர்வால் ஜல் திட்ட துவக்க விழாவில்.*

லட்சத்தை உறுப்பினர்கள் பங்களித்துள்ளார்கள். அன்றாடக் கூலி ராம் பிரசாத் (35) இனிமேல் நாள்முழுக்க உழைத்துவிட்டுத் திரும்பி வந்து கை பம்பின்கீழ் குளிக்கலாம், இதை எண்ணி அவர் மகிழ்ந்து சிரிக்கிறார்.

இப்போது, குடிப்பதற்கும் மற்ற வீட்டுத் தேவைகளுக்குமான நீரைப் பெறுவதற்காக மக்கள் கை பம்ப்களின்முன் வரிசையில் நிற்கத் தொடங்கிவிட்டார்கள். “பம்ப்களைச் சுற்றித் துணி துவைக்கவும் பாத்திரம் தேய்க்கவும் நாங்கள் ஒரு கல் தளத்தை உருவாக்கியுள்ளோம்’’ என்கிறார் இவர். பம்ப்களில் தண்ணீர் 24x7 கிடைப்பதால், கத்தர் குடியிருப்பில் இப்போது தண்ணீர்ப் பற்றாக்குறை இல்லை.

கை பம்புக்கு அருகில் வசிப்பவர் அதன் பராமரிப்புக்குப் பொறுப்பேற்பார்.

கை பம்ப்களை மெய்நிகர் முறையில் தொடங்கிவைத்த DG அனுப் மிட்டல் இந்தச் சேரிக் குடியிருப்பின் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வு வழங்கிய இந்தச் சங்கத்தைப் பாராட்டினார். DG அஜய் மதன், RID 3080, இந்தத் தொடக்க விழாவில் கலந்துகொண்டார்.

### சூரிய ஒளி விளக்குகள்

இப்போது, மின்சாரம் இல்லாத இக்குடியிருப்பில் சூரிய ஒளி தெரு விளக்குகளை அமைப்பதற்கு இச்சங்கம் முனைந்துவருகிறது. இத்திட்டம் ஜூன் 30க்குள் நிறைவுசெய்யப்படும்’’ என்று உறுதியளிக்கிறார் சங்கத் தலைவர். 69 உறுப்பினர்களைக் கொண்ட இச்சங்கம் ராஜஸ்தானில் 35 தடுப்பு அணைகள் போன்ற மிகப் பெரிய தண்ணீர்த் திட்டங்களைச் செயல்படுத்திப் புகழ் பெற்றது, முந்தைய 4–5 ஆண்டுகளில் தில்லியின் 15 அரசுப் பெண்கள் பள்ளிகளில் WinS திட்டங்களை நடத்தியுள்ளது.■



## RID பரத் பாண்ட்யா 2022–26 TRF அறங்காவலர்

*RI இயக்குனர் குழு PRID பரத் பாண்ட்யா அவர்களை TRF அறங்காவலராக ஜூலை 2022 முதல் ஜூன் 2026 வரை நான்கு ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுத்துள்ளனர். பாண்ட்யா 2019–21 காலத்திற்கு RI இயக்குனராக செயலாற்றினார். மேலும் 2020–21 ஆண்டிற்கு RIயின் பொருளாலராகவும் இருந்தார்.*

# மாதவிடாய் சுகாதார விழிப்புணர்வுத் திட்டங்களுக்காக நிதி திரட்ட ஓவியங்கள் ஏலம்

ஜெய்ஸ்ரீ

இங்கிலாந்தில் உள்ள கிங்ஸ்டன் நகரில் நடந்த கண்காட்சியில் ரோட்டேரியன் B தாட்சாயிணி வரைந்த பத்து ஓவியங்களில் மூன்று விற்பனையாயின. அவர் தன்னிடம் இருந்த ஓவியங்களில் ஒன்றை, RID 1130க்கு உள்பட்ட பாஸ்போர்ட் ரோட்டரி சங்கத்தின் தலைவர் சுஜய் பால் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அவரிடம் வழங்கி யுள்ளார். அவர் மிஸோரமைச் சேர்ந்தவர் என்றாலும் லண்டனில் பிரபலமானவர். சுறுசுறுப்பான, திறன்மிக்க ரோட்டேரியன். அவர் அந்த ஓவியத்தை ஏலத்தில் விட்டு அதன் மூலம் கிடைக்கும் தொகையை சங்கத்தின் சேவைத் திட்டத்துக்கு பயன்படுத்திக் கொள்வார் என்கிறார் மீனம்பாக்கம் ரோட்டரி சங்கத்தில் (RID 3232) 21 ஆண்டுகளாக உறுப்பினராக இருக்கும் தாட்சாயிணி. மேலும் இவர் 30 ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரியின் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றவர்.

தற்போது மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்கான ரோட்டரி செயல் குழுவின் (RAG-MHH) நிதி திரட்டும் இயக்குநராக உள்ளார். இக்குழு கடந்த ஆண்டு உருவாக்கப்பட்டது. RC லண்டன் டவர் ஹைட்ஸ்-ன் ஷர்மிளா நாகராஜன் இதன் தலைவராக உள்ளார். RC சென்னை டெம்பிள் சிட்டி வித்யா ஷ்ரீனி துணைத் தலைவராகவும், ஸ்பெயின் நாட்டின் இபிஸா ரோட்டரி சங்கத்தின் டென்னஸி கில்ஸ்சன் செயலாளராகவும் உள்ளனர்.

இக்குழு உலகம் முழுவதும் உள்ள ரோட்டேரியன்களுக்கு பொதுவானது. வளர்ந்த நாடுகளில் 'பீரியட்' பிரச்னை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கம். அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவில் உள்ள மக்கள் சானிடரி நாப்கின்களை வாங்க முடியாத பெண்கள் பல நாடுகளில் இருப்பதை அறிந்தபோது வியப்பாக இருந்தது. இதன் விளைவாக இந்தியாவில் உள்ள சில கிராமங்களில் பெண்கள்



*RAG-MHH நிதி திரட்டும் இயக்குநர் B தாட்சாயினி, அதன் தலைவர் ஷர்மிளா நாகராஜன் மற்றும் RID 1130 PDG டோனி சர்மா ஆகியோர் ஓவிய கண்காட்சியில்.*

மாதவிடாய் காலத்தில் வெளியே தனிமைப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர் என்கிறார் தாட்சாயிணி. மாதவிடாய் காலத்தில் பெண்கள் சௌகரியமாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் அவர்களுக்கு மாதவிடாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், துணிபேடுகள் மற்றும் மாதவிடாய் கோப்பைகள் பயன்பாடு பற்றியும் பெண்களுக்கு எடுத்துரைப்பதில் ரோட்டரி செயல்குழு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. ஆண்களுடனும் இந்த உரையாடல்களை விரிவு படுத்துவதிலும் நாங்கள் செயலாற்றி வருகிறோம். இது சிறந்த புரிதல் மற்றும் ஆரோக்கியமான உறவு களுக்கு வழிவகுக்கும். மாதவிடாய் சுகாதார திட்டத்தைச் செயல்படுத்து வதற்கும், இளம் தளிர்கள் மற்றும் இளம் பெண்களுக்கு உதவுவதற்கான நிதி ஆதாரங்களை வலுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.


நிதி திரட்டும் இயக்குநராக அவர், RAG-க்கு நிதி திரட்டுவதற்காக தனது ஓவியங்களை காட்சிப் படுத்த விரும்பினார். ஓவியம் மற்றும் நுண்கலைத் துறையில் தொழிலாளர்கள் பங்களிப்பில் முதுகலைப் பட்டமும், நுண்கலைத்துறையில் முனைவர் பட்டமும் பெற்ற தாட்சாயிணி கூறுகையில், ‘எனது திறமையை நானே வெளிக்கொண்டுவர வேண்டும் என்று நினைத்தேன். 1860-களில் தென்னாப்பிரிக்காவில் ரயில் பாதைகள் அமைப்பதற்காக இந்தியாவிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் இடம் பெயர்ந்த தொழிலாளர்களின் பங்களிப்புக்காக அர்ப் பணிக்கப்பட்ட ஒரு அருங் காட்சியகத்தை உருவாக்கும் யோசனையை நான் அரசிடம் முன் வைத்தேன். நான் ஜோகன்னஸ்பர்க் மற்றும் டர்பனுக்குச் சென்று ஐந்து தலைமுறை புலம்பெயர்ந்த மக்களை கண்டுபிடித்தேன். அவர்களுக்கு தங்களது கொள்ளுத்தாத்தா உள்ளிட்ட முன்னோர்கள் எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்பது கூடத் தெரியாது’ என்றார் அவர்.

BCG தடுப்பூசி உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளராக 15 வருட காலம் பணியாற்றிய பிறகு, தனக்கு பிடித்தமான படம் வரைதல் மற்றும் ஓவியம் தீட்டுதலில் ரோட்டரியுடன் இணைந்து செயலாற்ற முடிவு செய்தார். இதற்காக கோவிட் பொது முடக்கத்துக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் என்கிறார் தாட்சாயிணி.

இந்த ஆண்டு ஜூன் மாதம் போலியோவுக்கு நிதி திரட்டுவதற்காக மெய்நிகர் முறையில் ஓவியக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய் தார். PRIDக்கள் பரத் பாண்ட்யா, கமல் சங்வி, RID-க்கள் A S வெங்கடேஷ் மற்றும் மகேஷ் கோட்பகி போன்ற தலைவர்கள் இதில் பங்கேற்றதால் கண்காட்சிக்கு ‘டைரக்டர்ஸ் கட்’ என பெயரிட்டிருந்தார். இந்த கண்காட்சியில் தாட்சாயிணியின் ஓவியங்கள் தவிர வேறு சில பிரபலங்களின் ஓவியங்களும் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. மொத்தம் 6 ஓவியங்கள் விற்பனையாயின. PRID கமல் சங்வி மற்றும் டாக்டர் அமீதா கோட்பாகி இருவரும் தலா ஒரு ஓவியத்தை வாங்கினர். ‘ஓவியக்கலையில் ஆர்வம் உள்ளவர்கள் அல்லது ஓவியக்கலையில் முதலீடு செய்பவர்கள் என்பதையும் தாண்டி, ஒரு நல்ல காரணத்திற்காக ஓவியங்களை வாங்க மக்கள் தயாராக இருப்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம்’ என்கிறார் தாட்சாயிணி. இந்த நிகழ்ச்சி போலியோவுக்காக ரூ.3.46 லட்சம் நிதி திரட்ட உதவியது.

RAG-MHH தலைவர் ஷர்மிளாவுடன் அவர் இந்த கருத்தை பகிர்ந்து கொண்டு விவாதித்த போது, டவர் ஹாம்லெட்ஸ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் என்ற முறையில், தனது சங்கத்தில் சோதனை முறையில் நடத்தலாம் என்று யோசனை தெரிவித்தார். இங்கிலாந்தில் கிங்ஸ்டனில் உள்ள








ஒரு அரங்கில் இந்தியாவின் கடலோரப் பகுதிகளை சித்தரிக்கும் தனது ஆயில் பெயின்டிங் ஓவியங்களை தாட்சாயிணி காட்சிப்படுத்தினார். இதுவும் மெய்நிகர் முறையில் நடைபெற்றது. இதில் மூன்று ஓவியங்கள் 3000 பவுண்டுகளுக்கு விற்கப்பட்டன. இதன் மூலம் கிடைத்த தொகையில் 20 சதவீதத்தை மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத் திட்டங்களுக்கான நிதியாக சங்கத்திற்கு வழங்கினார். ஒரு ஓவியம், ஏலம் விடுவதற்காக பாஸ்போர்ட் ரோட்டரி சங்கத்துக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது. மேலும் இரண்டு ஓவியங்கள் விற்பனை செய்யப்பட்டன. மெய்நிகர் தளத்தில் நவம்பர் 30ஆம் தேதி வரை இந்த கண்காட்சி நடைபெற்றது என்றார் தாட்சாயிணி.

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் மற்றொரு கண்காட்சி நடத்த திட்டமிட்டுள்ளோம். மேலும் இந்த முறை எங்களின் RAG-க்கு நிதி திரட்ட உள்ளோம். பிரபலமான மற்றும் மக்களால் அறியப்படாத கலைஞர்களின் 100 கலைப்படைப்புகள் எங்கள் தொகுப்பில் உள்ளது. எங்களது நோக்கத்துக்காக நிதி திரட்டும் அதே சமயத்தில் அவர்களின் படைப்புகளையும் விளம்பரப்படுத்துகிறோம். இதன் மூலம் அவர்களின் படைப்புகள் விற்பனையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் RAGக்கு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த கண்காட்சிகளின் விளைவாக RID 3232க்கு உட்பட்ட ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த கலை விரும்பிகள் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் DGN ரவி ராமன், தமது அலுவலகத்தில் இதை தொடங்கிவைத்தார். இதில் தற்போது 12 உறுப்பினர்கள் உள்ளனர். ஓவியக் கலையில் ஆர்வம் உடையவர்கள், ஓவியம் வரைவதை பொழுதுபோக்காக கொண்டவர்களை ஒன்றிணைத்து அறக்கட்டளை நிகழ்வுகளுக்கு தங்களது கலைப்படைப்புகளை நன்கொடையாக வழங்குவதற்கு அவர்களை ஊக்கப்படுத்துவோம் என்றார் தாட்சாயிணி.■

---

TRF உதவியுடன் நற்பணி

# ஜலந்தரில் நடமாடும் மேமோகிராஃபி மருந்தகம்

ரோட்டரி செய்திக் குழு




ஜலந்தர் வெஸ்ட் ரோட்டரி சங்கம், RID 3070, சமீபத்தில் TRF, RC சுட்பரி சன்ரைசர்ஸ், கனடா ஆதரித்த பன்னாட்டு நல்கையின் வழியாகப் புற்றுநோய் கண்டறியும் வேன் ஒன்றை அறிமுகப்படுத்தியது. மேமோகிராஃபி (முலை ஊடு கதிர்ப் படம்) மற்றும் பாப் ஸ்மியர் (பூச்சுப்) பரிசோதனைக் கருவிகளைக் கொண்ட இந்த வேன் இந்த மாவட்டத்தின் கிராமங்களுக்குத் தொடர்ந்து செல்லும், அங்குள்ள பெண்களுக்கு மார்பக மற்றும் கருப்பை வாய்ப் புற்றுநோய் உள்ளதா என்று பரிசோதிக்கும்.

மருத்துவர்கள், செவிலியர், தொழில்நுட்ப வல்லுனரைக் கொண்ட இந்த வேன் கிராமங்களின் தேவைக்கு ஏற்ப ஒரு வாரமோ ஒரு மாதமோ முகாம் நடத்தும். இந்த முகாம்களில் இளம் பெண்களுக்குக் கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்துகளும் வழங்கப்படும் என்றார் PDG டாக்டர் SPS குரோவர். இவரும் இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவரான குல்தீப் சிங்கும் இந்தத் திட்டத்தை உருவாக்கியவர்களில் முக்கியமானவர்கள். கிராமத் தலைவர்கள், மருத்துவ, பள்ளி அலுவலர்களுடன் பேசிப் புற்றுநோய்ப் பரிசோதனை முகாம்கள் திட்டமிடப்படும் என்று குரோவர் தொடர்ந்து கூறினார். புற்றுநோய் உள்ளவர்கள் கூடுதல் சிகிச்சைக்காக, ரோட்டரி ஆதரிக்கும் மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுவார்கள்.

இந்த நடமாடும் மருந்தகத்தை டாக்டர் KSG நினைவுத் தொண்டு அறக்கட்டளைப் பராமரிக்கும்.■

# RI தலைவர் மேத்தா திறந்து வைத்த RC ஜூபிளி ஹில்ஸ் கற்றல் மையம்

ரோட்டரி செய்திக் குழு

சரத்கோபால் ஜூபிளி ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தின் கற்றல் மையத்தை ஹைதராபாதில் கடந்த அக்டோபர் மாதம் ரோட்டரி தலைவர் சேகர் மேத்தா திறந்துவைத்தார். RC ஜூப்ளி ஹில்ஸ்-ன் உறுப்பினர்களான சரத் கோபால் கற்றல் மையத்துக்கான 1800 சதுர அடி கெஜம் நிலத்தை நன்கொடையாக வழங்கினர். சங்கத்தின் முன்னாள் தலைவர் பிரசாத் ஆதரவில் புதிய உறுப்பினரான பெஞ்சால ரெட்டி, ரூ.50 லட்சம் நன்கொடை வழங்கி கட்டடத்துக்கான செலவை ஏற்றுக்கொண்டார்.

புதிய கட்டடத்துக்கு டைல்ஸ் போடுவது, கழிவறை குழாய்கள் அமைப்பது, வர்ணம் பூசுவது உள்ளிட்ட செலவினங்கள் ரூ.20 லட்சம் நிதியும் பிரசாத் மூலம் நன்கொடையாளர்கள் மூலம் பெறப் பட்டது. ரோட்டரி உறுப்பினர் ராமன் ரெட்டி, கட்டுமானப்பணிகளை மேற்பார்வையிட்டார்.

RID 3150-ன் DG பிரபாகர், சங்கத்தின் தலைவர் சுரேஷ் குப்தா மற்றும் மூத்த ரோட்டரித் தலைவர்கள் மற்றும் ரோட்ராக்டர்கள் முன்னிலையில் RI தலைவர் சேகர் மேத்தா இந்த கற்றல் மையத்தை திறந்து வைத்தார். PDG சாம் பதிபண்ட்லா பேசுகையில், இளைஞர்கள் மற்றும் பெண்கள் தொழில் முனைவோராகவும், வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் திறன் வளர்ப்பு பயிற்சி மையமாகவும் இது செயல்படும். தகவல் தொடர்பு தவிர, தகவல் பரிமாற்றம் மற்றும் ஆங்கிலமொழி பேச்சுத்திறன், மென்மையான திறன்கள் மற்றும் "டாலி" கணக்கிடுதல் முறை, அலுவலக பராமரிப்பு, அலுவலக முன்பகுதி மேலாண்மை, தொழிற் சாலைகளுக்குத் தேவையான நிதி மேலாண்மை பற்றிய அறிவு ஆகியவை இங்கு கற்றுத்தரப்படும் என்றார்.




*RI தலைவர் சேகர் மேத்தா கற்றல் மையத்தை துவக்கி வைக்கிறார். PDGs V ஜவஹர், சாம் பதிபந்தலா, ரத்ன ப்ரபாகர் ஆனே மற்றும் Rtn ராம் ப்ரசாத் ஆகியோரும் உள்ளனர்.*

இந்த மையம் ரோட்டரியின் கொள்கைகளின் அடிப்படையில் தரமான மனிதவள மேம்பாட்டிற்கான இடமாக செயல்படும் என்று நம்புவதாக RC ஜீப்ளி ஹில்ஸ்-ன் தலைவர் குப்தா தெரிவித்தார்.

கடந்த 2020ம் ஆண்டு மெய்நிகர் மற்றும் நேருக்கு நேர் வகுப்புகள் மூலம் ஏற்கெனவே 1,500 மாணவர் களைச் சென்றடைந்ததுள்ளது. "டாலி" கணக்கிடுதல் முறையைக் கற்றுக்கொண்ட சிலர், பயிற்சி க்களத்திலும் வேலை வாய்ப்பிலும் உள்ளனர். எனினும் இந்த மையத்தில் நேரிடை வகுப்புகள் வரும் 2022ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தொடங்கும் என்றார்.

RI தலைவர் சேகர் மேத்தா கூறுகையில், இவை சேவைக்கான ஆலயங்கள். இதன் மூலம் நூற்றுக் கணக்கானவர்களின் வாழ்வில் ஒளியேற்றி தாக்கத்தை ஏற்படுத்தியுள் ளோம். மனைவி ராஷியும், தாமும் உதான் கல்வி அறக்கட்டளை மூலம் சஞ்சிதா என்ற பெண்ணின் கல்விக்கு உதவியதையும் அவர் விவரித்தார். தற்போது வசதியான வாழ்க்கை நடத்தும் அளவுக்கு சம்பாதிக்கும் வகையில் அவர்களின் குடும்பம் முன்னேறியிருப்பதாகவும் மேத்தா குறிப்பிட்டார்.

இந்த மையத்திலிருந்து இதுபோன்ற கதைகள் வெளிவருவதைக் கேட்க ஆவலுடன் காத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். பெண்களுக்கான சிறப்பு வகுப்புகளை நடத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்த சங்கம் திட்டமிட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகவும் மேலும் கூறினார். ■

# மும்பையில் நைஜீரியக் குழந்தைக்கு இதய அறுவைச் சிகிச்சை

V முத்துகுமரன்

இந்த ரோட்டரி ஆண்டில் (2021–22) தான் முன்னிறுத்தப்போகும் விஷயங்களில் ஒன்று, வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு 100 இதய அறுவைச் சிகிச்சைகளைச் செய்தல் என்று DG ராஜேந்திர அக்ரவால், RID 3141, அறிவித்ததைத் தொடர்ந்து, RCகள் மும்பை திவாஸ் மற்றும் ஆளுநருடைய இல்லச் சங்கமாகிய பாம்பே க்வீன் சிட்டி ஆகியோர் ஜூலையில் ஒரு நைஜீரியக் குழந்தையின் அறுவைச் சிகிச்சையை ஆதரித்தார்கள்.

நைஜீரியாவைச் சேர்ந்த, தீவிர இதயப் பிரச்சனையைக் கொண்ட மூன்று வயது எம்மா ஜூலை 22 அன்று தன் தாய் லூசி ஒபாஜ்வெயுடன் மும்பை விமான நிலையத்தில் வந்து இறங்கினார். அவர் உடனடியாகப் பாய் ஜெர்பாய் வாடியா மருத்துவ மனையில் Dr விஷ்வா பாண்டா பராமரிப்பில் அனுமதிக்கப்பட்டார். கோவிட் நெறிமுறை காரணமாக 48 மணிநேரம் அவரைத் தனிப் பிரிவில் வைத்திருந்தபின், பல பரிசோதனைகள் நடத்தப்பட்டன, அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது. அவர் ஜூலை 30 அன்று மருத்துவமனையிலிருந்து வெளிவந்தார். இரண்டு 2D எக்கோ பரிசோதனைகளின்மூலம் அனைத்தும் இயல்பாக இருப்பதை உறுதி செய்த பிறகு, அவர் நைஜீரியா திரும்பலாம் என்று மருத்துவர்கள் சம்மதித்தார்கள்.

மாவட்ட அவென்யூத் தலைவர் (பன்னாட்டுக் குழந்தை அறுவைச் சிகிச்சைகள்) லீனா ஷா இந்த நைஜீரியக் குழந்தைக்கும் அவருடைய தாய்க்கும் ஒரு மெய்நிகர் வழியனுப் பல் நிகழ்ச்சியை நடத்தினார், இதில் DG அகர்வால் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். தன்னுடைய அனுபவத்தைத் தொகுத்துப் பேசிய ஒபாஜ்வெ, என்னுடைய குழந்தையை நலமாகத் திரும்ப அழைத்துச்செல்வது ஒரு கனவுபோல் உள்ளது'' என்றார். ஒருவிதத்தில், இது போன்ற சிறந்த திட்டங்கள் RID 3141ல் உள்ள ரோட்டரியன்களுக்கு வழங்கும் மகிழ்ச்சியை அவர் தொகுத்துச் சொல்லியுள்ளார் என்றார் ஆளுநருடைய முதன்மை உதவியாளர் Rtn வீரேந்திர விட்ஜ்.

DG அகர்வால் குழந்தைகளுக்கான

*துணை கவர்னர் தீபா கோயன்கா, DG ராஜேந்திர அகர்வால், லூசி ஒபாஜ்வெ மற்றும் குழந்தை எம்மா, Rtns சுமன் அகர்வால் மற்றும் லீனா ஷா.*



இதய அறுவைச் சிகிச்சைகளில் பேரார்வம் கொண்டுள்ளார். இதுவரை அவர் 2,500 ஏழைக் குழந்தைகளுடைய இலவச அறுவைச் சிகிச்சைகளுக்குத் தனிப்பட்ட நிதி அளித்து உதவியுள்ளார் அல்லது ஆதரவுகளுக்கு ஆவன செய்து உதவியுள்ளார். RI தலைவர் சேகர் மேத்தா RID 3141 வெளிநாட்டுக் குழந்தைகளுக்கு 100 அறுவைச் சிகிச்சைகளைச் செய்யவேண்டும் என இலக்கு அமைத்துள்ளார். DG இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டுள்ளார், முன்பு நாம் பிற நாடுகளிடமிருந்து நிதி உதவி பெற்றுவந்தோம், இப்போது நாம் உலகெங்குமுள்ள நோயாளிகளுக்கு உதவும் திறனுடன் உள்ளோம் என்பதை இது நிரூபிக்கும்'' என்றார் விட்ஜ். நவம்பர் 2020ல் RID 3141 உதவியுடன் இதய அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட முதல் வெளிநாட்டுக் குழந்தை, நைஜீரியாவைச் சேர்ந்த எம்மானுவெல்லா.



மும்பையில் உலகத் தரத்திலான மருத்துவமனைகள் இருப்பதாலும், இங்கு 100க்கும் மேற்பட்ட சங்கங்கள், 6,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருப்பதாலும், இவர்களில் பெரும்பாலானோர் உயர் நிகர மதிப்புத் தனிநபர்கள் என்பதாலும், உலகெங்குமுள்ள ஏழைக் குழந்தைகளின் உயிர்களைக் காக்கும் இதய அறுவைச் சிகிச்சைகளை முன்னின்று செய்யும் திறன் எங்களிடம் உள்ளது. அடுத்த ஏழு மாதங்களில் ஆப்பிரிக்கக் குழந்தைகளுக்குக் குறைந்தது 50 இதய அறுவைச் சிகிச்சைகளைச் செய்ய DG அகர்வால் திட்டமிட்டுள்ளார். லூசியையும் அவருடைய குழந்தையையும் நைஜீரிய விமான நிலையத்தில் ரோட்டரியன்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள், அந்தத் தாய்க்கு இதை ஒரு சிறப்புக் கணமாக ஆக்கினார்கள்'' என்றார் அகர்வால். இந்த அறுவைச் சிகிச்சைத் திட்டத்தை வெற்றி பெறச் செய்த அவென்யூக் குழுத் தலைவர் லீனா தலைமையிலான மாவட்டக் குழுவை அவர் பாராட்டினார். ■

---

## பள்ளி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கிய தியோனர் ரோட்டரி சங்கம்

ரோட்டரி செய்திக் குழு

RID 3142-க்கு உட்பட்ட தியோனர் ரோட்டரி சங்கம் சார்பில், அண்மையில் மும்பையில் உள்ள சேரிப் பகுதியில் அமைந்துள்ள சுபாஷ்சந்திர போஸ் வித்யாமந்திரில் 7-ம் வகுப்பு படிக்கும் 105 மாணவர்களுக்கும் 10 ஆசிரியர்களுக்கும் 8 அங்குல சிறிய மடிக் கணினி வழங்கப்பட்டது. அவற்றின் செயல்பாடு எப்படியிருக்கிறது என்று பார்த்துவிட்டு மூன்றாண்டு களுக்குப் பிறகு அவற்றை மாற்றிக்கொடுப்போம் என்று “ஒவ்வொரு வருக்கும் ஒன்று” திட்டத்தின் தலைவர் ரோஹன் டிசௌசா வும், திட்டத்தை செயல் படுத்துபவரும் சங்கத் தின் தலைவருமான சுதிர் மேத்தா இருவரும் தெரிவித்தனர். மடிக் கணினிக்கான செலவுகளை Savex Technologies என்ற நிறுவனமும் ஆசிரியர் களுக்கும் மாணவர்களும் பயிற்சி அளிக்கும் பொறுப்பை கோடக் கல்வி அறக்கட்டளையும் ஏற்றுக்கொண்டது.



தியோனர் ரோட்டரி சங்கம், ஏற்கெனவே மகிழ்ச்சிப் பள்ளி திட்டத்தின் கீழ் அவர் களுக்கு பல்வேறு வசதிகள் இலவசமாக செய்துகொடுக்கப் பட்டுள்ளன. ■

# ஆதிவாசி பழங்குடியினர் வாழ்வில் ஒளியேற்றிய "சூரியசக்தி மின்சாரம்"

V முத்துகுமரன்

வால்பாறை தாலுகாவில் உள்ள கூமாட்டி ஆதிவாசி பழங் குடியினர்களின் இன்னல்கள் குறித்து வனக்காப்பாளர் மணிகண்டன், RC சேலம் சென்ட்ரல் (RID 2982) முன்னாள் தலைவர் சுரேஷ்குமாரிடம் தெரிவித்தபோது ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் வாழும் பழங்குடியின மக்கள் அன்றாடம் சந்திக்கும் இன்னல்கள் குறித்து சங்கத்தின் உறுப்பினர்களுக்கு எந்த துப்பும் கிடைக்கவில்லை. விரைவில் வனக்காப்பாளரிடமிருந்து எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், புலிகள் காப்பக பகுதியில் வசிக்கும் 36 கூமாட்டி பழங்குடியினர் குடும்பத்தினர் மோசமான நிலையில் வாழ்வதாகவும், அரசு அவர்களுக்கு மின்விநியோகமோ அல்லது கான்கிரீட் வீடுகளையோ கட்டித்தரவில்லை என்று தெரிவித்திருந்தார் ARRFC PDG R வாசு.

இந்த கடிதத்தைத் தொடர்ந்து வாசு தலைமையில் நான்குபேர் அடங்கிய குழு பொள்ளாச்சியிலிருந்து 65 கி.மீ. தொலைவில் அமைந்திருந்த அந்த குக்கிராமத்துக்கு சென்றது. அவர்களின் அடிப்படைத் தேவை என்ன? அவர்களின் வாழ்க்கையை எளிதாக்க என்ன செய்ய முடியும் என்பதைத் தெரிந்துகொள்ள அவர்களுடன் கலந்துரையாடினோம். வன விலங்குகள் வாழும் இப்பகுதியில் மின்சாரத்துக்கும் வீடுகளுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது தெரிய வந்தது. இதையடுத்து அவர்கள் வசிக்கும் பகுதியிலும் அவர்களின் குடிசைகளுக்கும் சூரியசக்தி மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்தோம் என்று நினைவுகூர்ந்தார் வாசு.

உடனடியாக 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர்த் தொட்டி நிறுவப்பட்டது. பழங் குடியினர் தண்ணீர் பெறும் வகையில் மலைப்பகுதியிலிருந்து நீளமான குழாய்கள் அமைக்கப்பட்டன.




*PDG R வாசு மளிகை சாமான்களை ஒரு பெண்ணிடம் வழங்குகிறார். மாவட்ட செயலாளர் ராஜேஷ், DG K சுந்தரலிங்கம் மற்றும் சங்கத்தலைவர் தமிழ்மோகன் ஆகியோரும் உள்ளனர்.*

தெருக்களில் 20 சூரியசக்தி மின் விளக்குகளும் ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு சூரிய சக்தி மின்விளக்கும் நிறுவப்பட்டன. இப்போது போதிய வெளிச்சம் கிடைப்பதால் புலிகள் மற்றும் வன விலங்குகளால் தாக்கப்படுவோமோ என்ற அச்சத்தில் அவர்கள் வாழவேண்டியதில்லை என்று மகிழ்ச்சி தெரிவித்தார் வாசு. ஆனால், பழங்குடியினர், தங்கள் வாழ்வாதாரத்திற்காக வேலை தேடி தினமும் 12 கி.மீ. தொலைவில் உள்ள வால்பாறை அல்லது டாப் ஸ்லிப் செல்லவேண்டும். அடர்ந்த காட்டுப்பகுதி என்பதால் கடும் சட்டம் காரணமாக சாலைப் போக்குவரத்துக்கு சாத்தியமில்லை.

மாவட்ட ஆளுநர் K சுந்தரலிங்கம், சங்கத்தின் தலைவர் தமிழ்மோகன், செயலர் ராஜேஷ் உள்ளிட்ட 10 ரோட்டேரியன்கள், கூமாட்டிக்குச் சென்று 100 மழை கோட்டுகள் மற்றும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டு சமையல் பாத்திரங்கள், பாய்கள், போர்வைகள், ரூ.1,000 மதிப்புக்கான மளிகைப் பொருள்கள் அடங்கிய பைகள், காய்கறி விதைப் பாக்கெட்டுகள் ஆகியவற்றை வழங்கினர். கான்கிரீட் வீடுகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதால் விரைவில் அவர்களின் குடிசைகள் பழுது நீக்கப்படும் என்றார் வாசு. ரூ.3.5 லட்சத்தில் மதிப்பிலான இத்திட்டம் பழங்குடியினர் வசிக்கும் கிராமங்களில் 16 இடங்களில் RID 3203 ஆதரவுடன் ரூ.45 லட்சத்தில் சர்வதேச மானிய உதவியுடன் செயல்படுத்தப்படும்.

இப்போது எங்கள் வாழ்வில் இருந்த இருள் அகன்று ஒளி கிடைத்து விட்டது. எங்கள் குடிசை சுத்தமாக உள்ளது. குழாயில் தண்ணீர் வருகிறது. இரவு பாயில் படுத்து தூங்குகிறோம் என்று கூறி ஆதிவாசி பழங்குடியினர் தலைவரான மணி மகிழ்ச்சி தெரிவித்தார். ஆனால், அவர்களின் கஷ்டம் தீர்ந்துவிடவில்லை. ஒவ்வொரு பழங்குடியினருக்கும் ஆண்டுக்கு மூன்று மாதங்கள் தினக்கூலி ரூ.200 என்ற அடிப்படையில் வேலை கிடைக்கிறது. அரசிடமிருந்து இலவச ரேஷன் பொருள்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், அவர்களின் அடிப்படைத் தேவைகள் இன்னும் முழுமையாக பூர்த்தி அடையவில்லை. அதனால் அவர்கள் இன்னமும் பழமையான வாழ்க்கை முறையையே தொடர வேண்டியுள்ளது என்கிறார் வாசு.■

---

# ஹூப்ளியில் பார்வைக் குறைபாடு கொண்டோருக்கு ஸ்மார்ட் விஷன் கண்ணாடிகள்

ரோட்டரி செய்திக் குழு



DG *கௌரிஷ் தோண்ட் மற்றும் சங்கத்தலைவர் மகிமா மோகித் பார்வையற்றோருக்கு சிறப்பு கருவி வழங்கும் விழாவில்.*

RC மெட்ராஸ் ஈஸ்ட், RID 3232, நடத்தும் 'Project Drishti' என்ற திட்டத்தால் ஊக்கம் பெற்ற RC ஹூப்ளி வித்யாநகர், RID 3170, "கண்ணின் கதை" என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது, பெங்களூரைச் சேர்ந்த ஸ்மார்ட் ஹெல்த் க்ளோபல் நிறுவனம் வடிவமைத்த Smart Vision Glasses (SVS) பார்வைக் குறைபாடு கொண்ட 16 மாணவர்களுக்கு வழங்கியுள்ளது. உற்பத்தியாளர்களுடன் பேசி இவற்றைப் பெறுவதற்கு RCME எங்களுக்கு உதவியது. ஒவ்வொரு கருவியின் விலை ரூ.25,000. ஹூப்ளியைச் சேர்ந்த VRL லாஜிஸ்டிக்ஸ், தன்னுடைய CSR முயற்சியின் கீழ் இந்தத் திட்டத்தில் எங்களுடன் இணைந்துள்ளது" என்கிறார் சங்கத்தலைவர் மகிமா மோகித்.

தன் மாவட்டத்தில் உள்ள சங்கங்கள் ஸ்மார்ட் ஹெல்த் க்ளோபல் CEO ராமு முத்தங்கியுடன் உரையாடுவதற்காக ஜூம் கருத்தரங்கை நடத்தினார். பல சங்கங்கள் இந்தத் திட்டத்தில் பங்கேற்க விரும்புகின்றன, DG கௌரிஷ் தோண்ட் இந்தக் கருவியைப் பெரிய அளவில் பெறுவதற்குக் கோரிக்கை வைத்துள்ளார்" என்கிறார் இவர்.

இத்திட்டத்துக்குக் கிடைத்துள்ள வரவேற்பைக் கண்டு மகிழும் RCME சங்கத்தலைவர் M ஸ்ரீனிவாச ராவ், பார்வைக் குறைபாடு கொண்டவர்களுடைய வாழ்க்கைகளை மாற்றும் வினையூக்கியாக திட்டம் ஆகியிருப்பது மகிழ்ச்சி. இந்தத் திட்டம் ரோட்டரி நியூஸி-ல் வெளியான பிறகு, பலரும் இதுபற்றி என்னிடம் விசாரிக்கிறார்கள்" என்றார்.■

# அமெரிக்க சமாரியர்கள் கிராமப்புற இந்தியாவுக்கு மருத்துவக் கருவிகளை வழங்கி உதவுகிறார்கள்

ரோட்டரி செய்திக் குழு



IPDG *பாலாஜி பாபு மயிலாடுதுறை மருத்துவமனையிற்கு மருத்துவக்கருவிகள் வழங்குகிறார்.*



நோய்ப்பரவலின்போது, சிலிக்கான் வாலி ஃபார் க்ளோபல் இம்பாக்ட் ரோட்டரி சங்கமும் அமெரிக்காவைச் சேர்ந்த, அறிவியலாளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், கொள்கை உருவாக்குநர்கள் போன்றோரைக் கொண்ட இந்தியக் கோவிட் SOS என்ற தன்னார்வலர் அமைப்பும் சேர்ந்து பணம் திரட்டி, இந்தியாவின் தொலை தூர மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள முதன்மை நல மையங்களின் பயன்பாட்டுக்காக BiPAP/CPAP என்ற மருத்துவக் கருவியை (ஒரு வகை எளிய செயற்கை மூச்சு விடல் கருவி) அனுப்பிவைத்தன.

இந்த இயந்திரங்கள் ஒவ்வொன்றின் விலை ரூ.70,000 என்றும், பிரிக்கக்கூடிய இரண்டு பகுதிகளாக இவை வருகின்றன என்றும் RID 2981 IPDG பாலாஜி பாபு விளக்கினார். ஊடுருவாத வகையைச் சேர்ந்த இந்த இயந்திரம் ஓர் அடிப்படை வடிவச் செயற்கை மூச்சு விடல் கருவி ஆகும். இதை அமெரிக்காவைச் சேர்ந்த ரோட்டரியன்களும் பிற நன்கொடையாளர்களும் கொடையளித்திருக்கிறார்கள். இவர்களுடைய நோக்கம், மருத்துவக் கருவிகள் தேவைப் படுகிற, ஆனால் அவற்றைப் போதுமான அளவில் பெற்றிருக்காத தொலைதூர மற்றும் கிராமப்புற PHCக்களில் உள்ள நோயாளிகளுக்கு உதவுவது.

இணையத்தில் கிடைக்கும் தகவல்களின்படி, BiPAP என்பது முதன்மையாக இதயம், நுரையீரல் மற்றும் நரம்பு சார்ந்த, தூக்கத்தின் போது கட்டமைப்புள்ள மூச்சு

வழி ஆதரவைக் கோருகிற குறைபாடுகளைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. CPAP மற்றும் BiPAP ஆகிய இரு இயந்திரங்களும் பல துணைக் கருவிகளுடன் கிடைக்கின்றன. கிராமப்புறப்பகுதிகளில் கோவிட் தொடர்பான மற்றும் பிற பிரச்சனைகளுக்கும் இந்த இயந்திரங்கள் தேவைப்படுகின்றன, குறிப்பாக குழந்தைகளுக்கு இவை தேவைப்படுகின்றன. அதனால், இதை வழங்கத் தீர்மானித்தோம்'' என்கிறார் பாலாஜி.

தொடர்ந்து நடைபெறும் இந்தத் திட்டத்தின்படி ஏற்கெனவே 126 இயந்திரங்கள் பெறப்பட்டுக் கிராமப்புறப்பகுதிகளுக்குக் கொடையளிக்கப்பட்டுள்ளன. RC சிலிக்கன் வாலி க்ளோபல் இம்பாக்ட்டைச் சேர்ந்த, கேரளத்தின் பாலக்காட்டிலிருந்து வருகிற PDG ரமேஷ் ஹரிஹரன் இதற்கு முன் தன்னுடன் காரைக்காலில் ஒரு திட்டத்தில் பணியாற்றியதாகவும், அவர் ஜூம் வழியாகத் தன்னைத் தொடர்புகொண்டதாகவும் இவர் தொடர்ந்து கூறுகிறார். நிதி திரட்டுதல், இயந்திரங்களைப் பெறுதல், அவற்றை இந்தியாவுக்கு அனுப்புதல் ஆகியவற்றை அமெரிக்கா மற்றும் இந்தியாவி லிருந்து தன்னார்வலர்கள்'' என்ற ஓர் இணை முன்னெடுப்பின் வழியாக அவர் ஒருங்கிணைத்தார். சில இயந்திரங்கள் சண்டிகர், பெங்களூரு மற்றும் ஹைதராபாத் அருகிலுள்ள கிராமப் புறப்பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஜூலை 2021ல்மூன்று இயந்திரங்கள் தமிழ்நாட்டில் உள்ள மயிலாடுதுறை மருத்துவ மனையிற்கு வழங்கப் பட்டுள்ளன. மற்றவை RID 2981ல் உள்ள பல தொலைதூர PHCக்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. கொடைக்கானல், உதகமண்டலத்துக்கு அருகில் உள்ள மலைப்பகுதிகளும் இதில் பலன் பெற்றுள்ளன.■

---

## எழுத்தறிவு திட்டங்களுக்கு GG பெறுவது தொடர்பான மெய்நிகர் நிகழ்ச்சி

கிரண் ஜெஹரா



அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் திட்டங்களுக்கு சர்வதேச மானிய உதவிக்கு ஒப்புதல் பெறுவது குறித்து ரோட்டேரியன்களுக்கு விளக்குவதற்காக RID 3232 சார்பில் அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவு தொடர்பான ஒரு மாத கால பயிற்சி திட்டத்தை ரோட்டரி செயல் குழு ஆன்லைன் முறையில் நடத்தியது. இத்திட்டத்தின் பெயர் "வித்யார்த்தி". பல சங்கங்கள் எழுத்தறிவு திட்டம் என்றால் மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள், எழுதுபொருள்கள் வாங்கிக் கொடுப்பது அல்லது வகுப்பறைகளுக்கு நாற்காலி, பெஞ்சுகள் வாங்கித் தருவது என்று நினைக்கின்றனர். ஆனால், எழுத்தறிவுத் திட்டம் அத்துடன் நின்று விடுவதில்லை. முழுமையான எழுத்தறிவுத் திட்டங்களை திட்டமிடவும், புரிந்து கொள்ளவும் ரோட்டேரியன்கள் உலகம் முழுவதும் உள்ள ஆதாரங்களை அணுகுவதற்கு வித்யார்த்தி உதவி செய்யும் என்கிறார் அடிப்படைக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் திட்டங்களை தணிக்கை செய்யும் வசந்தி ரங்கநாதன். அறிவாற்றல் திறனை அதிகரிக்கச் செய்யும் ஊட்டச்சத்து திட்டத்தை சர்வதேச நிதியுதவியுடன் ஜோஹன்னஸ்பர்கில் செயல்படுத்தப்பட்டதை அவர் உதாரணமாக சுட்டிக்காட்டினார். திட்ட அளவிடுதல் மற்றும் வெளிப் பாடுகள் ஒருபுறம் இருந்தாலும் ரோட்டேரியன்கள், தங்களின் சர்வ தேச நிதியுதவித் திட்டம் எவ்வாறு கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சென்னை, மாம்பலம் மற்றும் அம்பத்தூர் ரோட்டரி சங்கங்களின் எழுத்தறிவுத் திட்டத்தின்போது காட்சிப்படுத்தப்பட்ட வித்யார்த்தி குவளைகள், நினைவுப் பரிசுகள் ஆன்லைன் விற்பனை மூலம் ரூ.7,700 நிதி திரட்ட முடிந்தது. DG J ஸ்ரீதர் $25,000 வித்யார்த்தி அறக்கட்டளை நிதியை மாவட்டத்தில் எழுத்தறிவுத் திட்டங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என அறிவித்தார்.

RI தலைவர் சேகர் மேத்தா, தனது செய்தியில், ஆன்லைன் மூலமான வித்யார்த்தி பயிற்சி திட்டங்களை செப்டம்பர் மாதத்தில் மட்டுமல்லாமல் அடிக்கடி நடத்த வேண்டும் என்று தெரிவித்தார்.■

# வடகிழக்கில் ஒரு மருத்துவக் கல்லூரி

தீபாலி போர்தாகுர் மற்றும் ஷில்பி சுதா கோஸ்வாமி

நம்பிக்கையில்தான் கனவு உள்ளது. அவர் நம்பினார். அவரது கனவும் அற்புதமாக இருந்தது. வடகிழக்கு இந்தியாவில் தனியார் சார்பில் சிறந்த பல்கலைக்கழகத்தை உருவாக்கினார். அது அஸ்ஸாம் டௌன் டவுன் பல்கலைக்கழகம். இதன் நிறுவனர்-வேந்தர் மற்றும் டௌன் டவுன் மருத்துவமனையின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் மருத்துவர் நரேந்திர நாத் தத்தா. இவர் RID 3240ன் முன்னாள் மாவட்ட ஆளுநர் மற்றும் ரோட்டேரியன். இவர் அஸ்ஸாமில் ஓர் சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர். குவாஹாட்டி மருத்துவக் கல்லூரியில் MBBS பட்டமும், தில்லி AIMS மருத்துவமனையில் ENT பிரிவில் பட்டமேற்படிப்பும் முடித்த சிறந்த மாணவர். நுண்ணிய அறுவைச் சிகிச்சை நிபுணருக்கான உயர் படிப்பை இங்கிலாந்தில் முடித்தவர்.

குவாஹாட்டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 14 ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்த பின் வேலையை ராஜினாமா செய்து விட்டு டௌன் டவுன் மருத்துவ மனையைத் தொடங்கினார். வடகிழக்கு இந்தியாவில் NABHல் அங்கீகரிக்கப் பட்ட முதல் மருத்துவமனை இதுதான். இங்கு 27 ஓய்வுபெற்ற மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் ஆரம்பக்கட்டத்தில் ஆலோசகர்களாக இருந்தனர். இது மருத்துவமனையின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது.

1974ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்த அவர், 1995–96ம் ஆண்டில் மாவட்ட ஆளுநராக இருந்தார். 2013–14ல் சிறந்த சேவைக்கான விருது பெற்றார். அவர் RI திட்டத்தின் கீழ் ரோட்டரி தன்னார்வ நுண் அறுவைச் சிகிச்சை நிபுணராக கென்யாவுக்குச் சென்று அங்கு ஒரு மாதம் தங்கி யிருந்தார். உலகின் மிகப்பெரிய நதித் தீவான மஜுலியில் மண் அரிப்பை தடுப்பது குறித்து ஆய்வு செய்வதற்காக தென்னாப்பிரிக்காவிலிருந்து ஒரு ரோட்டரி தன்னார்வலரை அழைத்து வந்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்தார்.




PDG *நரேந்திர நாத் தத்தா கல்வி சான்றிதழை ரோட்டரி வயது வந்தோர் கல்வி திட்டத்தின் கீழ் அளிக்கிறார்.*

2010ம் ஆண்டில் அஸ்ஸாம் டௌன் டவுன் பல்கலைக்கழகத்தை நிறுவினார். பல்வேறு பாடப்பிரிவுகள் இருந்த போதிலும் நர்சிங், துணை மருத்துவம் மற்றும் சுகாதாரத்தில் MBA ஆகியவைதான் பலரும் விரும்பிப் படிக்கும் பாடமாக இருக்கிறது. அவரும் அவரது மனைவி பந்தனாவும் குவாஹாட்டி ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள். பல்வேறு நர்சிங் படிப்புகளில் ஆண்டுக்கு சுமார் 240 மாணவர்கள் சேர்ந்து படித்து வருகின்றனர். 100 சதவீத வேலைவாய்ப்புக்கும் பல்கலைக்கழகம் வழி செய்கிறது. 19 வகையான துணை மருத்துவப் படிப்புகளும் அதற்கான மருத்துவ ஆசிரியர்கள் இணைந்த துறையும் உள்ளது. மருத்துவத் துறையில் அவ்வப்போது புதிய தகவல்களும் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. குவாஹாட்டியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் உள்ள பனிகைட்டி என்னுமிடத்தில் பிரம்மபுத்திரா நதிக்கரையில் 80 ஏக்கர் பரப்பளவில் மரங்கள் சூழ இந்த பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. வடகிழக்கில் உள்ள முதன்மையான மருத்துவக் கழகங்களில் ஒன்றாக இது செயல்பட்டு வருகிறது. தரமான பேராசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் சூரியசக்தி மின் நிலையம், நான்கு பிளாக்குகளில் மழை நீர் சேகரிப்பு வசதி உள்ளது. 5,000 இருக்கைகள் கொண்ட, தொழில்நுட்ப வசதி களுடன் கூடிய அரங்கமும் உள்ளது. பல்கலைக்கழக விவகாரங்களில் மகளிர் பங்குபெறுவதை ஊக்குவித்து வருகிறது. மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, இங்கு வந்திருந்தபோது பெண் ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளின் எண்ணிக்கை ஆடவர்களைவிட அதிகமாக இருப்பதும் கல்வியில்



*கல்லூரி மாணவிகள் பெண்களுக்கு சானிட்டரி நாப்கின்களை வழங்குகின்றனர்.*

பல்வேறு வசதிகள் இங்கு உள்ளன.

அஸ்ஸாம் டௌன் டவுன் பல்கலைக்கழகம், குவாஹாட்டி ரோட்டரி சங்கத்துடன் இணைந்து வயதுவந்தோர் கல்வி திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. "உன்னத் பாரத் அபியான்" திட்டத்தின் கீழ் சுற்றியுள்ள 6 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இதன் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். கிராம மக்களுக்கு வாழ்க்கைத் திறன், உடன் மற்றும் மனநல பயிலரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் 2,500 மாணவர்களுக்கு மேல் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்படுகிறார்கள். இதுவரை 2,000 பேர் மருத்துவக் கல்வி பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்புகளை வெற்றிகரமாக முடித்து வெளியில் வந்துள்ளனர்.

சிறந்து விளங்குவது குறித்தும் ஆச்சரியம் தெரிவித்தார். இங்குள்ள 5 விடுதிகளில் 600 மாணவிகளும், 300 மாணவர்களும் தங்கிப் படிக்கின்றனர். நீச்சல் குளம், கூடைப்பந்து அரங்கம், பாட்மின்டன், கால்பந்து விளையாடுவதற்கான இடம், யோகா மையம், உடற்பயிற்சி நிலையம் என

*(கட்டுரையாளர்கள் அஸ்ஸாம் டௌன் டவுன் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்து வருகிறார்கள்.)*

2022 ஹூஸ்டன் மாநாடு

# வழக்கத்துக்கு மாறான ஹூஸ்டன்

மியோகி வால்கர்



ஜூன் 4 முதல் 8 வரை 2022, RI மாநாட்டுக்காக ஹூஸ்டன் வரும்போது, இந்த நகரைத் தனித்துவமாகவும், நகைச்சுவை யாகவும் ஆக்குகிறவற்றைக் காண நேரம் ஒதுக்குங்கள்.

ஹூஸ்டனை உலகின் கலைக் கார்த் தலைநகரம் என்பார்கள். புரியவில்லையா? இங்குள்ள கலைக் கார் அருங்காட்சியகத்துக்கு (Art Car Museum) வாருங்கள், தொழிற்சாலையில் செய்யப்பட்ட பல கார்கள் பிரமாண்ட மான கலைப்படைப்புகளாக உருமாறியிருப்பதைக் காணுங்கள். வழக்கமாக நுண்கலை அமைப்புகளில் இடம் வழங்கப்படாத மாற்றுக் கலை வகை ஒன்றுக்கு இந்த அருங்காட்சியகம் இடம் வழங்குகிறது, தனிப்பட்ட தன்மைகள், அரசியல், பண்பாடு ஆகியவை சந்திக்கும் இடங்களில் ஒளி பாய்ச்சுகிறது.

ஹூஸ்டனின் East Endல் உள்ள Orange Show US வாருங்கள். ஆரஞ்சுப் பழம், நல்ல ஊட்டச்சத்து ஆகிய வற்றை விரும்பும் அஞ்சல் ஊழியர் ஜெஃப் மெக்கிஸ்ஸாக் 3000 சதுர அடியில் தன் கையால் உருவாக்கிய இந்த இடத்தில் பல வண்ணமயமான கட்டமைப்புகளைக் காணலாம். இதில் ஒரு குளம், மேடை, அருங்காட்சியகம், விருப்பத்தைச் சொல்லும் கிணறு, பரிசுக் கடையும் உண்டு. அமெரிக்காவில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய நாட்டுப்புறக் கலை நிறுவல்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

ஹூஸ்டனில் இன்னொரு மாறுபட்ட இடம், புகழ் பெற்ற Beer Can House. 1968ல் ஜான் மில்கோவிச் என்ற ரயில் பாதைத் தொழிலாளர் தன்னுடைய படைப்புணர்ச் சியையும் ஆழமான பியர் ஆர்வத்தையும் சேர்த்து இந்தத் திட்டத்தைத் தொடங்கினார், தன்னுடைய வீட்டின் வெளிப் புறத்தை நசுக்கப்பட்ட பியர் கேன்களால் அழகு படுத்தி ஒரு சிறப்பான கலைப் படைப்பை உருவாக்கினார். இந்த வீட்டில் திரைச்சீலைகளாக, சுவர்களாக, சுழல் பொம்மைகளாக, இன்னும் பல வடிவங்களில் 50,000க்கும் மேற்பட்ட பியர் கேன்கள் உள்ளதாக ரிப்ளியின் நம்பினால் நம்புங்கள்! மதிப்பிடுகிறது. புதுமையான மறுசுழற்சிதான்!

மேலும் தெரிந்துகொள்ள,
**convention.rotary.org** பாருங்கள்

# மதுரை, சக்கிமங்கலம் கிராமத்தில் பார்வையற்ற குடும்பங்களுக்கு ரோட்டரி வீடுகள்

V முத்துகுமரன்

தமிழ்நாட்டில் மதுரைக்கு அருகில் உள்ள சக்கிமங்கலம் கிராமத்தில் வசிக்கும் 49 குடும்பத்தினர் ரோட்டேரியன் S L சேதுமாதவனை மனித உருவில் வந்த கடவுளாக நினைக்கின்றனர். RID 3000-க்கு உட்பட்ட மதுரை ஸ்டார் ரோட்டரி சங்கத்தினர், பின்தங்கிய இந்த குடும்பங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதுடன், அவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றனர். இந்த குடும்பங்களுக்காக உழைப்பவர்கள் அனைவரும் பார்வையற்றோர். 2004ம் ஆண்டு இவர்கள் தங்களுக்கு வசிப்பதற்கு வீடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். இவற்றை நிறைவேற்றுவது சற்று கடினமான பணி என்ற போதிலும் அதை நான் சவாலாக ஏற்றுக்கொண்டேன் என்கிறார் சேதுமாதவன். குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டத்தின் முக்கிய தொடர்பாளர் இவர்தான்.

இவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக பலமுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு நடையாய் நடக்க வேண்டியிருந்தது. சேதுமாதவன் மற்றும் அவரது குழுவினர் எடுத்த பெருமுயற்சியின் பேரில் ஒருவழியாக 2006ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அவர்களுக்கு அப்போது தமிழக ஊரக வளர்ச்சி துறை அமைச்சராக இருந்த M K ஸ்டாலின் (இப்போது தமிழக முதல்வர்) தலைமையில் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

### கடினமான பணி

ஆனால், உண்மையான சவால் அதன் பிறகுதான் தொடங்கியது. நிதி ஆதாரங்களைத் திரட்டியதன் மூலம் எங்களால் மே 2009ம் ஆண்டிலிருந்து டிசம்பர் 2016ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் ரூ.63 லட்சம் மதிப்பில் 30 வீடுகளை மட்டுமே கட்ட முடிந்தது. பல்வேறு காரணங்களால் தடை பட்டு வந்த வீடு கட்டும் பணியை பூர்த்தி செய்ய கரூரைச்



*தமிழக வணிக வரி துறை அமைச்சர் P மூர்த்தி சாவியை ஒரு கிராமவாசியிடம் வழங்குகிறார். மதுரை ஆட்சியர் அனீஷ் சேகர் (வலது) சங்க தலைவர் L ஸ்ரீனிவாசன் மற்றும் திட்ட தலைவர் S L சேதுமாதவா ஆகியோரும் உள்ளனர்.*

சேர்ந்த PDG P கோபாலகிருஷ்ண னிடம் உதவி கோரினோம். அவரது வழிகாட்டுதலின் பேரில் 1,20,000 டாலர் (சுமார் ரூ.87 லட்சம்) சர்வதேச மானிய உதவியாக கிடைத்ததால் மேலும் 15 வீடுகளை கட்டி முடித்தோம் என்று விவரித்தார் சேதுமாதவன். ஆஸ்திரேலியாவில் உள்ள RID 9685-க்கு உட்பட்ட தி ஹில்ஸ்-கெல்லிவில்லி ரோட்டரி சங்கம் எங்களது சர்வேதச கூட்டாளியாக இருந்தது. முன்பு கட்டப்பட்ட 30 வீடுகளைவிட புதிதாக கட்டப்பட்ட 15 வீடுகள் சற்று பெரியதாக இருந்தது.

185 முதல் 240 சதுர அடி பரப்பளவு கொண்ட, குறைந்த செலவிலான இந்த வீடுகளில் இரண்டு வீடுகளுக்கு பொதுவான சுவர் எழுப்பப்பட்டி ருந்தது. இது வரை 15 வீடுகளுக்கு ரூ.1.5 கோடி செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நான்கு வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும். அடிப்படையில் அரசாங்கம் செய்ய வேண்டிய பணியை ரோட்டரி பொறுப்புணர்வுடன் செய்துள்ளது குறித்து தமிழக அமைச்சர் ப.மூர்த்தி பாராட்டு தெரிவித்தார். மீதமுள்ள நான்கு வீடுகளில் ஒரு வீடு கட்டுவதற்கான ரூ.5 லட்சத்தை நன்கொடையாக வழங்கவும் அவர் முன்வந்தார். பார்வையற்றோருக்காக கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு சாலை, குடிநீர் மற்றும் மின்சார வசதிகளை விரைவில் செய்துதர மாவட்ட ஆட்சியர் அனீஷ் சேகர் உறுதியளித்தார்.

PDG S கோபால், DRFC மற்றும் PDG புருஷோத்தமன் திட்டக் குழுவினரை பாராட்டினர். பயனாளிகளில் ஒருவரான தைப்பூசம் (60), வீட்டின் சாவியை பெற்றுக் கொண்ட போது, சேது மாதவனை குறிப்பிட்டு அவரது பெருமுயற்சி இல்லாவிட்டால் எங்களுக்கு இப்படி ஒரு அழகான வீடு கிடைத்திருக்காது. அவர் எங்களுக்கு தந்தை போன்றவர் என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார். மதுரைக்கு அருகில் உள்ள இந்த கிராமத்தில் குறைந்த செலவில் பார்வையற்றோருக்கு வீடுகள் கட்டித்தந்துள்ளதன் மூலம் அவர்களின் வாழ்வில் ரோட்டரி ஒளியேற்றியுள்ளது என்று சொன்னால் மிகையாகாது.■

# நுண் கடனுக்கு வழி வகுக்கும் நாசிக் கண்காட்சி

ரோட்டரி செய்திக் குழு

நலிந்த குடும்பங்கள், பழங்குடிச் சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு நுண் கடன் வழியாக ஆற்றல் அளிப்பதற்காக RC நாசிக் கோதாவரி, RID 3030, ரோட்டரி கோடா ஹாத் என்ற மூன்று நாள் கண்காட்சியை நடத்தியது. இதன் நோக்கம், குறைந்த வருவாய்க் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் செய்த பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பது. என்கிறார் சங்கத் தலைவர் ராஜேஷ் சிங்கால்.

இங்கு 30 அரங்குகளில் மசாலாப் பொருட்கள், தின்பண்டங்கள், பூஜைப் பொருட்கள், பெண்களுக்கான துணைப் பொருட்கள், ஆடைகள், பழங்குடியினர் வளர்க்கும் ஓர் அரிசி வகை, கையால் செய்த உறைகள், கோப்புகள், சுற்றுச் சூழலுக்கு இதமான சானிட்டரி நாப்கின்கள், ஏந்திச் செல்லும் பைகள் போன்ற வீட்டில் செய்யப்பட்ட பலவிதமான பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டன. சில அரங்குகள் இலவசமாக வழங்கப்பட்டன, 100 பெண்களுக்கு நுண் கடன் நிதி திரட்டுவதற்காக மற்ற அரங்கு களுக்குச் சிறு கட்டணம் விதிக்கப் பட்டது'' என்றார் அவர்.



DG *ரமேஷ் மெஹெர் மற்றும்* DGN *ஆஷா வேணுகோபால் கண்காட்சியிற்கு வருகை தந்தனர்.*

இந்தச் சங்கம் ஏற்கெனவே 40 பெண்களுக்கு நுண் கடன் வழங்கியுள்ளது, மேலும் 60 பேருக்கு உதவவுள்ளது.

இந்தக் கண்காட்சி 4,000 மக்களை ஈர்த்தது, பெரும்பாலானோர் அரங்குகளில் பொருட்களை வாங்கினார்கள், பலன் பெறுவோரை மகிழ்ச்செய்தார்கள்

DG ரமேஷ் மெஹெர், DGN ஆஷா வேணுகோபாலைத் திட்டத் தலைவர்கள் Dr மீனாள் பலோட், சுரக்ஷா மஹாலெ பெருமைப் படுத்தினார்கள்.■

# உலக போலியோ
# தினம் கொண்டாடிய RID 3232

ரோட்டரி செய்திக் குழு

RC கிண்டி, RID 3232, உறுப்பினர்கள், சென்னையைச் சேர்ந்த ரோட்டரியன்களின் மிதிவண்டி ஓட்டுதல் தோழமைக் குழுவுடன் இணைந்து, சென்னையில் 16 கிமீ மிதி வண்டி ஓட்டி End Polio Now என்ற செய்தியைக் கொண்ட GPS முத்திரையை உருவாக்கினார்கள்.

GPS கலை என்பது, மிதிவண்டி ஓட்டும்போது, நடக்கும் போது, இருசக்கர வண்டி அல்லது கார் ஓட்டும்போது நம் இடத்தை GPS மூலம் பதிவு செய்து, பாதைகளில் படங்கள் அல்லது செய்திகளை வரைதல் ஆகும். இந்த GPS கலைத் திட்டத்தை DG J ஸ்ரீதர் கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.




ஸ்ட்ராவா செயலியைப் பயன்படுத்தி, GPS கலையை முழுமை செய்ய ஒரு பாதை உருவாக்கப்பட்டது. இருபத்தைந்து மிதிவண்டி ஓட்டுநர்கள் 12 மணிநேரத்துக்கு ஒரே வரிசையில் மிதிவண்டி ஓட்டினார்கள், இந்தியச் சாதனைகள் புத்தகத்தில் இப்போது மதிப்பிடப்பட்டு வருகிறது. முன்னணி மிதிவண்டி ஓட்டுநரும் சங்க உறுப்பினருமான நரேஷ் குமார் K N இதுபற்றிப் பேசுகையில், சென்னை நகரம்தான் எங்கள் ஓவிய பலகை, எங்கள் நகர்வுகள்தான் வண்ணம், எங்கள் மிதிவண்டிகள் எங்களுடைய செய்தியைக் கச்சிதமாக எழுதின'' என்றார். வழக்கமான கலை வரையறையில் இது வராமலிருக்கலாம், ஆனால், நாங்கள் 16 கிமீ மிதிவண்டி ஓட்டி GPS பாதைகளை வரைந்தோம், End Polio Now என்று எழுதினோம்.




இதில் மிகவும் சவாலான விஷயம், திட்டமிடுதல் தான் என்று இவர் சுட்டிக்காட்டுகிறார். சான் ஃபிரான்சிஸ்கோ போன்ற நகரங்களில் தெருக்கள் தொகுப்புகளாகத் திட்டமிடப்படுகின்றன. ஆனால், சென்னையில் மிதிவண்டி ஓட்டுநர்களுக்கு வசதியான கட்டங்களோ பிரிவுகளோ இல்லை. 20 மணி நேரத் திட்டமிடலுக்குப்பிறகு, பாதை நிறைவு செய்யப்பட்டது, அதில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்பது உறுதியானது. நம் சொந்த ஊரில் மிதிவண்டி ஓட்டுவது ஒருவகையில் மந்திரம்தான்'' என்கிறார் இவர். நீங்கள் இதற்கு முன் பார்த்திராத வெவ்வேறு இடங்களை, பகுதிகளைக் கண்டறிகிறீர்கள்.

இன்னொரு சவால், வானிலை. அது ஒரு மழை நாள். ஆனால், ரோட்டரியன்களும் மற்றவர்களும் ஆர்வத்துடன் மிதிவண்டி ஓட்டினார்கள்'' என்கிறார் குமார். ■

# மால்டாவில் வளைந்த கால்களுக்கு சிகிச்சை

ஜெய்ஸ்ரீ

மால்டாவில் 800 குழந்தைகள் இப்போது எல்லோரையும் போல வழக்கமான முறையில் நடக்க முடியும். அவர்கள் தங்கள் வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க முடியும். இதற்காக RID 3240க்கு உட்பட்ட மால்டா மாங்கோ சிட்டி ரோட்டரி சங்க உறுப்பினர் Dr தேப்ஜோதி தாஸுக்குத் தான் நாம் நன்றி சொல்ல வேண்டும். தாஸ் முடநீக்கியல் அறுவைச் சிகிச்சை நிபுணர். வளைந்த கால்கள் உடைய குழந்தைகளுக்கு ஆர்வமுடன் சிகிச்சை அளிப்பவர். 1980களிலிருந்து அவர் இவ்வாறு சிகிச்சை அளித்து வருகிறார்.



Dr *தேப்ஜோதி தாஸ் குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோருடன்.*

வளைந்த கால்கள் என்பது பிறவிக் கோளாறு. சிலருக்கு ஒரு கால் அல்லது சிலருக்கு இரண்டு கால்களுமே உள்புறமாகவோ அல்லது வெளிப்புறமாகவோ முறுக்கியவாறு வளைந்திருக்கும். முந்தைய நாட்களில் மூடநம்பிக்கைகள், மத கட்டுக்கதைகள் மற்றும் கல்வி அறிவின்மை காரணமாக இந்த பிறவிக் கோளாறுக்கு சிகிச்சை பெற மக்கள் தயக்கம் காட்டிவந்தனர். இதனால் குழந்தைகள் மாற்றுத்திறனாளிகளவே வளர்ந்தனர். இந்தக் கோளாறை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகிச்சை மூலம் சரி செய்து விடலாம் என்கிறார் தாஸ்.

குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்து வந்தாலும் அவர்களது குடும்பத்தினரை நம்பவைக்க பெருமுயற்சி எடுக்க வேண்டியிருந்தது. தனது முயற்சிக்கு ஆதரவு இருந்தால் எளிதாக இருக்கும் என்பதால் 2011ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்தார். அது முதல் ரோட்டரி சங்கம் ஆண்டுக்கு 4 அல்லது 5 முகாம்களை நடத்தி வளைந்த கால்கள் உள்ள குழந்தைகளைக் கண்டறிகிறது. பின்னர் அவரின் மருத்துவமனையில் ஆலோசனைக் கட்டணம் இல்லாமல் குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கால்களில் தட்டை (splint) வைத்து கட்டுவது உள்ளிட்ட தேவையான பொருள்களை சங்கம் வழங்குகிறது. ஏழை குடும்பத்தினருக்கு இந்த சிகிச்சை நடைமுறைகள் அதிக பணச்செலவு கொண்டது. எனவே குழந்தைகள் சிகிச்சை மூலம் குணமடைந்து நல் வாழ்க்கை வாழ்வதன் மூலம் அவர்கள் ரோட்டரிக்கு நன்றி செலுத்துகிறார்கள் என்கிறார் தாஸ். போலியோபிளஸ் தேசிய நோய்த்தடுப்பு நாளில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை சொட்டு மருந்து கொடுக்க அழைத்து வரும் போது வளைந்த கால்களை சரிப்படுத்துவது தொடர்பான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

வளைந்த கால்களை சரிப்படுத்துவதற்கான சிகிச்சை என்பது மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை தொடரலாம். தசைநார்கள் மற்றும் தசை நாண்களை மெதுவாக கையாண்ட பிறகு இடுப்பு முதல் பாதம் வரை வார்ப்புகள் மூலம் பிளாஸ்டர் போட வேண்டும். அடுத்த சில வாரங்களில் தட்டை வைத்து கட்டப்பட்ட இடத்தில் கால்கள் வளையாமல் நேராகத் தொடங்கும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை என்ற வகையில் நான்கு ஆண்டுகள் இந்த சிகிச்சை தொடரும். பிரச்னையின் தன்மையை பொருத்து கால அளவு மாறுபடும். குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே சிகிச்சையைத் தொடங்குவது நல்ல பலனளிக்கும். பிறந்து ஒருவாரமே ஆன குழந்தையாக இருந்தால் எலும்புகள் நெகிழ்வாக இருக்கும் என்பதால் சிகிச்சை அளிப்பது எளிது. ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளாக இருந்தால் மயக்க மருந்து கொடுத்து அறுவைச் சிகிச்சை செய்யலாம். வளைந்த கால்கள் சிகிச்சை மூலம் நிமிர்த்தப்பட்டு விட்டால் குழந்தைகள் மற்றவர்களைப் போல நடக்கலாம் என்கிறார் தாஸ்.■

# எல்லா ரோட்டரியும் ஒரே மாதிரியானவை அல்ல

இன்ஸா ஃபோல்ஸ்டர்

*உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்கள் ரோட்டரி இன்டர்நேஷனல் என்ற அமைப்பின்கீழ் ஒன்றிணைந்துள்ளனர். ஆனால், நுட்பமான வேறுபாடு என்னவெனில், உலகின் ஏழு பிராந்தியங்களைச் சேர்ந்த ரோட்டேரியன்கள் உள்நாட்டில் ரோட்டரி கலாசாரம் என்றால் என்ன என்பது பற்றி பேசுகிறார்கள்.*

### "டௌன் அண்டர்" ரோட்டரியின் புதிய முகம்

ஆஸ்திரேலியாவில் ரோட்டரி என்பது அந்த நாட்டைப் போன்றது-பெரியது மற்றும் மாறுபட்டது. உலகில் வெற்றிகரமான பன்முக சமூக கலாசாரத்தைக் கொண்டது ஆஸ்திரேலியா. இன்றைய மக்கள் தொகையில் ஏறக்குறைய பாதிப்பேர் வெளிநாட்டில் பிறந்தவர்கள் அல்லது வெளிநாட்டில் பிறந்த பெற்றோர்களைக் கொண்டவர்கள். பெரும்பாலான ஆஸ்திரேலிய ரோட்டரி சங்கங்கள் RIன் கொள்கைகளான பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டவை. மேலும் பலதரப்பட்ட மக்களை தங்கள் சமூகத்தில் வரவேற்பவர்கள். ஆஸ்திரேலியாவில் உள்ள பழமையான சங்கங்கள் இந்த ஆண்டு தங்களது 100-வது ஆண்டு விழாவை கொண்டாடும் நேரத்தில் அவை உயர்ந்த, வசதியான பாரம்பரியமான மதிய உணவுக் கூட்டங்களை நடத்தி வருகின்றன.




*ஆஸ்திரேலிய மற்றும் நியுசிலாந்து ரோட்டரியின் நூற்றாண்டை கொண்டாடும் வகையில் கோல்ட் கோஸ்ட் பாஸ்போர்ட் ரோட்டரி சங்கம் வீட்டு வன்முறையிற்கெதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர்.*

சிறிய ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த சங்கங்கள் முதல் கடலோர சமூகத்தினர் வரை பல்வேறு வடிவங்களில் கூடுகின்றனர்.

குயீன்ஸ்லாந்த் தலைநகர் பிரிஸ்பேனில் உள்ள உல்லூன்கப்பா ரோட்டரி சங்கம் உலகிலேயே முதன் முறையாக LGBTIQ சமூகத்தினரை ஆதரிக்கும் பெருமை மிகுந்த சங்கமாக உள்ளது. பல ஆண்டுகளாக சங்கம், LGBTஐயினரின் உடலியல் சுகாதாரத்துக்கான குயீன்ஸ்லாந்து கவுன்சில் மற்றும் இதர LGBTIQ அமைப்புகளை ஆதரித்து வந்துள்ளது மற்றும் இளைஞர் சேவைக்கான வழிகளையும் திறந்துள்ளது. கடந்த ஆண்டு சங்க உறுப்பினர்கள், RID 9640ல் Rotaract Pride Club-ஐ முதன் முறையாக உருவாக்கியது. உறுப்பினர்கள் சேர்க்கையிலும், உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதிலும் மாவட்டத்தில் உள்ள 8-வது மண்டலம் சிறப்பாக செயல்படுகிறது. வளர்ச்சி நடவடிக்கைகளிலும் தங்களின் எல்லைகளை மறுவரைத்துள்ளது. மாவட்ட ஆளுநர் ஆன்டி ராஜபக்ஷ மற்றும் அவரது குழுவினர் ஐந்து புதிய ரோட்டரி சங்கங்கள், இரண்டு சிறிய ரோட்டரி சங்கங்கள், மூன்று ரோட்ராக்ட் சங்கங்கள், ஒரு இன்டராக்ட் சங்கம், ஒரு ரோடெக்ஸ் சங்கத்தை பட்டயம் செய்துள்ளனர். கடந்த 365 நாட்களில் 58 ரோட்டரி சங்கங்களிலும் 383 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளனர்.




புதிதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர்களில் 63 சதவீதம் பேர் பெண்கள். அவர்களில் 24 சதவீதம் பேர் 40 வயதுக்கு குறைவானர்கள். தி கோல்டு கோஸ்ட் பாஸ்போர்ட் ரோட்டரி சங்கம் மற்றும் தி கோல்டு கோஸ்ட் கார்ப்பொரேட் ரோட்டரி சங்கம் இரண்டும் மாவட்டத்தின் இரண்டு சிறந்த கண்டுபிடிப்புகள். தேசிய அளவில் ரோட்டரியின் 100வது ஆண்டு டௌன் அண்டர் விழாவை கொண்டாடும் வகையில் (ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து மற்றும் தென்மேற்கு பசிபிக்) மண்டலம் முழுவதிலும் உள்ள சங்கங்கள் மற்றும் மாவட்டங்கள் ஒன்றிணைந்து ரோட்டரி டௌன் அண்டர் விழாவையும், “குழந்தைகளின் எதிர்காலம்” என்ற ரோட்டரியின் திட்டத்தையும் ஆதரிக்க முன்வந்துள்ளன.

நூற்றாண்டு சேவையை கொண்டாடும் அதே நேரத்தில் UNICEF அமைப்புடன் இணைந்து 9 தென் பசிபிக் தீவு நாடுகளைச் சேர்ந்த 1,00,000 குழந்தைகளுக்கு வைரஸ் தொற்றால் ஏற்படும் வயிற்றுப்போக்கு, நிமோனியா காய்ச்சல், கர்ப்பப்பை வாய் புற்றுநோய்க்கு எதிராக தடுப்பூசி போடுவதை மூன்றாண்டுகளில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளன. தடுப்பூசி திட்டங்களை நிறைவேற்ற இரு அமைப்புகளும் உள்ளூர் அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்றும். இந்த ஆண்டு மண்டலம் முழுவதும் பல நூற்றாண்டு திட்டங்கள் இருந்தாலும், குழந்தைகளின் எதிர்கால திட்டம் ஆஸ்திரேலியா முழுவதையும் உள்ளடக்கியது. மேலும் இன்றைய உலகில் ரோட்டரி மிகவும் வலுவாக இருப்பதையும் காட்டுகிறது.

மேகன் மார்டின் (கோல்டு கோஸ்ட் பாஸ்போர்ட் ரோட்டரி சங்கம்) 2019ம் ஆண்டு முதல் “ரோட்டரி டௌன் அண்டர்” ஆசிரியராக இருந்து வருகிறார்.



## சேவை ஒரு வாழ்க்கை முறை

“வேற்றுமையில் ஒற்றுமை” ரோட்டரியின் குறிக்கோள் என்றால், இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் ரோட்டரியைவிட சிறந்த உதாரணம் என்ன இருக்க முடியும்? 22 முக்கிய மொழிகளும், ஆயிரக்கணக்கான பேச்சு வழக்குகள் கொண்ட ஒரு நாட்டில், ரோட்டரியின் மொழி ஒன்றுதான். அது தன்னலமற்ற சேவை. இந்தியாவின் நிதிகேந்திரமான மும்பையில் உள்ளது குயீன்ஸ் நெக்லேஸ் ரோட்டரி சங்கம். பரந்துபட்ட தொழில்துறையினரும், வர்த்தகம் செய்வோரும் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். 181 உறுப்பினர்கள் கொண்ட சங்கத்தில் பெண்களும் இடம்பெற்றுள்ளனர். 40 முதல் 70 வயதினர் வரை இதில் இடம்பெற்றுள்ளனர். இளம் உறுப்பினர்களை ஈர்க்கவும் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சமூக முன்முயற்சிகளும், சமூக அமைப்பும் சங்கத்தில் கலாசார பிணைப்பை ஏற்படுத்துகின்றன. உறுப்பினர்கள் தாராள மனதுடன் கொடுக்கும் நன்கொடைகள் மூலம் பெரிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. “வாட்ஸ்ஆப்” மூலம் வேண்டுகோள் விடுத்தால் அடுத்த சில மணி நேரங்களில் 50,000 டாலர் மதிப்புக்கு நன்கொடைகள் உறுதி செய்யப்படுகின்றன.

கோவிட் தொற்றின் முதல் கட்டத்தில் நாடு முழுவதும் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டபோது சங்கம் 2 மில்லியன் டாலர் மதிப்பிலான திட்டத்தின் மூலம் 10 மில்லியன் மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கியது. மொத்த தொகையில் பாதியளவு உறுப்பினர்கள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் நன்கொடையாக அளித்தவை. பிற்படுத்தப்பட்டோர், ஏழைகளுக்கு கல்வி, சலுகை விலையில் சுகாதார வசதிகள் மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துல் ஆகியவற்றில் உள்ளூர் சமூகத்திற்கு

உதவுவதில் உறுப்பினர்கள் மிக ஆர்வமாக உள்ளனர். தொற்று நோய்க்கு முன்னர் உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் இரண்டு கூட்டங்களுக்கும் ஒரு சமூக நிகழ்வுகளுக்கும் ஒன்றாக வருகை தந்தனர். அனைத்து இந்திய பண்டிகைகளும் ஒவ்வொரு ஆண்டும் உற்சாகத்துடன் கொண்டாடப்படும். தீபாவளி நேரத்தில் சங்கத்தினர் இரவுநேர கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்பதுண்டு. தொற்றுப் பரவல் காரணமாக உறுப்பினர்கள் நேரில் சந்திக்க முடிவதில்லை. எனினும் மெய்நிகர் சந்திப்பில் பங்கேற்று உலகம் முழுவதும் உள்ள பேச்சாளர் களின் உரையை கேட்கின்றனர்.

சினேகா பதக்,
மும்பை குயீன்ஸ் நெக்லேஸ்
ரோட்டரி சங்க உறுப்பினர்.



### 300 நார்வேஜியர்களில் ஒருவர் ரோட்டேரியன்

முன்னாள் அதிபரும் ஹபாக் (Hapag) தலைவருமான வில்ஹெல்ம் கியூனோ, ஜெர்மானிய பேரரசில் ஹாம்பர்க் ரோட்டரி சங்கத்தை முதன் முதலாக தொடங்குவதற்கு முன்னால் ஸ்காண்டிநேவியாவில் கடந்த 1921ம் ஆண்டு அக்டோபர் 13ல் முதல் சங்கம் தொடங்கப்பட்டுவிட்டது. இதாஹோ என்னுமிடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட நார்வேஜியன்-அமெரிக்க செனட்டரும், ஃபோர்ட் டாட்ஜ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினருமான ஓலாஃப் M ஓலேசன், 1921ம் ஆண்டு ஜூன் மாதம் எடின்பரோவில் நடைபெற்ற ரோட்டரி சர்வதேச மாநாட்டில் பங்கேற்றார். பின்னர் பிறந்த நாட்டிற்குச் சென்று தமது மருமகனிடம் ரோட்டரி பற்றி விவரித்தார். மன்னர் குடும்பத்து பாதுகாவலில் கேப்டனாக இருந்த ஓலா பைவ், வேறு 8 நண்பர்களுடன் சேர்ந்து கிறிஸ்டியானியா ரோட்டரி சங்கத்தை உருவாக்கினார். 1924ம் ஆண்டு நகரத்தைப் போலவே சங்கத்தின் பெயரும் ஓஸ்லோ ரோட்டரி கிளப் என பெயர் மாற்றப் பட்டது. பட்டத்து இளவரசர் ஹாகோன் மாக்னஸ், அவரது தந்தையும் அரசருமான ஹரால்ட் V கௌரவ உறுப்பினர்களாக இருந்தனர். ஹரால்ட் நார்வேயின் 7 ரோட்டரி மாவட்டங்களுக்கு கௌரவ ஆளுநராக இருந்தார். RC ஓஸ்லோ, நார்வேயில் 19 சங்கங்களை நிறுவியது மட்டுமல்லாமல், ஸ்டாக்ஹோம் ரோட்டரி சங்கத்தின் தொடர்புடைய கோபன்ஹேகன் ரோட்டரி சங்கத்தின் பாதுகாவலராகவும் இருந்தது. இன்று நார்வே, ரோட்டரியின் பலமான கோட்டைகளில் ஒன்றாகும். மொத்தம் உள்ள 335 சங்கங்களில் 14,000 உறுப்பினர்கள் உள்ளனர். அதாவது நார்வேஜியர்களில் 300 பேரில் ஒருவர் ரோட்டேரியனாக இருக்கிறார். சங்கங்கள் தங்களின் கூட்டங்களை மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் நடத்துகின்றனர். ஒரு உறுப்பினர் ஒவ்வொரு மேஜைக்கும் சென்று லாட்டரி டிக்கெட்டுகளை விற்கிறார். வெற்றிபெற்றவர்களுக்கு மது (ஒயின்) கிடைக்கும். வெற்றியாளரை அன்றைய பேச்சாளர் தீர்மானிக்கிறார். இதன் மூலம் கிடைக்கும் பணம் சங்கத்தின் கருவூலத்துக்கு சென்று விடும். உணவுடன்கூடிய கூட்டங்களில் சாப்பிடுவதற்கு முன் உறுப்பினர்கள் மூன்று நிமிடங்களுக்கு நடப்பு விவகாரங்கள் தொடர்பாக பேசுவார். காலையில் குளிர்ச்சியான உணவுகளும் மாலையில் சூடான உணவு களும் பரிமாறப்படும். டிஜிட்டல் உள் கட்டமைப்பு வசதிகளும் சிறப்பாக உள்ளன. அதில் ஒன்றுதான் இணைய வழியிலான “டிஜிட்டல் மெல்டிங் பாட்”. இணைய வழித் தொடர்புகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பிராந்திய மற்றும் தேசிய அளவிலான திட்டங்களும் புதிய திட்டங்களும் விவாதிக்கப்படுகின்றன. இதனால் ரோட்டரியின் திட்டப் பணிகளில் நன்மைகள் அதிகரிக்கின்றன.

RC ஃபார்டர், இளைஞர்களின் கல்வியில் கவனம் செலுத்தி வருகிறது. இளைஞர் பரிமாற்ற திட்டத்தில் உள்ள மாணவர்கள் இலவசமாக உறுப் பினர்களாக சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். கார்மி வெஸ்ட் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த பிஜோர்ன் ரிஸ்மிர், தனது மெர்சிடிஸ் காரில் விளம்பரத்திற் காக “ரோட்டரி” என்ற பலகையை தொங்கவிட்டுள்ளார். சிலர் அவரிடம் ரோட்டரி என்பது நடனமாடும் கழகமா என்று கேட்டனராம். மக்கள் என்ன கேட்டாலும் ரோட்டரியை அறிமுகப்படுத்த இது ஒரு நல்ல வாய்ப்பு என்கிறார் ரிஸ்மிர்.

காய்-ஆக்ஸெல் ஆண்ட்ரூட்,
(ஹாம்பர்க் டெச்டோர் ரோட்டரி சங்கம்). இவர் நார்வேஜியர் ஒருவரின் மகன்.



Rtn. *டேவிட் கிங் தன் சங்கம் சார்பாக நோய்வாய்பட்டிருக்கும் குழந்தைகளை பராமரிக்கும் ஒரு அறக்கட்டளையிற்கு முட்டைகளை அளிக்கிறார்.*



### சமத்துவமின்மை மற்றும் பல தேவைகள்

தென்னாப்பிரிக்காவில் மூன்று மாவட்டங்கள் (9350, 9370 மற்றும் 9400) புவியியல் ரீதியாக ஆறு அண்டை நாடுகளான அங்கோலா,

போட்ஸ்வானா, எஸ்வாதினி, லெஸோதோ, தெற்கு மொஸாம்பிக் மற்றும் நமீபியா ஆகியவற்றை உள்ளடக்கியது. புறநகர் சங்கங்களில் கலந்து கொள்வதிலிருந்து நகர்ப் புற சங்கங்களில் பங்கேற்பது வித்தி யாசமானது. நகர சங்கங்களைச் சேர்ந்தவர்கள் வழக்கமாக தொழில் துறை நிர்வாகிகளாகவும் முறைப் படியானவர்களுமாக இருப்பார்கள். புறநகர் சங்கங்களில் உள்ளவர்கள் பெரும்பாலும் சிறிய மற்றும் நடுத்தர ரக வர்த்தகர்களாகவும் எல்லோருடனும் பழகக்கூடியவர் களாகவும் இருப்பார்கள். எனினும் இரு தரப்பினரும் பன்முகத்தன்மை மற்றும் பாலின சமத்துவத்திற்காக பாடுபடுவதால் அவற்றில் மாற்றம் இருந்துகொண்டே இருக்கும். 1991 ஆம் ஆண்டு வரை ரோட்டரியில் பெண்களுக்கு அனுமதியில்லை. ஆனால், இப்போது அந்தப் பிராந்தியத்தில் 32 சதவீதம் பெண் ரோட்டேரியன்கள் உறுப்பினர்களாக உள்ளனர். ஆப்பிரிக்காவின் தெற்கு பகுதயில் பெரும்பாலான சங்கங்கள் வரலாறு மற்றும் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டது. இ-சங்கங்கள் மற்றும் சிறிய சாட்டிலைட் சங்கங்கள் என்ற கருத்து இப்போதுநெகிழ்வுத் தன்மையுடன் மெதுவாக கவனம் பெறுகிறது.

வறுமையும் சமத்துவமின்மையும் அதிகம் உள்ளன. எனவே தேவையும் ஏராளமாக உள்ளன. ரோட்டரி கவனம் செலுத்தி வரும் ஏழு பகுதிகளும் தென்னாப்பிரிக்காவுக்கு பொருந்தும் என்றால் நிச்சயமாக கூறமுடியும். அவர்களின் தேவையை வரிசைப்படுத்தச் சொன்னால் நான் இப்படிக் கூறுவேன். குடிநீர் மற்றும் சுகாதாரம், ஊட்டச்சத்து, குழந்தைப் பருவ வளர்ச்சி, பொருளாதார வாய்ப்பு, அமைதி மற்றும் முரண்பாடு களைத் தவிர்த்தல். நாடுகளுக் கிடையே குழு உடன்பாடுகளை இப்பகுதி ஏற்றுக்கொள்கிறது. இன்றுவரை ஜெர்மனி, கனடா, இந்தியா மற்றும் இங்கிலாந்து நாடுகளின் மாவட்டங்களுக்கு இடையே நல்லுறவுகள் உள்ளன. இந்த உறவுகள் திட்டங்களுக்காக மட்டுமல்ல, நட்பு பரிமாற்றம், இளைஞர் பரிமாற்றம், கலாசார பரிமாற்றம், மாநாடுகள் அல்லது மெய்நிகர் சந்திப்புகளுடனும் தொடர்புடையவை.



*RC குவீன்ஸ் நெக்லெஸ் உறுப்பினர்கள் ஒரு கிராம மக்களுக்கு மளிகை பொருட்கள் அளித்தனர்.*

கிராண்ட் டேலி
RID 9400ன் PDG

**ஜெர்மனியைவிட மிகவும் குறைவான பாரம்பரியம்**

கடந்த காலங்களில், கிரேட் பிரிட்டன் எப்போதும் கட்டுக்கடங்காத ஒரு இளைஞனைப் போலவே நடந்துகொண்டது-அகம்பாவம், ஆனால் பிடிவாதம் மற்றும் மிகவும் சுதந்திரமானது. எல்லாவற்றிற்கும் மேலாக, ஐரோப்பாவின் பிரதான நிலப்பரப்பில் இருந்து 20 மைல் தொலைவில் குறுகிய புள்ளியில் உள்ள ஒரு தீவு தேசம். இருப்பினும் கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் உள்ள ரோட்டரி சூழலில் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து மற்றும் அயர்லாந்து குடியரசு ஆகிய ஐந்து நாடுகளின் கலாசாரம், பண்பு அடிப்படையில் இரண்டும் வேறுபட்ட தீவுகளாகும். ஆனாலும் நாங்கள் அனைவரும் ரோட்டரி என்ற பொதுவான பிணைப்பால் இணைக்கப்பட்டுள் ளோம். கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தில் 40,000 ரோட்டேரி யன்கள் உள்ளனர். சமீப ஆண்டுகளாக உறுப்பினர்கள் எண்ணிக்கை நிலையாக குறைந்துவருகிறது. அவர்களில் 22 சதவீதம் பெண்கள் மற்றும் சராசரி வயது 71. கோவிட்-19 தொற்று உலகம் முழுவதும் ரோட்டரியின் வடிவமைப்பையும், தன்மையையும் மாற்றியுள்ளது. ஆன்லைன் மூலமே கூட்டங்கள் நடைபெறுவதால் நிதி திரட்டும் வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன.

தொற்று காலத்தின்போது சுமார் 12.4 மில்லியன் பிரிட்டன் மக்கள் தங்கள் சமூகங்களில் தன்னார்வ தொண்டு செய்தனர். அயர்லாந்து குடியரசைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் இதில் சேர்ந்து கொண்டனர். தொற்று காலத்துக்கு பின்னர் தன்னார்வ தொண்டில் ஈடுபட்ட இவர்களை ரோட்டரிக்கு வரவேற்பது என்பது சவால் நிறைந்ததாக இருக்கும்.

கடந்த 16 மாதங்களாக, ரோட்டரி சங்கங்கள் தங்கள் சமுதாயத்தில் தேவைப்பட்டவர்களுக்கும், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கும் கடைகளுக்கு செல்ல உதவுவதிலும், மருந்துகளை எடுத்துச் செல்லவும் உதவிவந்தன. வேலையின்மை அதிகரித்து வந்த நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ உணவு வங்கிகளுக்கு ஆதரவு அளித்தனர். பல சங்கங்கள் குழுக்களாக இணைந்து முன்களப் பணியாளர்களுக்கு

தனிநபர் பாதுகாப்பு உடைகளையும், முகக்கவங்களையும் வழங்கினர். இவர்களில் பலர் ரோட்டேரியன்கள். தன்னார்வத் தொண்டு மற்றும் சமூகத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற இந்த விருப்பம் கடந்த மே மாதம் மக்கள் தன்னார்வ தொண்டில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காக ஆன்லைன் மூலம் 2 நாள்கள் நடைபெற்ற UK Volunteer Expo நிகழ்ச்சியில் ரோட்டரி முன்னிலை வகித்தது தெளிவாகத் தெரிந்தது. இந்நிகழ்ச்சிக்கு 5,500 பேர் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டனர். இவர்களில் 40 சதவீதம் பேர் ரோட்டேரியன்கள். தன்னார்வத் தொண்டின் வடிவமும் செயல்பாடும் எப்படி மாறுகிறது என்பதையும் தெரிந்துகொண்டனர். தன்னார்வ தொண்டு கண்காட்சி சொல்லும் செய்தி என்னவென்றால் பணியுடன் சேர்ந்த வாழ்க்கையில் இளைஞர்களுக்கு தன்னார்வ தொண்டு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அடுத்த தலைமுறைக்கு அவை பொருத்தமானதாக மாற்ற வேண்டும். நெகிழ்வுத்தன்மையுடன் இருக்க வேண்டும். அதில் ரோட்டரியின் செயல்பாடுகளும் அடங்கும்.

இந்த தீவுகளில் ரோட்டரி, ஜெர்மனியைவிட மிக குறைவான பாரம்பரியத்தை உடையது. இந்த நெகிழ்வுத்தன்மையானது சிறிய சங்கங்கள், பாஸ்போர்ட் சங்கங்கள், இரவு உணவுடன்கூடிய சந்திப்பு இல்லாத சங்கங்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

தவே கிங். (ஹாம்ப்ஷயர் கோஸ்பாட் ரோட்டரி சங்கம், இங்கிலாந்து) கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்துக்கான ரோட்டரி இதழின் ஆசிரியராக நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகிறார். பல்வேறு சங்கங்களில் உறுப்பினராக உள்ள இவர், 2010 முதல் ரோட்டேரியனாக உள்ளார்.





### பாரம்பரிய உணர்வு மற்றும் எப்போதும் சரியான நேரத்தில்!

ஜப்பானில் 34 மாவட்டங்களில் (ஏப்ரல் 2021 கணக்குப்படி) 2,237 ரோட்டரி சங்கங்களில் 88,310 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் 7 சதவீதம், அதாவது 6,265 உறுப்பினர்களே பெண்கள். ஜப்பானில் பெண் தலைவர்கள் குறைவாக இருப்பதும் இதற்கு காரணமாக இருக்கலாம். ஜப்பானிய ரோட்டேரியன்கள் நிர்வாகிகள் அல்லது மேலாளர்களாக இருக்கிறார்கள். சராசரி வயது 60. அவர்களில் சிலர் ரோட்டரியில் சேர்ந்தவுடன் வெளியேறி விடுகிறார்கள். ஆனாலும் பலருக்கு நீண்ட நாள் ரோட்டரியில் இருந்த வரலாறு உண்டு.

பல சங்கங்கள் வழக்கமான ஒரு மணி நேர கூட்டத்தை நடத்துகின்றன. உறுப்பினர்கள் மதிய உணவு சாப்பிட்டு கொண்டே பேச்சை கேட்கிறார்கள். எப்போதும் நிகழ்ச்சிக்கு சரியான நேரத்தில் வந்து விடுகின்றனர். கூட்டுறவை முக்கியமாக கருதுகின்றனர். எனவே சில நேரங்களில் மாலைக் கூட்டங்களை நடத்துகிறார்கள். அப்போது அவர்கள் அதிக நேரம் செலவிட முடியும்.

பொதுவாக ஜப்பானிய உறுப்பினர்கள் மரபுகளை பின்பற்றுவதில் சிறந்தவர்கள். ஆனால், அவர்கள் மாற்றத்தை விரும்புவதில்லை, தற்போதைய நிலையிலேயே அவர்கள் திருப்தி யடைகின்றனர். உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர்கள் புரிந்துகொண்டுள்ளனர். ஆனால், உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதைவிட ரோட்டரியின் தத்துவம் மற்றும் தோழமையைப் புரிந்துகொள்ளும் ஒருவரைச் சேர்ப்பது அவர்களுக்கு மிகவும் முக்கியமானது.

சுமார் 200 உறுப்பினர்கள் கொண்ட யோகோஹாமா ரோட்டரி சங்கம் ஒரு மதிப்புமிக்க ஹோட்டலில் வழக்கமான கூட்டங்களை நடத்துகிறது. கோவிட்-19 தொற்றுக்கு முன்னர் உறுப்பினர்கள் வட்டமேஜையில் அமர்ந்து பேசுவதுடன் உணவு சாப்பிட்டு மகிழ்ந்தார்கள். இப்போது அவர்கள் தங்கள் கூட்டங்களை பள்ளிகள் நடைபெறும் விதத்தில் வரிசையாக இடைவெளி விட்டு நடத்துகிறார்கள். தொற்றைத் தவிர்க்க உணவு தவிர்க்கப்படுகிறது. அதற்கு பதிலாக கூட்டங்கள் நடந்து முடிந்தபின் பெட்டிகளில் உணவுகள் வழங்கப்படுகின்றன.

ஜப்பானில் நாங்கள் செய்து வரும் திட்டங்களில் யோனியாமா நினைவு உதவித்தொகை திட்டமும் ஒன்று. ரோட்டரியை ஜப்பானுக்கு அறிமுகப்படுத்தியவரின் பெயர்தான் யோனியாமா. இந்த திட்டத்துக்கு அனைத்து

ஜப்பானிய ரோட்டேரியன்களும் நிதியளிக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 900 வெளிநாட்டு மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் சர்வதேச சமூகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் சிறந்த சர்வதேச மாணவர்களை உருவாக்குவது மற்றும் ஜப்பானுக்கும் அவர்களின் சொந்த நாடுகளுக்கும் இடையே உறவுப்பாலத்தை உருவாக்குவதே குறிக்கோளாகும். இன்று வரை உலகெங்கிலும் உள்ள 129 நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 22,000 மாணவர்களுக்கு ஆதரவு அளித்து வந்துள்ளோம். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிய மாணவர்கள். ஆனால் 44 ஜெர்மன் மாணவர்களும் எங்களால் பலனடைந்துள்ளனர்.

கியோகோ நொஸாகி.
இவர், கடந்த 2016ம் ஆண்டு முதல் இவர் ஜப்பானிய ரோட்டரி இதழான "ரோட்டரி நோ டோமோ" என்ற ஜப்பானிய ரோட்டரி இதழின் ஆசிரியராக இருந்து வருகிறார்.



*பிரேசில் ரோட்டரியினர் ஒரு குழந்தையிற்கு போலியோ சொட்டு மருந்து அளிக்கின்றனர்.*

## போலியோ முயற்சிகளில் தனித்தலைவர்

பிரேசில் ரோட்டரியின் வரலாறு 1923 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோ ரோட்டரி சங்கம் நிறுவப்பட்டதில் தொடங்கியது. இன்று நாட்டில் 31 ரோட்டரி மாவட்டங்களும், 2,426 ரோட்டரி சங்கங்களும் 51,945 உறுப்பினர்களும் உள்ளனர். அப்போதிலிருந்து, பிரேசில் மூன்று ரோட்டரி சர்வதேச மாநாடுகளை- ரியோ டி ஜெனிரோ (1948) சாவ்பாலோ (1981 மற்றும் 2015)- நடத்தியுள்ளது.

RI தலைவர்களாக பிரேசில் நாட்டைச் சேர்ந்த 3 பேர் அர்மாண்டோ டி அர்ருடா பெரைரா (1940–41), எர்னஸ்டோ இம்பாஸ்ஸாஹி டி மெல்லோ (1975–76) மற்றும் பாவ்லோ விரியாடோ கொரேயா டா கோஸ்டா (1990–91) பதவி வகித்துள்ளனர். இவர்களில் கோஸ்டாவின் "பூமியை காப்போம்" (Preserve Planet Earth) திட்டம் அதிக கவனத்தை ஈர்த்ததுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கண்ணோட்டத்தில் ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்த உதவியது.

பிரேசிலின் பிராந்திய விரிவாக்கம் மற்றும் பல்வேறு பொருளாதார, சமூக மற்றும் காலா சார பண்புகளை பிரதிபலிக்கும் வகையில் அந்த நாட்டின் சங்கங்கள் பல்வேறு வகையான சுய விவரங் களைக் கொண்டுள்ளன. அதாவது வர்த்தகர்கள், பகுதிநேர ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வுபெற்றவர்கள் என பலரும் இதில் உள்ளடக்கம்.

உறுப்பினர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பிரேசில் நாட்டு ரோட்டேரியன் களில் இப்போது 30 சதவீதம் பேர் பெண்கள் உள்ளனர். பிரேசில் நாட்டு ரோட்டரியின் தனி சிறப்பு இளைஞர் கழகங்கள். 754 ரோட்ராக்ட் சங்கங்கள், 649 இன்டராக்ட் சங்கங்கள் முறையே 9,029 மற்றும் 16,120 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது.

பிரேசில் ரோட்டரி குடும்பம் முக்கியமான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பிரேசில் மக்களிடையே இருந்துவரும் சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கு வதற்கு பாடுபட்டு வருகிறது. இந்த திட்டங்களில் பல சர்வதேச மானிய உதவியுடன் செயல்படுத்தப் படுகின்றன. குறிப்பாக நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைகளில் கவனம் செலுத்தப்படுகின்றன. போலியோவுக்கு எதிரான போராட்டம் இந்த கதையின் ஒரு சிறப்பு அத்தியாயமாகும். 1980களிலிருந்து போலியோவுக்கு எதிரான போராட்டத்தில் பிரேசிலிய சுகாதார அமைச் சகத்துடன் ரோட்டரி கூட்டாளியாக செயல்பட்டு வருகிறது. கடந்தகால நன்கொடைகளில் தடுப்பூசிகளை வாங்குவதற்கான நிதியும் அடங்கும். பிரேசிலில் கடைசியாக 1989ல் போலியோ நோய் ஏற்பட்டது. ஆனால், ரோட்டேரியன்கள் வருடாந்திர தேசிய நோய்த்தடுப்பு நாட்களில் தன்னார்வ தொண்டு செய்து வருகின்றனர். RI மூலம் நடத்தப்படும் உலக போலியோ தினத்தில் இவர்களின் அர்ப்பணிப்பு பிரதிபலிக்கிறது. உலக போலியோதின முன்முயற்சி களில் 2016ம் ஆண்டியிலிருந்து உலகளாவிய தர வரிசையில் பிரேசில் முன்னிலை வகிக்கிறது.

*நுனோ விர்கிலியோ நெடோ, பத்திரிகையாளர். ரியோடி ஜெனிரோ ரோட்டரி சங்கத்தின் கௌரவ உறுப்பினர். 2016ம் ஆண்டு முதல்* பிரேசில் ரோட்டரி *இதழின் ஆசிரியராக இருந்து வருகிறார்.*

(ஜெர்மனியின் இதழ் *ரோட்டரி மேகஸின்*-யிலிருந்து...)

# இந்தியப் பிராந்திய உணவுகள்: ஒரு சுவைப் பயணம்

**ஷர்மிளா சாந்த்**

*காஷ்மீர் முதல் அவத், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ராம்பூர்வரை பலவிதமான சுவைகளை அனுபவியுங்கள்: புகழ் பெற்ற சமையல் கலைஞர்கள் வீட்டில் எளிதாகச் சமைக்கக்கூடிய சமையல் குறிப்புகளைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.*

## நல்லி நிகாரி



**ராஜேஷ் வாத்வா**
*சிறப்புச் சமையல் கலைஞர்*
*தாஜ் பேலஸ், புது தில்லி*

இந்த வளமான, சுவையான உணவு ஷாஜகானாபாத், அதாவது, பழைய தில்லியிலிருந்து வருகிறது, முகலாயர் ஆட்சியின்போது உருவாக்கப்பட்டது. போபால், அவத், ஹைதராபாத் சமையல்களின் மையத்தில் இதைக் காணலாம், இங்கு நாம் காண்பது ஒரு பழைய சமையல் குறிப்பு. சுவையான, வெல்வெட் போன்ற பதம் கொண்ட இதைக் கமீரி ரோட்டி அல்லது சூடான நானுடன் உண்ணலாம்.

**தேவையான பொருட்கள்**

- ஆட்டுக் கால்கள் 1 கிலோ
- ஆட்டு இறைச்சிச் சாறு 1.5-2 லிட்டர்
- கடுகு எண்ணெய் 150 மிலி
- கிராம்பு 3 கிராம்
- பச்சை ஏலக்காய் 3 கிராம்
- பிரியாணி இலை 2 எண்ணிக்கை
- இலவங்கப்பட்டை 5 கிராம்
- துண்டு துண்டாக நறுக்கிய வெங்காயம் 150 கிராம்
- இஞ்சி விழுது 40 கிராம்
- பூண்டு விழுது 40 கிராம்
- சிவப்பு மிளகாய்த் தூள் 10 கிராம்
- மஞ்சள் மிளகாய்த் தூள் 20 கிராம்
- மஞ்சள் தூள் 20 கிராம்
- கொத்தமல்லித் தூள் 50 கிராம்
- யோகர்ட் 150 கிராம்; வறுக்கப்பட்ட கடலை மாவு 50 கிராம்
  கரம் மசாலாத் தூள் 20 கிராம்
  உப்பு தேவைக்கு ஏற்ப;
  குங்குமப் பூ; கொத்தமல்லி இலைகள் மற்றும் நீளமாக வெட்டிய இஞ்சித் துண்டுகள் அலங்கரிக்க

**செய்முறை**

கனமான ஒரு பாத்திரத்தில் கடலை எண்ணெயைச் சூடாக்குங்கள். எல்லா மசாலாக்களையும் சேர்த்து வெடிக்கவிடுங்கள். வெட்டிய வெங்காயத்தைச் சேர்த்துத் தங்கப் பழுப்பு நிறம் வரும்வரை சமையுங்கள். இஞ்சி, பூண்டு விழுதுகளைச் சேர்த்து நன்கு வறுங்கள். ஆட்டுக் கால்கள், சிவப்பு மிளகாய்த் தூள், மஞ்சள் மிளகாய்த் தூள், மஞ்சள், கொத்தமல்லித் தூள், அடித்த யோகர்ட் சேர்த்து நன்கு வறுங்கள்.

ஆட்டு இறைச்சிச் சாற்றைச் சேர்த்து, கால்கள் பதமாகும்வரை மெதுவான சூட்டில் சூடாக்குங்கள். இன்னொரு பாத்திரத்தில் நெய்யைச் சூடாக்கி வறுத்த கடலை மாவைச் சேருங்கள், நறுமணத்துடன் இளம் தங்க நிறம் வரும்வரை வறுங்கள். இதைத் தயாரித்த கால்களில் சேருங்கள், நல்ல குழம்புப் பதத்தை உருவாக்குங்கள். சுவையூட்டிகளைச் சரி செய்யுங்கள். கரம் மசாலா, குங்குமப் பூ சேர்த்து நிறைவுசெய்யுங்கள். புதிய கொத்தமல்லி இலைகள், நீளமாக வெட்டிய இஞ்சித் துண்டுகளால் அலங்கரியுங்கள். சூடாகப் பரிமாறுங்கள்.

## மச்சி கொலிவாடா

**சுவப்னாதீப் முகர்ஜி**
*சிறப்புச் சமையல் கலைஞர்,*
*தி மெட்ரோபோலிட்டன் ஹோட்டல் & ஸ்பா*

மும்பையின் புகழ் பெற்ற உணவு வகைகளில் ஒன்று மச்சி கொலிவாடா, ஹசாரா என்ற பாகிஸ்தான் ஊரிலிருந்து இங்கு குடியேறிய பஞ்சாபிகளிடமிருந்து

வந்தது. புகழ் பெற்ற மச்சி அம்ரித்சரி''யைப்போன்றது. சுவை மிக்க இந்த உணவை விரைவாகவும் எளிதிலும் சமைக்கலாம்.

**தேவையான பொருட்கள்**

- பசா ஃபில்லெட் (மீன்) 150 கிராம்
- கடலை மாவு 50 கிராம்
- அரிசி மாவு 30 கிராம்
- மிளகாய் விழுது 5 கிராம்
- ஓம விதைகள் 2 கிராம்
- தயிர் 10 கிராம்
- டெஜிமிர்ச் 5 கிராம்
- சீரகத் தூள் 5 கிராம்
- கரம் மசாலா 5 கிராம்
- மஞ்சள் தூள் 5 கிராம்
- பெருஞ்சீரக விதைகள் 2 கிராம்
- எலுமிச்சை 1 துண்டு
- இஞ்சிப் பூண்டு விழுது 10 கிராம்
- உப்பு 2 கிராம்
- பொரிப்பதற்கு எண்ணெய் 500மிலி

**செய்முறை**

மீனை எட்டுத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். கடலை மாவு நீங்கலாக அனைத்து மசாலாக்கள், தயிரை மீனில் பூசுங்கள். 30 நிமிடம் வைத்து விடுங்கள். இன்னொரு குவளையில் கடலை மாவை எடுத்துக்கொள்ளுங்கள். நீர் சேர்த்து மாவாக்குங்கள். ஒரு பாத்திரத்தில் எண்ணெயை ஊற்றுங்கள். மீனை மாவில் போட்டு நன்கு கலக்குங்கள். மீன் துண்டுகளைத் தங்கப் பழுப்பு நிறம் வரும்வரை வறுங்கள். புதினாச் சட்னி, எலுமிச்சைத் துண்டுடன் பரிமாறுங்கள்.



# ஆலோ கோஷ்ட்

**ஒசாமா ஜலாலி**
*சமையல் கலைஞர்*
*தி முகல் ப்ளேட் பை ஜலாலிஸ்*

**தேவையான பொருட்கள்**

- ஆட்டு இறைச்சி 1 கிலோ
- உருளைக் கிழங்கு 500 கிராம்
- எண்ணெய்/நெய் 200 கிராம்
- மஞ்சள் 5 கிராம்; சிவப்பு மிளகாய்த் தூள் 10 கிராம்
- கொத்தமல்லித் தூள் 15 கிராம்
- பழுப்பு நிறத்தில் வறுத்த வெங்காயம் 200 கிராம்
- யோகர்ட் 200 கிராம்; கிராம்பு 8; கரம் மசாலா 5 கிராம்; பூண்டு விழுது 10 கிராம்; தண்ணீர் 1லிட்டர்; உப்பு சுவைக்கு



**செய்முறை**

நெய்/எண்ணெயை லகான் என்ற பாத்திரத்தில் சூடாக்குங்கள், கிராம்பு, இறைச்சியைச் சேருங்கள். 2 நிமிடம் வறுத்த இஞ்சிப் பூண்டு விழுதைச் சேருங்கள், 2 முதல் 3 நிமிடங்கள் கழித்து மஞ்சள், சிவப்பு மிளகாய்த் தூள், கொத்தமல்லித் தூள், உப்பு சேருங்கள். 5 முதல் 10 நிமிடம் வறுங்கள், 1 லிட்டர் தண்ணீர் சேர்த்து மூடிவிடுங்கள், அரை மணி நேரம் அப்படியே விட்டுவிடுங்கள், இறைச்சி பதமாகட்டும்.

இப்போது, உருளைக் கிழங்கு, பழுப்பு வெங்காயம், யோகர்ட்டைச் சேருங்கள். இன்னும் தண்ணீர் சேர்த்து உருளைக் கிழங்கு வேகும் வரை 15 நிமிடங்கள் விட்டுவிடுங்கள். மேலே கரம் மசாலாவைச் சேருங்கள். புதிய கொத்தமல்லியால் அலங்கரித்துப் பரிமாறுங்கள்.

# கெர் சங்க்ரி



**ராஜ் குமார்**
*சிறப்புச் சமையல் கலைஞர்*
*ஹாலிடே இன்*
*ஜெய்ப்பூர் சிட்டி சென்டர்*

ராஜஸ்தானைச் சேர்ந்த சுவையான பண்பாட்டு உணவான கெர் சங்க்ரி காரசாரமான காய்கறி உணவு. இதில் உலர் திராட்சையைச் சேர்த்தால் இன்னும் சிறப்பாகி விடும். ஏனெனில், அது கார உட்பொருட்களின் சுவையை மேம்படுத்துகிறது, இனிப்புச் சுவையையும் வழங்குகிறது.

**தேவையான பொருட்கள்**

- சங்க்ரி 75 கிராம்
- கெர்
- 50 கிராம்
- கடுகு எண்ணெய்
- 70 மிலி.
- சீரக விதைகள் 5 கிராம்
- கடுகு விதைகள் 2 கிராம்
- சிவப்பு மிளகாய்த் தூள் 2 கிராம்
- மஞ்சள் தூள் 3 கிராம்
- கொத்தமல்லித் தூள் 10 கிராம்
- உப்பு தேவைக்கு ஏற்ப
- தயிர் 50 கிராம்
- உலர் மாங்காய்த் தூள் 10 கிராம்
- எலுமிச்சைச் சாறு 10 மிலி
- பச்சைக் கொத்தமல்லித் தழை 25 கிராம்

**செய்முறை**

கெர், சங்க்ரியில் சிறிது உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து இரவு முழுக்க ஊற விடுங்கள். ஊற வைத்த கெர்-சங்க்ரியை வேகவிட்டு,

நீரை வடித்து, ஓரமாக வைத்து விடுங்கள். அடித்த தயிர், மஞ்சள், கொத்தமல்லி, சிவப்பு மிளகாய், உப்பை ஒரு பாத்திரத்தில் இதமான மாவாக ஆக்குங்கள். ஒரு பாத்திரத்தில் எண்ணெயைச் சூடாக்குங்கள், சீரக விதைகள், கடுகு விதைகளைச் சேருங்கள், அவை வெடிக்கும்போது முழு உலர் சிவப்பு மிளகாயைச் சேருங்கள், பிறகு, தயிர்க் கலவையைச் சேர்த்து 15 நிமிடங்கள் சமையுங்கள். மேலுள்ள கலவையில் கெர், சங்க்ரியைச் சேர்த்து மேலும் 10 நிமிடங்கள் சமையுங்கள். நிறைவாக, எலுமிச்சைச் சாறு, உலர் மாங்காய்த் தூளைச் சேருங்கள். நறுக்கிய கொத்தமல்லியால் அலங்கரித்துச் சூடாகப் பரிமாறுங்கள்.

## காஷ்மீரி ஃபிர்னி

**கரன் பன்சால்**
*முத்த சோஸ் சமையல் கலைஞர், சோர் பிஜார்ரெ, பிக்கனெர் ஹவுஸ்*

**உட்பொருட்கள்** (10 சிறு கிண்ணங்களுக்கு)

- தடிமனான அளவு ரவை: 80 கிராம்
- முழுக் கிரீம் பால்: 1 லிட்டர்
- சர்க்கரை: 80 கிராம்
- குங்குமப் பூ: 0.25 கிராம்; முந்திரி: 80 கிராம்
- சுண்டக் காய்ச்சிய பால்: 100 கிராம்; நறுக்கிய பாதாம்: 20 கிராம்; ஏலக்காய்ப் பொடி: 5 கிராம்

**செய்முறை:** ரவையையும் முந்திரியையும் தனித்தனியாகத் தூய்மைப்படுத்தித் தண்ணீரில் தனித்தனியாக ஊற வையுங்கள்.

குங்குமப்பூவை வெதவெதப்பான நீரில் ஊற வையுங்கள். பாலைச் சூடாக்குங்கள், அடி பிடித்துவிடாதபடி தொடர்ந்து கிளறுங்கள். பால் கொதிக்கத் தொடங்கியபிறகு, ஊற வைத்த ரவை, முந்திரியைச் சேருங்கள். தொடர்ந்து கிளறுங்கள். ஊற வைத்த குங்குமப்பூ சேருங்கள், ஏலக்காய்த் தூளைத் தூவுங்கள்.



பால் கொதிக்கும் போது சர்க்கரை சேர்த்துக் கிளறுங்கள். சுண்டக் காய்ச்சிய பாலைச் சேர்த்து நன்கு கிளறுங்கள், அதை ஊற்றும் பதத்துக்குக் குறையுங்கள். அடுப்பிலிருந்து எடுத்துவிடுங்கள். சிறிய மண் கிண்ணங்களுக்கு இதை மாற்றுங்கள், குளிர விடுங்கள். குங்குமப் பூ, நறுக்கிய பாதாமால் அலங்கரியுங்கள். இதைக் குளிர்ச்சியாகப் பரிமாறுங்கள்.

# தார்வாட் பெண்களின் கல்விக்கு உதவும் ரோட்டரி

ரோட்டரி செய்திக் குழு




RID 3170ல் உள்ள ரோட்டரி சங்கங்கள் தார்வாட் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பல பள்ளிகளைத் தத்தெடுத்துக்கொண்டுள்ளன, அவற்றுக்குக் கை கழுவும் வசதி, ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனிக் கழிப்பறைகள் போன்ற அடிப்படை வசதிகளை வழங்கி, குழந்தைகளுக்குக் கோவிட் நோய்ப்பரவலுக்கு எதிரான தனிப்பட்ட தூய்மையில் பயிற்சியளிக்கின்றன என்றார் WinS தேசியக் குழு உறுப்பினர் PDG கணேஷ் G பட்.

உலகப் பெண் குழந்தை நாளைக் கொண்டாடும்வகையில், பல காரணங்களால் பள்ளியிலிருந்து நின்ற 10 மாணவிகளைத் தார்வாட் சென்ட்ரல் மற்றும் தார்வாட் ஹெரிட்டேஜ் சங்கங்கள் தத்தெடுத்துக் கொண்ட நிகழ்ச்சியில் பேசிய அவர், குழந்தைகளை மீண்டும் பள்ளிக்கு அனுப்புவதற்குப் பெருநிறுவனங்கள் தங்கள் CSR நிதிகளின் வழியாக உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ரோட்டரி சங்கங்கள் அரசுப் பள்ளிகளுக்குப் பல வசதி களை வழங்கியுள்ளன, இதனால், நோய்ப்பரவல் இருந்தபோதும் அந்தப் பள்ளிகள் திரும்பத் திறக்கப்பட்டுள்ளன என்றார் கர்நாடக அரசுப் பொதுக் கல்வித் துறை ஆணையர் மேஜர் சித்தலிங்கய்யா. சோப்புடன் கை கழுவும் அமைப்புகள், ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனிக் கழிப்பறைகள், நீர் வசதி, MHM நிகழ்ச்சிகளை வழங்கும் சங்கங்கள், பெற்றோர் தயக்கமின்றித் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும் என்று ஊக்குவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மன நல மருத்துவர் Dr ஆனந்த் பாண்டுரங்கி பேசுகையில், குழந்தைகள், பெற்றோரின் மன நிலையை மாற்ற ரோட்டரி முக்கியப் பங்களித்துள்ளதாகவும், இதனால் பள்ளிகள் திறக்கப்பட்டுப் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் வகுப்புகளில் கலந்துகொள்வதாகவும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் RC தார்வாட் சென்ட்ரல் தலைவர் Dr ஆனந்த் தவர்கெரி, செயலாளர் நாகராஜ், RC தார்வாட் ஹெரிடேஜ் தலைவர் Dr வாணி இர்கல், செயலாளர் Dr மகாபால் ஷெட்டி, நிகழ்ச்சித் தலைவர் ஆனந்த் நாயக் பங்கேற்றார்கள். ■




## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotary clubs | : | 36,994 |
| Rotaract clubs | : | 10,707 |
| Interact clubs | : | 16,795 |
| RCCs | : | 11,875 |
| Rotary members | : | 1,201,654 |
| Rotaract members | : | 230,701 |
| Interact members | : | 386,285 |

*As on November 17, 2021*

## Membership Summary

As on November 1, 2021

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 132 | 6165 | 7.53 | 44 | 52 | 236 |
| 2982 | 76 | 3564 | 7.27 | 47 | 98 | 73 |
| 3000 | 137 | 5423 | 9.13 | 90 | 259 | 213 |
| 3011 | 125 | 4666 | 26.88 | 71 | 118 | 36 |
| 3012 | 132 | 4071 | 27.09 | 65 | 76 | 61 |
| 3020 | 77 | 4756 | 7.30 | 30 | 166 | 350 |
| 3030 | 96 | 5140 | 15.14 | 116 | 243 | 363 |
| 3040 | 102 | 2619 | 14.55 | 54 | 81 | 196 |
| 3053 | 69 | 2784 | 18.03 | 33 | 49 | 118 |
| 3054 | 184 | 7428 | 20.36 | 103 | 177 | 563 |
| 3060 | 110 | 5184 | 14.95 | 62 | 70 | 147 |
| 3070 | 124 | 3308 | 15.63 | 42 | 35 | 59 |
| 3080 | 98 | 4157 | 13.30 | 135 | 158 | 115 |
| 3090 | 90 | 2310 | 5.63 | 38 | 64 | 123 |
| 3100 | 105 | 2373 | 11.21 | 10 | 21 | 146 |
| 3110 | 134 | 3683 | 11.02 | 14 | 17 | 106 |
| 3120 | 90 | 3605 | 16.56 | 62 | 31 | 55 |
| 3131 | 140 | 5539 | 23.74 | 108 | 229 | 131 |
| 3132 | 90 | 3616 | 10.92 | 31 | 122 | 166 |
| 3141 | 117 | 6418 | 27.13 | 137 | 182 | 102 |
| 3142 | 104 | 3769 | 20.75 | 79 | 137 | 80 |
| 3150 | 115 | 4293 | 13.60 | 75 | 135 | 118 |
| 3160 | 78 | 2652 | 8.82 | 27 | 20 | 82 |
| 3170 | 138 | 6308 | 14.90 | 83 | 239 | 171 |
| 3181 | 87 | 3485 | 8.78 | 33 | 194 | 115 |
| 3182 | 85 | 3479 | 9.60 | 42 | 124 | 104 |
| 3190 | 160 | 6765 | 18.34 | 156 | 202 | 70 |
| 3201 | 153 | 6009 | 9.42 | 103 | 89 | 63 |
| 3203 | 92 | 4760 | 7.94 | 73 | 233 | 36 |
| 3204 | 62 | 2059 | 6.41 | 19 | 23 | 13 |
| 3211 | 145 | 4834 | 7.86 | 7 | 24 | 134 |
| 3212 | 143 | 5278 | 12.86 | 74 | 204 | 153 |
| 3231 | 98 | 3729 | 8.64 | 28 | 81 | 419 |
| 3232 | 152 | 7478 | 17.05 | 114 | 212 | 99 |
| 3240 | 102 | 3563 | 15.89 | 61 | 405 | 216 |
| 3250 | 107 | 4018 | 19.91 | 63 | 73 | 185 |
| 3261 | 92 | 3217 | 18.28 | 14 | 23 | 44 |
| 3262 | 123 | 4154 | 14.42 | 68 | 72 | 89 |
| 3291 | 168 | 4173 | 23.27 | 133 | 95 | 647 |
| **India Total** | **4,432** | **170,832** | | **2,544** | **4,833** | **6,197** |
| 3220 | 76 | 2396 | 16.36 | 87 | 131 | 75 |
| 3271 | 130 | 2217 | 17.41 | 91 | 185 | 25 |
| 3272 | 161 | 1963 | 17.07 | 70 | 22 | 47 |
| 3281 | 308 | 8329 | 18.50 | 264 | 147 | 209 |
| 3282 | 175 | 3957 | 11.80 | 196 | 47 | 47 |
| 3292 | 153 | 6053 | 17.26 | 168 | 128 | 129 |
| **S Asia Total** | **5,435** | **195,747** | | **3,420** | **5,493** | **6,729** |

*Source: RI South Asia Office*

# ரோட்டரி ஆளுநர்



## ராஜேந்திர அகர்வால்

டெக்ஸ்டைல்ஸ்
RC மும்பை குயீன் சிட்டி, RID 3141

## மும்பையின் ஹவுஸிங் சொசைட்டிகளில் வளர்ந்து வரும் ரோட்டரி சங்கங்கள்

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மும்பை ஹவுஸிங் சொசைட்டியில் மும்பை லோயர் பரேல் ரோட்டரி சங்கம் உருவாக்கப்பட்டது. புதிய சங்கங்களை உருவாக்குவதிலும், உறுப்பினர்களைச் சேர்ப்பதிலும் புதிய நீட்சியை ஏற்படுத்தியது. உயர்ந்த மாடி கட்டடங்கள், செல்வந்தர்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் ஹவுஸிங் சொசைட்டிகளில் ரோட்டரி சங்கங்களை உருவாக்குவதிலும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதிலும் நான் முன்முயற்சிகள் மேற்கொண்டேன். இது எனக்குப் பிடித்த செயலாக மாறிவிட்டது என்கிறார் ராஜேந்திர அகர்வால்.

10 புதிய சங்கங்கள் மற்றும் 1,000த்துக்கும் மேலான புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் அகர்வால் திட்ட மிட்டுள்ளார். புதிதாக 20 ரோட்ராக்ட் சங்கங்களை உருவாக்க வேண்டும், 1,500 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அவர் திட்டமிட்டுள்ளார். கடந்த ஐந்து ஆண்டுகளில் 3,000 குழந்தைகள் இதய அறுவைச்சிகிச்சை பெறுவதற்கான பணிகளை ஒருங்கிணைத்துள்ளார். இந்த ஆண்டு மேலும் 1,500 பேருக்கு சிகிச்சை அளிக்கவும் திட்டமிட்டுள்ளார். சர்வதேச மானிய உதவி மற்றும் உறுப்பினர்கள் பங்களிப்பு மூலம் 25 லட்சம் பலன் தரும் மரக்கன்றுகளை பால்கரில் உள்ள விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கவும் திட்டமிட்டுள்ளார். இவரது TRF நிதி திரட்டும் இலக்கு 3 மில்லியன் டாலர். 1992 ஆம் ஆண்டு ரோட்டேரியன் அஜய் கோயல் என்னை ரோட்டரிக்கு அறிமுகப்படுத்தினார். பின்னர் PDGக்கள் டாக்டர் பால் இனாம்தார் மற்றும் ஷ்ரீரங் பிரபு ஆகியோரின் செயல்களினால் ஈர்க்கப்பட்டு படிப்படியாக மேல்நிலைக்கு வந்தேன் என்கிறார் அகர்வால்.



## கர்னல் மகேந்திர மிஸ்ரா

முன்னாள் ராணுவ அதிகாரி
RC போபால் ஹில்ஸ், RID 3040

## ரோட்ராக்ட் சங்கங்களுக்கு ஊக்கம்

தன்னார்வத்தால் ஈர்க்கப்பட்ட இந்த ரோட்டேரியன், ராணுவத்தில் கர்னலாக இருந்தவர். கடந்த 2009ம் ஆண்டு நான் ராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்றேன். அப்போது எனது நண்பர் ஒருவர் என்னை ரோட்டரியிடம் அறிமுகப்படுத்தினார் என்கிறார் மகேந்திர மிஸ்ரா.

இதுவரை 13 புதிய ரோட்ராக்ட் சங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மேலும் ஐந்து சங்கங்கள் நிறுவப்படுவதற்காக காத்திருக்கின்றன.

அரசு மற்றும் அறக்கட்டளை மூலம் செயல்பட்டு வரும் மருத்துவமனைகளுடன் ஐந்து டயாலிஸிஸ் மையங்கள் 1,75,000 டாலர் சர்வதேச மானிய உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு இணைக்கப்பட உள்ளன. இரண்டு நடமாடும் தீவிர சிகிச்சை பிரிவு, நடமாடும் இதய நோய் சிகிச்சை பிரிவுகள் குஜராத் மற்றும் MPயில் ஜபுர்வைவா நகரில் 40,000 டாலர் சர்வதேச மானியத்திட்டம் மூலம் ஏற்படுத்தப்படும். கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்ட நிதியுதவியுடன் 15 பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் பொது மருத்துவ முகாம், கண் சிகிச்சை முகாம், பல் மருத்துவம் மற்றும் நீரிழிவு நோய் கண்டறியும் முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. ஊரகப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் 850 மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். TRF நிதிப் பங்களிப்புக்கு 2,50,000 டாலர் நிதி திரட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்





## ராஜீவ் சிங்கால்
**வருமான வரி ஆலோசகர்**
RC சாகேத் மீரட், RID 3100

## ரோட்டரியின் உயர்நிலையைப் பேணுவோம்!

ஒரு சிறந்த சேவை நிறுவனமான ரோட்டரி, தனது தனித்தன்மையை தக்கவைத்துக் கொள்ளும் வகையில் தரமான உறுப்பினர்களை ஈர்க்கும் வகையில் கொள்கைகளை உருவாக்கி செயல்பட வேண்டும் என்றார் ராஜீவ்சிங்கால். 6 புதிய சங்கங்களை நிறுவ திட்டமிட்டு இரண்டு சங்கங்களை ஏற்படுத்தியுள்ளோம். அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் சங்கங்களின் எண்ணிக்கையை 112ஆக அதிகரிக்க திட்டமிட்டுள் ளோம். புதிதாக 300 உறுப்பினர்களை சேர்ப்பதன் மூலம் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கையை 2,600ஆக உயர்த்தவும் முடிவு செய்துள்ளோம் என்கிறார் அவர்.

மேலும் 10 புதிய ரோட்ராக்ட் சங்கங்களை நிறுவவும் திட்டமிட்டுள்ளோம். குறைந்தபட்சம் 50 குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சை நடத்த இலக்கு நிர்ணயித்துள்ளோம், என்றார் சிங்கால். மேலும் $32,000 டாலர் சர்வதேச மானிய உதவி மற்றும் உறுப்பினர்கள் பங்களிப்புடன் பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டித் தரப்படும். TRF நிதிக்கு $41,000 டாலர் நிதி திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளோம். நான் ரோட்டரியில் 1996ம் ஆண்டு சேர்ந்தேன். அப்போது ரோட்டேரியனாக இருந்த எனது தந்தை J D சிங்கால் தான் இதற்கு முக்கிய காரணம் என்றார் அவர்.

## டாக்டர் உபிந்தர் சிங் காய்
**அறுவைச்சிகிச்சை நிபுணர்**
RC ஜலந்தர் சிட்டி, RID 3070

## ஸ்ரீநகரில் மெகா மருத்துவ முகாம்

ஊரகப்பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கே முன்னுரிமை தரப்போவதாக கூறுகிறார் Dr உபிந்தர் சிங் காய். இவர் ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணர். ஒவ்வொரு மாதமும் ரோட்டரியால் பரிந்துரைக்கப்படும் 4 அல்லது 5 பேருக்கு இலவசமாக அறுவைச்சிகிச்சை செய்து வருகிறார். 1996ம் ஆண்டு தற்செயலாக எனது மருத்துவராகப் பணிபுரிய நண்பர் ரோட்டரியின் இரவு நேர கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு நான் சுவாரஸ்மான சிலரை சந்தித்தேன். முதலில் நட்புக் கூட்டுறவாக இருந்தது பின்னர் சமூக சேவையாக மாறியது என்கிறார் காய். தமது பதவிக் காலத்தில் 500 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும், 10 புதிய சங்கங்களை உருவாக்கி உறுப்பினர்கள் எண்ணிக்கையை 3,900 ஆகவும் சங்கங்களின் எண்ணிக்கையை 135 ஆகவும் உயர்த்த திட்டமிட்டுள்ள தாகக் கூறினார்.

புதிதாக 300 ரோட்ராக்டர்களை சேர்ப்பதே எனது இலக்காகும். பயங்கரவாதிகள் தாக்குதல் மற்றும் மோசமான வானிலை காரணமாக ஸ்ரீநகரில் நவம்பர் மாதம் நடைபெற இருந்த பத்துநாள் மெகா மருத்துவ முகாம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. RID 3141, RID 3142 ஆகியவற்றுடன் இணைந்து அடுத்த ஆண்டு மெகா மருத்துவ முகாம்களை நடத்துவது குறித்து கூறினார்.

தனியார் மருத்துவமனைகளில் சர்வதேச மானிய உதவி திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவ மனைகளில் மூன்று டயாலிஸிஸ் சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்படும். TRF நிதி பங்களிப்பாக 2,00,000 டாலர் திரட்ட இலக்கு நிர்ணயித்துள்ளோம் என்றார்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# குற்றவுணர்ச்சி இல்லாமல் பரிசளிப்போம்

ப்ரீதி மேஹரா

தண்டனையான ஒரு நோய்ப்பரவலைத் தொடர்ந்து, ஆண்டின் நிறைவில் இனி எல்லாம் நல்லபடியாக நடக்கும் போல் தோன்றுகிறது. ஒருவேளை, மூன்றாம் அலை நம்மைத் தீவிரமாகத் தாக்காவிட்டால், இந்தக் கிறிஸ்துமஸ், புத்தாண்டுக் காலகட்டம் கொண்டாடவேண்டிய ஒரு பருவமாக இருக்கலாம். வழக்கமாக ஆண்டு நிறைவு என்பது எப்போதும் நண்பர்கள், உறவினர்களுடன் பேசுகிற, நல்ல மகிழ்ச்சியைப் பரப்புகிற, பரிசுகளைப் பரிமாறிக்கொள்கிற, வரப்போகும் ஆண்டைப்பற்றிய நம்பிக்கையைக் கொண்டாடுகிற ஒரு நேரமாக இருந்துவந்துள்ளது.

டிசம்பர் மாதத்தில் பலரும் நல்ல பரிசுகளை வாங்குவதில் மும்முரமாக இருப்பார்கள். இந்த இதழில் நான் உங்களுக்குப் பல பசுமைப் பரிசு யோசனைகளை விளக்கப்போகிறேன். பூமியை மாசாக்குகிறோமோ என்கிற குற்றவுணர்ச்சி துளியும் இல்லாமல் இவற்றை நீங்கள் பரிசளிக்கலாம்.

சுற்றுச்சூழலுக்கு இதமான பரிசளித்தல் என்றால், வளங்களின் பயன்பாட்டைக் குறைத்தல், மறுசுழற்சி அல்லது உயர்சுழற்சி செய்யப்பட்ட பரிசுகளை வழங்கத் தயாராக இருத்தல். இது பரிசைத் தேர்ந்தெடுப்பதுடன் நின்றுவிடுவதில்லை. அதற்கு நீங்கள் இடுகிற உறையும் பூமிக்கு இதமாக இருக்கவேண்டும்.

முதலில், பரிசுகளைப்பற்றிப் பேசுவோம். தனிப்பட்ட முறையில், பெரியவர்கள், குழந்தைகள் என எல்லாருக்கும் புத்தகப் பரிசு வழங்குவதைத்தான் நான் விரும்புவேன். ஆனால், எல்லாரும் அப்படி எண்ணமாட்டார்கள். இன்று, இயற்கை வளங்களிலிருந்து வருகிற, வேதிப்பொருள், பிளாஸ்டிக் இல்லாத பல பசுமைப் பரிசுகள் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக, சுடுமண் (டெரகோட்டா), மூங்கில், கண்ணாடி மற்றும் உலோகம் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். இவை அனைத்தும் அழகான குவளைகளாக, கோப்பைகளாக, ஜாடிகளாக, கொக்கிகளாக, ஹேங்கர்களாக, மணிகளாக, புத்தக ஓரங்களாக, சிறு தட்டுகளாக, செடி வளர்க்கும் தொட்டிகளாக... இன்னும் பல பொருட்களாக மாற்றப்பட்டுள்ளன. அதனால், நீங்கள் எளிதில் தேர்ந்தெடுப்பதற்காக, பரிசுகளை வழங்கும் சில இணையத் தளங்களை நான் ஆராய்ந்தேன்.

Brown Living என்பது, இந்தியாவின் முதல் பிளாஸ்டிக் இல்லாத சந்தை இடம்'' என்று தன்னை அழைத்துக்கொள்கிறது, பரிசுகளின் சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பிட்டு அவற்றைச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து வழங்குகிறது. இங்கு வீகன், நீடித்த பொருட்கள் ஆகிய வகைகள் உள்ளன. பரிசுகளைப் பிளாஸ்டிக் இல்லாமல் பொதியாக்கி அனுப்புகிறார்கள், இதனால் கிடைக்கும் லாபத்திலிருந்து மரங்களை நட்டு, ஒவ்வோர் ஆர்டரிலும் கார்பன் சமநிலையையும் கொண்டு வருகிறார்கள்.

Loopify, இங்கு உயர்சுழற்சி, மறுசுழற்சி செய்யப்பட்ட, மக்கக்கூடிய பொருட்களிலிருந்து செய்யப்பட்ட புதுமையான பரிசுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, மூங்கிலில் செய்யப் பட்ட மேசை அடுக்குவான்கள், செடித் தொட்டிகள், உறிஞ்சுகுழல்கள், பல் குத்தும் குச்சிகள், கரண்டிகள், சிறு தட்டுகள், பல் தேய்க்கும் பிரஷ்கள், பியர் குவளைகள், சாலட் கிண்ணங்கள்... இன்னும் பல. உயர் சுழற்சி செய்யப்பட்ட கார்க்கிலிருந்து அவர்கள் தயாரித்துள்ள பொருட்கள்: சிறு தட்டுகள்,





பணப்பைகள், கடவுச்சீட்டுச் செருகிகள், யோகாப் பாய்கள்கூட. அதேபோல், கண்ணாடி, உலோகத்திலும் இவர்கள் பரிசுகளை வழங்குகிறார்கள், எதைத் தேர்ந்தெடுப்பது என்று உங்களை வியக்கவைக்கிறார்கள்.

Green Feels என்ற தளம் எழுது பொருட்கள், ஆடைகள், துணைப் பொருட்கள் ஆகிய பிரிவுகளில் பரிசுப் பொருட்களை வழங்குகிறது, சமையலறை, குளியலறைக்கான குறிப்பிட்ட மற்றும் வீட்டுக்கான பொதுப் பரிசுப் பொருட்களையும் வழங்குகிறது. இங்கு நீங்கள் செடிகளையும் வாங்கலாம். பலர் செடிகளை பரிசாக பெற விரும்பு கிறார்கள். குறிப்பாக, சதைப்பற்றுள்ள வகைச் செடிகள் இதற்கு மிகவும் புகழ் பெற்றுள்ளன. ஏனெனில், இவற்றை வீட்டினுள் வைக்கலாம், மற்ற செடிகள் அளவுக்கு இவற்றை மிகுதியாகப் பராமரிக்க வேண்டியதில்லை. தொங்கும் பானைகளும் பலருக்குப் பிடித்துள்ளன. இவற்றை உங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள தோட்ட வேலைக் கடைகளில் வாங்கலாம், இதன் மூலம், ஒரு நுண் தொழில்முனைவோரை ஊக்குவிக்கலாம். இந்த ஆண்டு தீபாவளியின் போது, தொழில் ஊக்கம் மிக்க இளைஞர் ஒருவர் தூக்கி எறியப்பட்ட கொட்டாங்குச்சி களிலிருந்து மெழுகுவர்த்திகளை உருவாக்கினார். அவர் அந்தக் கொட்டாங்குச்சி களிலிருந்து தேங்காயை அழகாக நீக்கினார், மீதமுள்ள ஓட்டில் மெழுகை நிரப்பினார், சுற்றுச் சூழலுக்கு இதமான இந்தப் பரிசை எல்லாருக்கும் வழங்கினார்.



பரிசுகளைப் pack செய்யும் போதும் இதை நினைவில் கொள்ளவேண்டும். என்னுடைய நண்பர் ஒருவர் என் மகனுக்குப் பிறந்தநாள் பரிசுகளை வழங்கும்போது, அவற்றைச் செய்தித்தாளால் சுற்றி நூலால் கட்டுவார், அந்தச் செய்தித்தாள் மீது அவருடைய மகள் வண்ணப் பென்சில்களால் வண்ணம் தீட்டுவார். இதனால் அவர் மூன்று விஷயங்களைச் சாதித்தார்: குழந்தைகள் மனத்தில் மறுசுழற்சி உணர்வைப் பதிப்பது, தன் குழந்தைக்கு ஒரு படைப்புணர்வுள்ள வேலையை வழங்குவது, வெறும் கண்ணுக்குத் தெரியாத பிளாஸ்டிக் பூச்சைக் கொண்ட பளபளப்பான சுற்றும் தாளை வாங்காமல் தவிர்ப்பது.

100% மறுசுழற்சி செய்யக்கூடிய தாள் மற்றும் அட்டைப்பெட்டி ஆகியவற்றைக் கொண்டு நீங்கள் உங்கள் பரிசுகளைப் pack செய்யலாம்.

கண்ணாடியும் மறுசுழற்சி செய்யக் கூடிய பொருள்தான், தனிப்பட்ட பரிசுகளைப் பொட்டலமாக்குவதற்கு அதையும் நன்கு பயன்படுத்தலாம். ஓர் அழகிய கண்ணாடி பாட்டிலை மீண்டும் பயன்படுத்தி, அதில் வீட்டில் செய்த ஊறுகாய், பழ ஜூஸ் அல்லது சாக்லெட் ஃபட்ஜை நிரப்பிப் பரிசளிப்பது மிகச் சிறந்த தாக இருக்கும். அல்லது, உங்கள் அன்பையும் அக்கறையையும் காண்பிக்கும்வகையில், உடல் நலத்துக்கு மிகவும் ஏற்ற சூரியகாந்தி அல்லது முலாம்பழ விதைகளை அதில் நிரப்பிப் பரிசளிக்கலாம்.

துணி மற்றும் சணல் ஆகியவையும் gift wrap செய்ய மிகச்சிறந்த மாற்றுப் பொருட்கள். ஆண்டுக்கு ஒருமுறை, நீங்கள் உங்களுடைய வீட்டு அலமாரிகளைத் தூய்மைப்படுத்தும் போது, தேவையில்லாத பொருட்கள் அல்லது துணிகளைக் குவித்து வையுங்கள்; உங்கள் கற்பனையைப் பயன்படுத்தி அவற்றைப் பல வடிவங்கள், அளவுகளிலான பைகளாக மாற்றுங்கள். நீங்கள் அவற்றைப் பணப் பரிசு வழங்கும் உறைகளாகவும் மாற்றலாம்.

சுற்றுச்சூழலுக்கு இதமான பரிசுகளை வழங்குவதில் நமக்குப் புதுமைச் சிந்தனையும் அர்ப்பணிப்பும் தேவை. நீடித்த பரிசுகளுக்கு இன்னொரு பரிமாணமும் உண்டு. நாம் வளங்களின் பயன்பாட்டைக் குறைப்பதுடன், இயற்கையான, மக்கக்கூடிய, மறுசுழற்சி, உயர்சுழற்சி செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவதுடன், இந்தப் பூமியில் வாழ்வோர்மீது கவனம் செலுத்துகிறோம். இதன் பொருள், நாம் உலகுக்குத் திருப்பி வழங்குகிறோம், உள்ளூர்க் கலைஞர்களை ஆதரிக்கிறோம், வளங்கள் சமநிலையில் பகிர்ந்து வழங்கப்படுவதை, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நியாயமாகச் சம்பளம் வழங்குவதை நம்புகிறோம், பூமியில் இன்னும் நேர்விதமான தாக்கத்தை உண்டாக்குகிறோம்.



எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

Wordsworld

# Not simply courage, conviction too




Sandhya Rao

**Malala Yousafzai proves William Wordsworth right: child is the father of man.**

We have all heard the phrase: 'out of the mouths of babes'. This was one reason I had not picked up Malala Yousafzai's book, *I Am Malala*, all these years. Yes, she had lived through a terrible experience — being shot at by Taliban terrorists — at age 15 with tremendous courage and had come through it all to become a role model especially for young people and women. Ever since, she had been in the news and had been seen to have met influential people and received international honours, including the Nobel Prize when she was just 16. But… but, she was just a kid! I couldn't have been proved more wrong.

Recently, I watched a programme on YouTube showing Malala addressing the Canadian parliament after being conferred honorary citizenship of that country. It was old news, but I was blown away. By her simplicity, composure, humour, restrained oratory, powerful message and, more than anything else, her spirit of forgiveness. At this time of the season, when people of different faiths celebrate peace, goodwill, enlightenment and devotion, it seemed as though the universe were leading me to her. That's how I started reading *I Am Malala*, which she has co-authored with journalist Christina Lamb, whose book, *Farewell Kabul*, was featured in this column a couple of months ago.

What an education the book is, full of insightful observations that sweep away dust in the mind. It talks about the history of the region, the Swat Valley that straddles both Pakistan and Afghanistan; the people and their beliefs and practices; the growth of the Taliban; social conditions and conditioning, the lack of education and basic facilities; mystical mountains, clear skies and running water, and sometimes piles of garbage; the efforts to educate children, especially girls; growing up in a loving environment in a society rigid with rules; a father who defies stereotypes and a daughter who follows suit, yet who are both very much products of their circumstances; the love for reading; being a girl; speaking up and dressing up; politics and holding political views; the generosity and support of strangers…





No wonder the book was declared nonfiction book of the year when it was published.

Christina Lamb, as we already know, comes with firsthand knowledge of the region. Malala, we realise, is extraordinary. And although a lot of the background information is clearly the work of the journalist, it is Malala's voice we hear. You see that she wasn't just some random kid who got in the way of the Taliban. Even before she turned 13, she was politically aware, speaking publicly in support of the importance of educating girls and questioning injustices in society. In this, she was deeply influenced by her father, Ziauddin, who took the lead in the community and beyond in opposing social injustices and speaking out against the violence perpetrated by the Taliban.

As you read, you get a strange but distinct feeling as if Malala was 'chosen' to be at the receiving end of bullets shot at her pointblank by two men who stopped the van bringing her and

other children back home from school on October 9, 2012. ‘Who is Malala?’ they asked and when she identified herself, they fired three shots. Malala slumped forward; two other girls were also hurt but their wounds were less grievous.




While all these and the story of how Malala was flown on the private plane of a Saudi royal for treatment in the UK and her gradual recovery read almost like fiction, it’s the painting with words of the larger canvas that is riveting. You are compelled to pay attention as, for instance, you read: ‘Children in the refugee camps were even given school textbooks produced by an American university which taught basic arithmetic through fighting. They had examples like, “If out of 10 Russian infidels, 5 are killed by one Muslim, 5 would be left” or “15 bullets – 10 bullets = 5 bullets”.’

A simple paragraph like the following resonates with us but it also tells a troubling story: ‘It was school that kept us going in those dark days. When I was in the street it felt as though every man I passed might be a *talib*. We hid our school bags and our books in our shawls. My father always said that the most beautiful thing in a village in the morning is the sight of a child in a school uniform, but now we were afraid to wear them.’

Despair seeps through simple words: ‘People had lived by the river in Swat for 3,000 years and had always seen it as our lifeline, not a threat, and our valley as a haven from the outside world. Now we had become “the valley of sorrows”, said my cousin Sultan Rome. First the earthquake, then the Taliban, then the military operation and now, just as we were starting to rebuild, devastating floods arrived to wash all our work away. People were desperately worried that the Taliban would take advantage of the chaos and return to the valley.’

And a few lines later, you see Malala reaching right for the fundamentals: ‘While all this suffering was going on, while people were losing their loved ones, their homes and their livelihoods, our president, Asif Zardari, was on holiday at a chateau in France. “I am confused, *Aba*… What’s stopping each and every politician from doing good things? Why would they not want our people to be safe, to have food and electricity?”’ Questions that echo around the world.

It’s been some years and Malala is now a young woman. But she continues speaking up and asking questions, and has used her prize money to set up a fund to help children, especially girls and women. This prompted me to read, along with *I Am Malala*, a book in which she shares stories from refugee girls around the world, called *We Are Displaced*. Noting that according to statistics from the UNHCR more than 44,000 people a day are forced to flee their homes, Malala urges us, among other things, to ‘be kind to a new student who has been displaced and is starting over… Know that empathy is key.’ And we in India know too well that it’s not just conflict or poverty that creates refugees; it’s government policies and people’s attitudes too.

It’s not just conflict or poverty that creates refugees; it’s government policies and people’s attitudes too.

Malala was 16 when she was invited to speak at the United Nations: ‘I did not write the speech only with UN delegates in mind; I wrote it for every person around the world who could make a difference. I wanted to reach all people living in poverty, those children forced to work and those who suffer from terrorism or lack of education. I called on the world’s leaders to provide free education to every child in the world. “One child, one teacher, one book and one pen can change the world.”’

Zaynab, who fled war in Yemen and eventually settled in the US, met Malala after a screening of the film *He Named Me Malala*. She says she felt she was meeting a movie star. ‘But then,’ she says, ‘she sat down and started asking us questions, and I realized, *She is just like us*.’

If a girl, just like us, can touch so many lives and make us think about the need for change, what better purpose can books serve?

*The columnist is a children’s writer and senior journalist.*

# ஜெனா– ஜெர்மனியின் கண்ணாடி நகரம்

புருஷோத்தம் சக்ரவர்த்தி

முன்னாள் கிழக்கு ஜெர்மனியில் அமைந்துள்ள அழகான சிறிய நகரம் ஜெனா. இலக்கிய சந்திப்பு, அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தத்துவ சிந்தனைகளுக்கான பாரம்பரிய மையமாகும். 1994 ஆம் ஆண்டில் இத்தாலியில் புகழ்பெற்ற படோவா பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தபோது, ஜெனாவில் உள்ள ப்ரெடரிக் ஷில்லர் பல்கலைக்கழகத்தின் ஆப்டிக்ஸ் துறை விடுத்த அழைப்பை ICTP ஃபெல்லோ என்ற முறையில் ஏற்றுக்கொண்டேன். எனது ஆராய்ச்சி அடிப்படையில் நேரியல் இல்லாத ஒளியியல் பற்றி இருந்ததால் பார்வைக் கண்ணாடி அறிவியல் ஆய்வுக்கு புகழ்பெற்ற கோயத் மற்றும் ஷில்லர் நகரங்களைப் பார்வையிட நான் விரும்பினேன். இப்போது ஐக்கிய ஜெர்மனியின் கல்வி, ஆராய்ச்சியில் வளமான மையங்களாக அவை உள்ளன. படோவா பல்கலைக்கழகம் ஐரோப்பாவின் பழமையான பல்கலைக் கழகங்களில் ஒன்றாகும். மேலும் ஜெனாவைப் போல கண்ணாடி தயாரித்தலில் திறமையையும், நீண்ட பாரம்பரியத்தையும் கொண்ட நகரமாகும்.

கண்ணாடிகள் முதன் முதலில் 4,000 ஆண்டுகளுக்கு முன்பு பண்டைய எகிப்தியர்களால் தயாரிக்கப் பட்டது என்று நம்பப்படுகிறது. ஆனால், கண்ணாடியின் அறிவியல் ஆய்வுமிகவும் இளமையானது மற்றும் ஜெனாவுடன் நெருக்கமான தொடர்புடையது. ப்ரான்ஹோஃபர், கோயத், ஜெஸ் மற்றும் ஷில்லர் ஆகியவை இந்த துறையில் பிரபலமான பெயர்கள்.

1829ம் ஆண்டு மார்ச் 28ம் தேதி கோயத், ஒரு புகழ்பெற்ற ஜெர்மன் வேதியியலாளரும் ஜெனா பல்கலைக்கழகத்தின் வேதியியல் பேராசிரியருமான ஜோஹன் உல்ஃப்காங் டொபெரெய்னருக்கு கடிதம் எழுதினார். கண்ணாடியில் ஒளிவிலகல் மற்றும் ஒளிச்சிதறலுக்கு இடையிலான உறவை கண்டறிவது மிக முக்கியமானதாக இருக்கும். இதற்கு ஒரு சிறு தொகையை நிதியுதவியாக அளிக்க நான் விரும்புகிறேன் என்று கடிதத்தில் கூறியிருந்தார். கண் கண்ணாடிகளின் (ஆப்டிகல் கிளாஸ்) வரலாற்றில் முக்கிய அத்தியாயம், ஜெனாவைச் சேர்ந்த வேதியியலாளர் ஓட்டோ ஸ்காட், இயற்பியலாளர் எர்னஸ் அபே மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் கார்லி ஜெஸ் ஆகிய மூவரும் நடத்திய ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. துல்லியமான ஆப்டிகல் கருவிகளைத் தயாரிப்பதற்காக ஜெனாவின் ஜெய் ஒர்க்ஸ் நிறுவனம் முக்கியப் பங்காற்றியுள்ளது.

*ஜெர்மனியின் இலவச கல்வி நிலையங்களின் ஒன்றான வோல்ஷாஸ்.*



ஆனால், இதில் ஆச்சரியம் என்னவெனில் இலக்கியத்தில் பாரம்பரியம் மிக்க நகரம் கோயத் மற்றும் சில்லிர் என்பதை பலரும் மறந்துவிட்டனர். அப்போதைய மேற்கு ஜெர்மனி, நாட்டின் பிற பகுதிகளிலிருந்து நீண்டகாலம் தனிமைப்படுத்தப்பட்டிருந்ததும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

ஜெனா, ஜெர்மனியின் மியூனிச்-பெர்லின் ரயில் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. சிறிது நேர காத்திருப்புக்குப் பின் நான் மியூனிச் சென்ட்ரல் ரயில்நிலையத்தில் ரயில் ஏறினேன். ரயில் பயணம் இவ்வளவு வரலாற்று அறிவுபூர்வமானதாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மியூனிச்-பெர்லின் ரயில் பாதை 1874ல் அமைக்கப்பட்டது. மேற்கு ஜெர்மனியின் கீழ் உள்ள ரயில் பாதை நன்கு பராமரிக்கப்படுவதாக என்னுடன் வந்த சக பயணிகள் கூறினர். அவர்கள் சொன்னது சரியாகவே இருந்தது. ஆனால், கிழக்கு ஜெர்மனிக்கு உட்பட்ட பகுதியில் இருந்த ரயில்பாதை புதுப்பிக்கப்படவும் இல்லை, நன்கு பராமரிக்கப்படவும் இல்லை. விரைவு ரயில்களின் அழுத்தத்தை தாங்கும் வகையில் இல்லை. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பொருளாதார வளம் இருந்தபோதிலும் ஜெர்மனியின் இந்த இரண்டு பகுதிகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வு வெளிப்படையாகத் தெரிவது போல கிழக்கு ஜெர்மனி பல்கலைக்கழகங்களுக்கு நிதியளிப்பதிலும் பாரபட்சம்

*ஜெர்மனியில் உள்ள 10 சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக ஜெனா பல்கலைக்கழகம் கருதப்படுகிறது. நோபல் பரிசு வென்ற 6 நபர்களுடன் இது இணைக்கப்பட்டுள்ளது.*



இருப்பது தெரிந்தது. உதாரணமாக ஜெனாவில் உள்ள ப்ரெடரிக் ஷில்லர் பல்கலைக்கழகத்தின் ஆப்டிக்ஸ் துறையில் ஆராய்ச்சி த்துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் பலர், தங்களது பட்டமேற்படிப்பை மேற்கு ஜெர்மனியில் உள்ள ஹைடில்பர்க், ஹாம்பர்க், மியூனிச், கோட்டிங்கன், பிராங்பர்ட் உள்ளிட்ட பல்கலைக்கழகங்களில் படித்தவர்கள். அவர்களது பல்கலைக்கழகங்களில் போதிய நிதி இல்லாததால் அவர்கள் ஜெனாவுக்கு பயணித்து ஆராய்ச்சி களை மேற்கொள்ள நேர்ந்தது.

எரியும் கண்ணாடிகளாகப் பயன்படுத்தப்படும் நீர் நிரப்பப்பட்ட கண்ணாடி பாட்டில்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக லென்சுகளாக அறியப்பட்டிருந்தாலும், 13ம் நூற்றாண்டின் இறுதியில் குவிலென்சுகள் பிஸாவின் அலெஸாண்ட்ரோ டெல்லா ஸ்பினா மற்றும் ப்ளோரன்சின் ல்வினோ டி அர்மதி ஆகியோரால் கண் கண்ணாடிகளாக உருவாக்கப்பட்டது.

ஜெனாவிலிருந்து நவீன ஒளியியலின் தந்தை பேராசிரியர் எர்னஸ்ட் அபே தொடர்புடைய ஆப்டிக்ஸ் துறையிலிருந்து அழைப்பு வந்ததால் அதை ஏற்பதில் பெருமையடைந்தேன். இந்த பல்கலைக்கழகம் 1558 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. ஜெர்மனியில் உள்ள 10 சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. நோபல் பரிசு வென்ற 6 நபர்களுடன் இது இணைக்கப்பட்டுள்ளது. மிகச் சமீபத்தில், அதாவது 2000 ஆம் ஆண்டில் ஹெர்பர்ட் குரோமர் என்பவர் இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றார். ஜெனா பல்கலைக்கழகத்துக்கு தத்துவயியல் பேராசிரியரும் கவிஞருமான ஃப்ரெடரிக் ஷில்லரின் பெயரிடப் பட்டது. 19ம் நூற்றாண்டில் இப்பல்கலை கழகம் பலரின் கவனத்தை ஈர்த்தது.


ஜெனா, துரிங்கியா மாகாணத்தின் கிழக்கே சாலே ஆற்றின் பரந்த பள்ளத்தாக்கில் மலைப்பாங்கான நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பாறைகளுடன் கூடிய நிலப்பரப்பு, மற்றும் வனப்பகுதிகள் காரணமாக பல்வேறு வகையான காட்டு மல்லிகைகளுக்கு புகழ்பெற்றது. நகரத்தின் பொருளாதாரம், உயர் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி யை அடிப்படையாகக் கொண்டது. ஆப்டிகல் மற்றும் துல்லியமான கருவிகள் தொழிற்சாலைகள் இங்கு அதிகம். மென்பொருள் பொறியியல், பிற டிஜிட்டல் வர்த்தகங்கள் மற்றும் உயிரி தொழில் நுட்ப சார்ந்த நிறுவனங்களும் இங்கு வளர்ந்து வருகின்றன.

நான் இரவு 11 மணிக்கு ஜெனாவை அடைந்தேன். அப்போது வெப்பநிலை மைனஸ் 10 டிகிரி செல்சியஸாக

இருந்தது. சுமார் ஒருமாதம் நான் அங்கு தங்கியிருந்தேன். பனியால் மூடப்பட்ட சாலைகளில் நடந்து சென்றபோது 400 அடி உயரமுள்ள பல்கலைக்கழக கோபுரத்தை கடந்து சென்றேன். இது ஜெனாவில் முக்கியமான அடையாளமாகும். மற்றொரு முக்கிய கட்டடம் வோல்ஷாஸ். இது ஜெர்மனியின் முதல் இலவச கல்வி நிறுவனங்களில் ஒன்றாகும். இது கார்ல் ஜெஸ் அறக்கட்டளை நிதி மூலம் கட்டப் பட்டது. 1903 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. 1922 ஆம் ஆண்டு ஜூன் முதல் 1924 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை வோல்ஷாஸ் ஜெனா ஆப்டிகல் சாதனங்களின் முதல் கண்காட்சியை நடத்தியது. 1846 இல் ஜெஸ் ஜெனாவில் மைக்ரோஸ்கோப்புகள் மற்றும் இதர ஆப்டிகல் உபகரணங்கள் தயாரிக்கும் பட்டறையைத் திறந்தது.



20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெனா, ஜெஸ் படைப்புகளால் வெற்றிகரமாக செழித்து வளர்ந்தது. ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இணைந்து செயல்படும் ஜெர்மனியின் மிகப்பெரிய தொழில் மையமாக உருவானது. பல்கலைக்கழகத்திலும் அறிவுஜீவிகள் பலர் பணிபுரியும் இடமாக மாறியது.



*ஜெனா பல்கலைக்கழக கோபுரம்*

ஆச்சர்யம் என்னவெனில் சாலே ஆற்றின் இருகரைகளிலும் 10 கி.மீ. நீளமுள்ள மலைத் தொடர்களுக்கு நடுவே இந்த சிறிய நகரம் அழகுபட அமைந்திருந்தது. ஆனாலும், எதிரிகளால் அடிக்கடி தாக்குதலுக்கு ஆளானதால் கிராமங்களிலும், நகரங்களிலும் பேரழிவை ஏற்படுத்தியது. போரில் ஈடுபடும் இருதரப்பினரும் ஜெனாவை மையமாக வைத்தே அணிவகுத்துச் சென்றன. சிலநேரங்களில் ஜெனாவை ஸ்வீடன் நாட்டுத் துருப்புகள் சுற்றிவளைத்தன. 1806ம் ஆண்டு அக்டோபர் 14ம் தேதி நெப்போலியன் தலைமையிலான பிரெஞ்சு படைகளுக்கும் பிரஷ்ய ராணுவத்துக்கும் இடையில் கடும் சண்டை நடந்தது. முடிவில பிரஷ்ய படைகளும் அதன் கூட்டணி படைகளும் தோல்வியைத் தழுவின. அக்டோபர் 14 போருக்குப் பிறகும், பிரெஞ்சுக்காரர்கள் ஜெனாவை ஆக்கிரமித்ததுடன் வீடுகளையும் சூறையாடினர். இறுதியில் 1813 ஆம் ஆண்டு ஜெர்மனி பிரெஞ்சுக் காரர்கள் ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெற்றது.■

## ஒரு சிறப்பான பிறந்தநாள் கொண்டாட்டம்



RC கம்காவ்ன், RID 3030, DGE Dr ஆனந்த் ஜூன்ஜூன்வாலா அவர்களுடைய பிறந்தநாளைக் கொண்டாடுவதற்காக ஒரு துலா தானத்தை (நன்கொடையாளருடைய எடைக்குச் சமமாக உணவு தானியங்கள் அல்லது வெல்லத்தை நன்கொடையாக அளித்தல்) நடத்தியது. DGE அவர்களுடைய எடைக்குச் சமமாக 75 கிலோ நோட்டுப் புத்தகங்கள் கம்காவ்னுக்கு அருகில் உள்ள இரண்டு கிராமப்புறப் பள்ளிகளின் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

## கருப்பை வாய்ப்புற்றுநோயிலிருந்து பாதுகாப்பு



RC மீரட் உமங்க், RID 3100, இந்த நகரில் உள்ள வர்தமான் கல்விக் கழகத்தின் 65 மாணவிகளுக்குக் கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு மருந்தை வழங்கியது. இந்த முகாமை DGN அசோக் குப்தா தொடங்கிவைத்தார். அடுத்த மூன்று ஆண்டுகளில் இச்சங்கம் 500 பெண்களுக்குத் தடுப்பு மருந்து வழங்க இலக்கு அமைத்திருப்பதாகச் சங்கத் தலைவர் அசோக் சிங்கால் தெரிவித்தார். சங்க உறுப்பினர் பங்கஜ் ஜெயின் 25 பெண்களுக்கான தடுப்பு மருந்தை ஆதரிக்க ஒப்புக்கொண்டுள்ளார்.

## மக்களுக்கு நடக்க உதவுதல்



நித்யானந்தா தாலுக்தார் தன் பெற்றோருடன்.

RC குவஹாத்தி மெட்ரோ, RID 3240, ரூ.1 லட்சம் செலவில் நடத்திய செயற்கைக் கை, கால் பொருத்தும் முகாம், 25 மாற்றுத் திறனாளிகள் நடக்க உதவியது. இதனால் பலன் பெற்ற மிக இளம் நபர், 2 வயது நித்யானந்தா தாலுக்தர். இந்த முகாமுக்கு நிதியளித்தவர், சங்கத் தலைவர் விகாஷ் பஜாஜுடைய உடன் பிறந்தவராகிய தனுஜா, அவருடைய கணவர் சந்தீப் சேதியா.

## அலிப்பூரில் புற்றுநோய்ப் பராமரிப்பு வேன்




PDG பிரஷான்த் ஜானி மற்றும் ரோட்டரியினர் கேன்சர் வேன் துவக்க விழாவில்.

RC சிக்லி ரிவர்ஃப்ரன்ட், RID 3060, ஒரு பன்னாட்டு நல்கையின்கீழ் 29 பிற ரோட்டரி சங்கங்கள், NGOக்களுடன் இணைந்து, புற்றுநோய் கண்டறியும் வேன் ஒன்றை அலிப்பூர் சமூக நல அறக்கட்டளை மருத்துவமனைக்கு வழங்கியது. இதற்கு முதன்மைப் பங்களிப்பாளர்கள், அமெரிக்காவைச் சேர்ந்த Rtn ஹர்ஷத் படேல், இந்திராபென். இந்த வண்டி தன்னுடைய இடத்தை ஆறு அடி நீளத்துக்கு விரிவாக்கும் தனித்துவம் கொண்டுள்ளது.



## ரோட்டரி நாளைக் கொண்டாடியது RID 3012

RID 3012 ரோட்டரி நாளை முன்னிட்டு 80 ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து ஒரு பெரிய ஓவியப் போட்டியை நடத்தியது. தில்லி, கஜியாபாத், பிற இடங்களில் உள்ள பள்ளிகள், குடியிருப்புச் சமூகங்கள், பகுதிகள் போன்ற 67 இடங்களில் நடைபெற்ற இந்தப் போட்டியில் சுமார் 15,000 குழந்தைகள் (நேரிலும் இணையத்திலும்) கலந்துகொண்டார்கள்.

# மனக்களைப்பை வெல்லுவோம்

பரத் — ஷலன் சவூர்

மனத்தில் நச்சை நீக்குவது மிக நல்லது, நம்மை ஆற்றுவது. ஒரே பிரச்சனை, அதை எப்படிச் செய்வது என்று பலருக்குத் தெரிவதில்லை. அத்துடன், நீங்கள் ஏற்கெனவே மனத்தளவில் களைத்திருந்தால், நச்சை நீக்குதல் என்ற எண்ணமே உங்களுக்குச் சோர்வைத் தரலாம், சமீபத்தில், என் உடன்பிறந்தவராகிய சோபா என்னிடம் கூறினார், ''சில நேரங்களில், உலகின் மிகச் சிறந்த உணர்வு, யாருடனும் பேசாமல் தனியாக, இதமாக அமர்ந்திருப்பதுதான்.'' இதை நான் ஏற்கிறேன்.

மனக்களைப்பு நம்மைச் சிறைப்படுத்தக்கூடியது. அதன் பொருள், மனம் திகைத்துப் போயிருக்கிறது அல்லது மிகவும் சோர்ந்திருக்கிறது, பரந்த இடத்தில் ஓய்வெடுங்கள். இந்தச் சிறப்பான மன எளிமையில் ஓய்வெடுங்கள். சும்மா உட்கார்ந்திருங்கள், உடலைத் தளர்த்துங்கள், பேசவேண்டாம், மனம் அமைதியாக இருக்கட்டும்... எந்த முயற்சியும் வேண்டாம், ஆழமான, இனிமையான மனத் தளர்வு போதும். நமக்கு எதுவும் தேவையில்லை என்று நாம் உணரும்போது, நம்மிடம் எல்லாம் உள்ளது என்று நாம் எண்ணும்போது, பிறர் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்றோ ஒரு விஷயம் எப்படி நடக்கப்போகிறது என்றோ கவலைப்படாதபோது, நாம் பரந்த தன்மையில் இருக்கிறோம்.

உங்களுடைய சிந்தனையைப் பிடித்துவைத்திருக்கும் நேரம், அந்தப் பிடியைத் தளர்த்தும் போது, நீங்கள் முடிவற்ற காலத்தில் உள்ளீர்கள். பலரும் நினைப்பதுபோல், மன அமைதி என்பது செயலற்ற நிலை இல்லை, அது மாறக்கூடியது, அது உங்கள் பார்வையை விரிவாக்குகிறது, நீங்கள் உலகின் சிறப்பைக் காணும்படி செய்கிறது.

அமைதி என்பது, மாறக்கூடியது. 110 ஆண்டுகளுக்கு முன் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சி: வெங்கடராம ஐயர் என்ற முதியவர் புகழ் பெற்ற அருணாச்சலக் குகைகளில் ஸ்ரீ ரமண மகரிஷியுடன் தங்குகிறார். அப்போது, ஸ்ரீ ரமணரிடமிருந்து வெளிப்பட்ட ஒளிமயமான அமைதி மிகவும் பரவசம் தருகிற ஆற்றலைக் கொண்டிருந்தது. அதனால், ஐயர் வேறோர் இடத்துக்குச் சென்றுவிட்டார், ரமண முனிவரைச் சுற்றி மகிழ்ச்சியுடன் ஆடினார், தன் குருநாதரைப்பற்றி ஐந்து பாடல்களை அதே இடத்தில் எழுதினார். அந்தப் பாடல்கள் இப்போதும் பாடப்படுகின்றன.

மனம் தன்னுடைய அழுத்தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் போது, அது ஓர் உயர்ந்த அமைதியைக் கொண்டுவரலாம் அல்லது சிலிர்ப் பூட்டும் மின் ஆற்றல் துடிப்பை அளிக்கலாம். நீங்கள் விழிப்புடன் இருந்தால், நீங்கள் மனத்தை எப்போதும் தூய்மையாக, மகிழ்ச்சியாக வைத்திருக்கலாம். அதற்கு நீங்கள் அமைதி அனுபவத்தை நினைவில் வைத்துக்கொண்டு, உங்கள் மனத்தைச் சட்டென்று இந்தத் தெரிந்த மாற்று நிலைக்கு மாறச் செய்யலாம், அல்லது, சிந்தனையைச் சிறிது நிறுத்தி, பலமுறை மெதுவாக மூச்சு விடலாம், அதன் மூலம், மனத்தைச் சிதறடிக்கக்கூடிய சூழ்நிலை அழுத்தத்திலிருந்து மனத்தை நகர்த்தி, இப்போதைய கணத்தில் நிலைபெறச் செய்யலாம். மனமானது, ஒரு சூழலில் அதன் ஆற்றலை வீணடிக்காமல், உடலின் வழியாக ஒரு வாழும் கணத்தில் நுழையட்டும்.

உடல் என்பது மனத்துக்கு மிகச் சிறந்த தோழர். சில நாட்களுக்கு முன்னால், நான் சற்றுக் களைப்பாக உணர்ந்தேன், என் கால்கள் வலித்தன, என்னுடைய உடற்பயிற்சியை விட்டு விடலாம் என்றுகூட நினைத்தேன். அப்போது, டாக்டர் B M ஹெக்டெ யூட்யூபில் சொன்னார், ''உடல் அளவிலும் மனத்தளவிலும் களைப்பாக நீங்கள் வீடு திரும்பும்போது என்ன செய்கிறீர்கள்? சும்மா படுத்துக் கொள்கிறீர்கள்! அப்படிப்படுத்துக் கொள்ளாதீர்கள்! அந்த நேரத்தில் நெடுந்தொலைவு நடந்து திரும்புங்கள், அப்போது நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் என்று பாருங்கள்!''

உடனடியாக, நான் அமர்ந்த நிலையில் ஒரு மணி நேரம் மிதிவண்டி ஓட்டினேன்; டம்பெல்-களை எடுத்துக் கொண்டு உடலின் மேற்பகுதிக்குப் பயிற்சி அளித்தேன்; யோகாசனப் பாய்க்குச் சென்று உடற்பயிற்சிகள் போன்றவற்றைச் செய்தேன். உடற்பயிற்சிகள் அழுந்தியுள்ள எரிச்சலை வெளி விடுகின்றன, இறுகியுள்ள தசைகளைத் தளர்த்துகின்றன, நன்கு உணரச்செய்கிற என்டார்ஃபின்களை வெளிவிடுகின்றன,



உங்களைப் புதுப்பித்துத் துள்ளலோடு உங்களுக்குத் திருப்பித் தருகின்றன.

நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, இவ்வுலகில் பல சூழ்நிலைகளில், மக்களுடைய வாழ்க்கைகளில் நீங்கள் கொண்டுவரும் ஆற்றல் எந்த வகையானது என்று சிந்தியுங்கள். நீங்கள் நல்லிணக்கத்தை உருவாக்குகிறீர்களா அல்லது கலகத்தையா? இந்த உயர் தொழில்நுட்ப உலகத்தில், இயந்திர மனிதர்கள் செயல்திறனோடு இருக்கலாம், கணினிகள் விரைவாகச் செயல்படலாம், ஆனால், மனிதர்களால் மட்டும் தான் நல்லிணக்கத்துடன், படைப்பாற்றலுடன் இருக்க இயலும், ஆபத்தைச் சந்திக்கவும் இயலும் என்பதை நினைவில் வையுங்கள்.

தீபக் சோப்ரா “வருங்காலத்தின் படைப்பாற்றல் அறிவு” என்பதைப் பற்றிப் பேசி நமக்கு வழிகாட்டுகிறார். “அன்பையும் பச்சாத்தாபத்தையும் பகிர்ந்து கொள்ளுங்கள்” என்கிறார் அவர், “கோவிட் இல்லை, அழுத்தம் தான் மிகப் பெரிய நோய்ப்பரவல்” என்று விளக்குகிறார்.

ஆபத்துக்கு ஆளாவது தப்பில்லை, மிகக் கச்சிதமாக இல்லாமல் இருப்பது நஞ்சு இல்லை. அதனால், அவற்றை எண்ணி வருந்தாதீர்கள். அதற்குப் பதிலாக, அவற்றை ஒரு தெளிவான பார்வையில் பாருங்கள். ஆபத்துக்கு ஆளாவது நம் தடைகளை வீழ்த்துகிறது, மனிதர்களிடையே பாலங்களைக் கட்டுகிறது. மிகக் கச்சிதமாக இல்லாமல் இருத்தல் புதிய திசையை அல்லது புதிய சிந்தனைகளைக் கொண்டுவருகிறது.

அந்தப் பின்னணியில், கச்சிதத்துக்குள் மிக ஆழமாகச் செல்லாதீர்கள், அதனால் உங்கள் மனம் சினத்தில், வருத்தத்தில், குற்றவுணர்ச்சியில் மூழ்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள். ஏதோ ஒன்றை நிறைவுசெய்யவேண்டும் என்பதற்காக மட்டும் பல மணி நேரம் தொடர்ந்து உழைக்காதீர்கள்; நீங்கள் உச்சத்தில் இருக்கும்போது வேலையை நிறுத்துவது மேலும் அறிவார்ந்த செயல். அதாவது, சோர்வோடு நாளை முடிக்காமல், ஒரு புதிய தொடக்கத்துடன் முடிப்பது. மூளைச்சோர்வும் மனச்சோர்வும் நமக்கு நல்லதில்லை. “இது போதும்” என்று இன்றைய நாள் சொல்கிறது, நாளை நம்மை அழைக்கிறது.

இரவிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள். வேலை மேசை யிலிருந்து எழுந்து இரவுக்குள் செல்லுங்கள். இரவு என்னும் பரிசைப்பயன்படுத்தி அனைத்துக் கவலைகளையும், அனைத்து மூழ்கியிருத்தல்களையும் உதறுங்கள். இதமான, மிதக்கச் செய்கிற, வழிகாட்டுகிற யோக நித்திரைத் தியானத்துக்குள் நுழைந்து தூங்குங்கள். இரவு வழங்கும் அமைதியில் ஓய்வெடுங்கள்… இந்த அமைதியில் பல தீர்வுகளும் ஊக்கம் அளிக்கும் பதில்களும் நெய்யப்பட்டுள்ளன. அதன் பிறகு, வானத்தின் சிரிப்பைப் பார்த்தபடி எழுங்கள். இப்போது, நீங்கள் உங்கள் பணி மேசைக்குத் திரும்பலாம்.



**களைப்பை நீக்குவதற்குச் சில உதவிக் குறிப்புகள்:**

- பிறருக்கு உதவுங்கள். உதவுதல் என்டோர்ஃபின்களை மேம்படுத்துகிறது. நீங்கள் ஓர் என்டோர்ஃபினிஸ்ட்டாக மாறுங்கள்.
- அழகை அனுபவியுங்கள். அழகைப் பாராட்டுங்கள், பிறர் பாராட்டும் போது, நயத்துடன் அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.
- யாராவது உங்களைக் கட்டுப்படுத்த முயன்றால், எதிர்வினையாற்றாமல் கவனிக்கப் பழகுங்கள். சுய கட்டுப்பாடு சுயமதிப்பை மேம்படுத்தும், அது மிகச் சிறந்தது.
- நீங்கள் மாற்ற இயலாத விஷயங்கள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். அதன் பிறகு, நீங்கள் மாற்றக்கூடிய விஷயங்களில் மனம் தன் அறிவைக் கூர்மையாக்கிக் கொள்ளும்.
- எனக்குத் தெரியாது என்று சொல்லத் தயங்காதீர்கள். விடுதலை அளிக்கும் இந்த மூன்று சொற்களைக் கேட்டதும், மனம் அமைதியாகிறது, எல்லாம் தெரியும் என்பதுபோல் நடிப்பது களைப்பைத்தான் தரும்.

நிறைவாக, எடித் ஆர்ம்ஸ்ட்ராங் சொல்லும் சில எதார்த்த அறிவுரைகள்: “என் மனத்தின் தொலைபேசியை நான் அமைதிக்கு, நல்லிணக்கத்துக்கு, நலத்துக்கு, அன்புக்கு, வளத்துக்குத் திறந்துவைத் திருக்கிறேன். அதன்பிறகு, ஐயமோ பதற்றமோ அச்சமோ என்னை அழைத்தால், அவற்றுக்குப் “பிஸி சிக்னல்” தான் திரும்பத் திரும்பக் கிடைக்கும், விரைவில், அவை என் எண்ணை மறந்துவிடும்.”

கட்டுரை ஆசிரியர்கள்
இருவரும் Fitness for Life
மற்றும் Simply Spritiual — You Are
Naturally Divine
என்ற ஆங்கில நூல்களின்
எழுத்தாளர்கள்.

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

### 2022ல் தேசியத் தடுப்பு மருந்து வழங்கல் நாள் (NID)

அடுத்த NID ஜனவரி 23, 2022 அன்று திட்டமிடப்பட்டுள்ளது. இதில் இருவகைத் திறம் கொண்ட வாய்வழி இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து (bOPV) பயன்படுத்தப்படும், இதன் இலக்கு, 0–5 வயதுள்ள அனைத்துக் குழந்தைகளும். ஜனவரி 22, 2022 அன்று இந்தியக் குடியரசுத் தலைவர் இதைத் தொடங்கிவைக்கவேண்டும் என்று நல குடும்ப நலன் அமைச்சகம் முன்வைத்துள்ளது. நுண் திட்டங்கள், பரப்புரைகள் போன்றவை தொடர்பான தயாராதல் மிக முன்பாகவே திட்டமிடப்படவேண்டும், அனைத்துக் கோவிட் நெறிமுறைகளும் பின்பற்றப்படவேண்டும்.

### பால் ஹாரிஸ் சமூகம்

ஒவ்வொரு ரோட்டரி ஆண்டிலும் ஆண்டு நிதி, போலியோப்ளஸ் நிதி அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு நல்கைக்கு 1,000 அல்லது அதற்குமேல் பங்களிக்கும் நோக்கத்தைத் தெரிவிக்கும் தனி நபர்களை பால் ஹாரிஸ் சமூகம் (PHS) அங்கீகரிக்கிறது. PHS பங்களிப்புகள், ரோட்டரி அறக்கட்டளை நீடித்த உறுப்பினர் (ஆண்டு நிதிப் பங்களிப்புகள் மட்டும்), பால் ஹாரிஸ் தோழமை, பல பால் ஹாரிஸ் தோழமை மற்றும் மிகப் பெரிய நன்கொடையாளர், சங்க அங்கீகாரப் பதாகைகளுக்குக் கணக்கிடப்படும். அங்கீகாரத்தில் செவ்ரான் பாணியில் ஒரு பேனா, மாவட்ட PHS ஒருங்கிணைப்பாளர் சான்றிதழ் இடம்பெறும். மேலும் தகவல்களுக்கு, இணையப் பக்கத்தைப் பாருங்கள், அல்லது, பால் ஹாரிஸ் சமூகச் சிற்றேட்டைப் படியுங்கள்.

### சமூக உறுப்பினர்களுடைய பங்களிப்புகளுக்கு எப்படி அங்கீகாரம் வழங்கப்படுகிறது?

புதிய சமூக உறுப்பினர்களுக்கு சான்றிதழும் செவ்ரானும் மாவட்ட அல்லது சங்க நிகழ்ச்சியொன்றில் பரிசளிக்கப்படுகின்றன. அவர்களை PHS ஒருங்கிணைப்பாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட இன்னொரு ரோட்டரி அலுவலர் பெருமைப்படுத்துவார்.

### உங்கள் சங்கம்/மாவட்டத்தில் PHSஐ விரிவுபடுத்தும் வழிகள்

- அறகட்டளைப் பங்களிப்புகள் உலகெங்கும் உள்ள தேவைகளுக்கு உயர்ந்த தாக்கம் கொண்ட, நீடித்த தீர்வுகளாக எப்படி மாறுகின்றன என்பதைக் காண்பியுங்கள்
- சங்க, மாவட்ட வழங்கல்களின் வழியாகச் சமூகத்தின் முக்கியத்துவத்தை விளக்குங்கள்
- *Rotary.org*ல் உள்ள பால் ஹாரிஸ் சமூகப் பக்கத்தைப் பார்ப்பதன்மூலம், அல்லது, PHS படிவத்தில் கையொப்பமிடுவதன் மூலம் இணையலாம் என்று உறுப்பினர்களை ஊக்குவியுங்கள்
- அறக்கட்டளை அறிக்கைகளைப் பயன்படுத்தி, வாய்ப்புள்ள உறுப்பினர்களை அடையாளம் காணுங்கள், அவர்களுடன் தனியாகப் பேசி, இணையும்படி அழையுங்கள்
- PHS உறுப்பினர்களுக்கு அங்கீகாரக் கூட்டங்களை நடத்துங்கள் அல்லது பிற பொருத்தமான நிகழ்வுகளில் அவர்களை அங்கீகரியுங்கள்

### அறக்கட்டளை அங்கீகாரப் புள்ளிகள்

- ஆண்டு நிதி அல்லது போலியோப்ளஸ் வழியாக TRFக்குப் பங்களிக்கிற, அல்லது, ஓர் அறக்கட்டளை நல்கைக்கு ஆதரவை வழங்கிப் பங்களிக்கிற நன்கொடையாளர்களுக்கு ஒவ்வொரு டாலருக்கும் ஓர் அறக்கட்டளை அங்கீகாரப் புள்ளி விருதளிக்கப்படும்.
- நன்கொடை நிறுவல் நிதிக்குச் செய்யப்படும் பங்களிப்புகள் இதற்குத் தகுதி பெறாது.
- நன்கொடையாளர்கள் அறக்கட்டளை அங்கீகாரப் புள்ளிகளைப் பிறருக்கு மாற்றலாம், அவர்கள் PHF அல்லது multiple PHFஆக தகுதி பெற உதவலாம்.
- ஒரு நேரத்தில் குறைந்தது 100 அறக்கட்டளை அங்கீகாரப் புள்ளிகளை மாற்றவேண்டும், நன்கொடையாளர் அங்கீகாரம் மற்றும் பரிமாற்றக் கோரிக்கைப் படிவத்தை நிரப்பிக் கையொப்பம் இடவேண்டும்.
- புள்ளிகளைத் தனி நபர்களிடமிருந்து சங்கம் அல்லது மாவட்டத்துக்கு மாற்ற இயலாது.

சங்க மற்றும் மாவட்டத் தலைவர்கள் ‘My Rotary’ உள்நுழைவு வழியாக இணையத்தில் சங்க அங்கீகாரச் சுருக்கத்தைப் பார்க்கலாம். இதில் அங்கீகாரத் தொகை, அங்கீகாரப் புள்ளிகள், இப்போதைய PHF நிலை மற்றும் அந்த நிலை எட்டப்பட்ட நாள் ஆகியவை இடம்பெறுகின்றன.


### ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராசி மேத்தா நன்கொடை நிறுவல் நிதி

இப்போதைய RI தலைவர் சேகர் மேத்தாவைப் பெருமைப்படுத்தும் வகையில், பகுதிகள் 4, 5, 6 மற்றும் 7ஐச் சேர்ந்த 4 EMGAக்களாலும் ‘ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராசி மேத்தா நன்கொடை நிறுவல் நிதி’ என்ற தலைப்பிலான நன்கொடை நிறுவல் நிதி ஒன்று நவம்பர் 9 அன்று முறைப்படி தொடங்கப்பட்டது. இந்த முன்னெடுப்பை அறங்காவலர் குலாம் வாகன்வடி, RI இயக்குநர்கள் A S வெங்கடேஷ் மற்றும் மகேஷ் கோட்பாகி ஆகியோர் ஆதரிக்கிறார்கள். EMGAக்கள் அமைத்த படி இந்த நன்கொடை நிறுவலுக்கான நிதி திரட்டல் இலக்காகிய $1 மில்லியனை எட்டும் படி ரோட்டரி தலைவர்களை இவர்கள் ஊக்குவித்தார்கள். ■

# On the racks

### Stories I must tell

Author : **Kabir Bedi**
Publisher : **Westland**
Pages : **319; ₹256**





From the first magical encounter with The Beatles as a student in Delhi to working as an interviewer for All India Radio to ventures in Italy and Europe, this book is a collection of anecdotes from Bedi's life. It will take readers through the highs and lows of his professional and personal life, his relationships, including marriage and divorce. From being a sinister husband in *Khoon Bhari Maang* to playing the charming Prince Omar in *The Bold and the Beautiful*, he shares an interesting account of his exciting stints in film, television and theatre across India, Europe and Hollywood. He poignantly writes about his battle to save his schizophrenic son who later committed suicide. He also tells the fascinating love story of his Indian father, a philosopher in Europe, and his British-born mother, the world's highest-ranked Buddhist nun.

---

### Know your Rotary


Author : **N Bhaskaran Pillai**
Pages : **447; ₹399**




The book has detailed information on all Rotary aspects ranging from how it was started, themes of various leaders, RYLA, conventions, awards, COL, TRF and more. It is a guide and has reference material for both Rotarians and non-Rotarians. The author has also mentioned important events in the history of Rotary (year-wise) in this book, spelt out the abbreviations of Rotary terms, and listed the chronological growth of Rotary, Rotary zones and Rotary fellowships groups for networking. The book covers all avenues of services, district and club responsibilities, regional magazines, International Assemblies, women in Rotary, Rotary in UN and more.

### Laughing Gas

Author : **Jai Shetty**
Publisher : **Minds Power Publication**
Pages : **180; ₹300**





Based on the real-life experience of the author this book is a gentle reminder that life is full of laughter and one must laugh not just to be happy but healthy too. From Indian cinema to yoga, the author shares hilarious anecdotes and some special moments of his life. Written in a casual style the book includes plenty of Rotary experience, as well as poems by his wife PDG Rekha Shetty, a couple of caricatures and sketches.

---

### Born a Muslim

Author : **Ghazala Wahab**
Publisher : **Aleph Book Company**
Pages : **408; ₹710**




This book gives an overview of the lives of Muslims post-Partition in India. The author talks about how female genital mutilation, veil, segregation, lack of education, divorce and inheritance have made Muslim women powerless and insists that this is not a result of faith, but selective use of religious texts by the clergy. She narrates stories of Muslims hiding their identity, and reverting to Hinduism to prove their secular credentials. The author talks about how "Saudi Wahabbism is making Indian Islam primitive."

Compiled by Kiran Zehra

## RC புவனகிரி — RID 2981



மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு சிறப்பு முகாமில் ரூ.2.5 லட்சம் செலவில் சுமார் 50 பேருக்குக் கேட்க உதவும் கருவிகள், கண் பார்வைக் குறைபாடு உள்ளோருக்கு வெள்ளைக் கைத்தடிகள் வழங்கப்பட்டன.

## RC ஃபரீதாபாத் சன்ஸ்க்ரிதி — RID 3011



கிரேட்டர் ஃபரீதாபாத் ஷ்ரத்தா மந்திர் பொதுப் பள்ளியில் நடைபெற்ற கண் பரிசோதனை முகாமில் 300க்கும் மேற்பட்ட குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டார்கள்.

## RC சேலம் எவர்கிரீன் — RID 2982



ஜாரிகொண்டலாம்பட்டி அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ரூ.3 லட்சம் மதிப்புள்ள கழிப்பறைத் தொகுதியை DG K சுந்தரலிங்கம் திறந்து வைத்தார், PDG K S வெங்கடேசன், ARRFC வாசு, DRFC பாபு, AG R ராஜேஷ், சங்கத் தலைவர் ரமேஷ் பாபு உடனிருந்தனர்.

## RC கஜியாபாத் நார்த் — RID 3012



இந்தச் சங்கம் ஒரு CT ஸ்கேன் இயந்திரத்தை நிறுவிய வர்தான் மருத்துவமனையை RI தலைவர் சேகர் மேத்தா பார்வையிட்டார், இந்த முன்னெடுப்பை நடத்திய அப்போதைய சங்கத்தலைவர் மனோஜ் அக்கர்வாலைப் பாராட்டினார்.

## RC கூடலூர் கார்டன் சிட்டி — RID 3000



கூடலூர் முதன்மை நல மையம் ஒன்றில் 2,800 மரக்கன்றுகளைக் கொண்ட 26,000 சதுர அடி மியாவாகி காட்டை தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் K V முரளிதரன் மற்றும் DG R ஜெயக்கண் துவக்கி வைத்தனர்.

## RC நாக்பூர் மெட்ரோ — RID 3030



பொது மக்கள், காவல் துறை அலுவலர்களுக்குச் சுமார் 8,000 முகமூடிகள் வழங்கப்பட்டன. முன்னாள் தலைவர் அம்பரீஷ் அக்ரெ 2,000 முகமூடிகளைக் கொடையளித்தார்.

# செய்திகள்

## RC தாராப்பூர் — RID 3060



சங்க உறுப்பினர்கள் தாராப்பூரில் உள்ள Rtn ராஜு வகேலா அவர்களின் பண்ணையில் 115 மரக் கன்றுகளை நட்டார்கள். இந்த ஆண்டு இந்தச் சங்கத்தின் கவனப் பகுதிகளில் ஒன்று, மரம் நடும் முகாம்கள்.

## RC மீரட் — RID 3100

ஏழைக் குழந்தைகளுக்கு ஆற்றல் வழங்கும் நோக்கத்தைக் கொண்ட திட்டம் இணையத்தில் தொடங்கப் பட்டது. சங்கத் தலைவர் திரிப்தி மிட்டல் தன்னுடைய பால் மித்ராஸ் குழுவுடன் 125 மாணவர்களிடம் உரையாடினார்.



## RC லூதியானா கிரேட்டர் — RID 3070



ஜவாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் இன்டராக்ட் கூட்டம் நடை பெற்றது, Rtnகள் பரம் சைனி, M S ஔலுக் RI நான்கு வழிப் பரிசோதனை பற்றிப் பேசினார்கள்.

## RC பலிய கலன் — RID 3120

பலிய கலன் அரசு மருத்துவ மனையில், கோவிடுக்கு எதிராகத் தடுப்பு மருந்து பெற்றுக் கொள்வதற்கு இளைஞர்கள், வயது வந்தோரை ஊக்குவிக்கும் செல்ஃபி அரங்கு நிறுவப்பட்டது.



## RC உக்லனா மண்டி — RID 3090



DG பர்வீன் ஜிந்தால், PDGகள் பிரேம் அக்கர்வால், ராஜீவ் கார்க், AG ஹர்கிரண் சிங் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் ரூ.1.8 லட்சம் செலவில் 21 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வண்டிகள் கொடையளிக்கப்பட்டன.

## RC கொரேகாவ்ன் பார்க் — RID 3131

அந்த்காவ்ன் பழங்குடியினக் குக்கிராமத் தில் உள்ள பள்ளியில் சுமார் 150 துணி சானிட்டரி பேட்கள் வழங்கப் பட்டன.



## RC ஔரங்காபாத் — RID 3132



தகர்வாடி கிராமத்தில் பழங்குடியினக் குடும்பங்களுக்கு பசுக்கள் அளிக்கப்பட்டன. மேலும், ஆறு மாதங்களுக்கு உயர் தானிய உணவு வழங்கப்படும் என்று சங்கத் தலைவர் மிலிந்த் செவாலிகர் உறுதியளித்தார்.

## RC ஹூப்ளி ஈஸ்ட் — RID 3170




ஹூப்ளியில் உள்ள பெங்கேரி ரோட்டரி பள்ளி இன்டராக்ட் சங்கத்துடன் இணைந்து நடத்தப்பட்ட இளம்பிள்ளை வாத விழிப் புணர்வுப் பேரணியில் 500 பள்ளிக் குழந்தைகள் பங்கேற்றார்கள்.

## RC பாம்பே ஜூஹூ பீச் — RID 3141



9 ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஒரு திட்டத்தின் கீழ் சங்கம் 25,000 பெண்களுக்குச் சுமார் 21 லட்சம் சானிட்டரி பேட்களை வழங்கியது.

## RC ஹசன் ராயல் — RID 3182



போக்ஸோ சட்டத்தைப் பற்றிய, பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் நிகழ்வு ஒன்றில் 200க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றார்கள்.

## RC குடூர் — RID 3160




Rtn ஸ்ரீதர் ரெட்டி, தன்னுடைய மறைந்த தந்தை வேணு கோபால் ரெட்டி நினைவாக குடூர் GSR நகராட்சி பள்ளியில் நிருவிய மழை நீர் சேகரிப்பு அமைப்பை PDG சுரேந்திர பொம்மிரெட்டி தொடங்கிவைத்தார்.

## RC பெங்களூர் பிரிகேட்ஸ் — RID 3190



நங்கலி கிராமத்தில் உள்ள சுபாஷ் சந்திர போஸ் கிராமப்புற பள்ளியில் WiFi இணைப்பு உள்ளிட்ட பல வசதிகளுடன் ஒரு கணினி ஆய்வகம் தொடங்கப்பட்டது.

# செய்திகள்

## RC தங்கசேரி — RID 3211



கொல்லம் பகுதியைச் சேர்ந்த வாடி-யில் உள்ள புனித ஆன்டனி பள்ளிக்கு DG K ஸ்ரீனிவாசன் முன்னிலையில் குழந்தைகளுக் கான விளையாட்டு பொருட்கள் அளிக்கப்பட்டன.

## RC மெட்ராஸ் சென்ன பட்னா — RID 3232

மாவட்டத் தொழில் சார்ந்த சேவைத் தலைவர் S N பாலசுப்ர மணியன் முன்னிலையில் DGN ரவி ராமன் ஆறு ஆசிரியர் களுக்கு விருதுகளை வழங்கிப் பெருமைப் படுத்தினார்.



## RC திருநெல்வேலி டவுன் — RID 3212



GMS கல்விக் கழகம், ஷோடோகன் கராத்தே-டூ பன்னாட்டு அமைப்புடன் இணைந்து, வெங்கடேஸ்வரா பள்ளியில் ஒரு கராத்தே முகாம் நடத்தப்பட்டது. சங்கத் தலைவர் L சங்கரமூர்த்தி ரூ.10,000 மதிப் புள்ள கருவிகளை வழங்கினார்.

## RC ரூர்கேலா க்வீன்ஸ் — RID 3261

கல்யாணி ராய் மகாவித்யாலயாப் பள்ளியில் DG சுனில் பதக் கழிப்பறை, கை கழுவும் நிலையம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.




## RC வாணியம்பாடி — RID 3231



ரோட்டரி கட்டடத்திலிருந்து பேருந்து முனையம் வரை ஓர் இளம் பிள்ளை வாதப் பேரணி நடத்தப் பட்டது. உலகின் இளம்பிள்ளை வாதத்தை ஒழிப்பதில் ரோட்டரியின் பங்கை ரோட்டரியன் கள் சுட்டிக்காட்டினர்.

## RC கீதாஞ்சலி கொல்கத்தா — RID 3291

இந்தச் சங்கம் ரோட்டராக்டர் களுடன் இணைந்து, முதியோர் இல்லத்தில் உள்ளோருக்குப் பரிசுப் பைகள், தூய்மைப் பொருட்கள் வழங்கினர்.



ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# விமான நிலைய சவால்கள்

TCA ஸ்ரீனிவாச ராகவன்

LBW

கடந்த மாதம் நானும் எனது மனைவியும் ஒரு முக்கிய ஆவணத்தில் கையெழுத்திடுவதற்காக பெங்களூரு செல்ல வேண்டியிருந்து. மின்னணு முறையில் இங்கிருந்தே அதில் கையெழுத்திட்டிருக்கமுடியும். மாநில அரசுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் முழுமையாகப் பூர்த்தி செய்து பதிவேற்றம் செய்திருந்தோம். ஆனால், அதிகாரிகள் பெரும்பாலும் இப்படித் தான்! டிஜிட்டல்மயமாக்கலை பொருட்படுத்த வேண்டாம். நேரில் வந்து கையெழுத்திட்டுச் செல்லுங்கள் என்றார் அந்த அதிகாரி. அந்த அதிகாரி மீது எரிச்சல் ஏற்பட்டபோதிலும், கோவிட் கட்டாய இடைவெளிக்குப் பிறகு வெளியூர் செல்வதை விரும்பி வரவேற்றோம். மாநில அரசு அதிகாரிக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து நாங்கள் VIPக்கள் போல கருதப்பட்டு ஆவணத்தில் கையெழுத்துபோடும் வேலை 20 நிமிடங்களில் முடிந்தது.

தில்லியிலிருந்து காலையில் விமானத்தில் பெங்களூர் சென்று விட்டு அன்று மாலையே திரும்பும் வகையில் வேலை எளிதாகத்தான் இருந்தது. ஆனால், வார இறுதியில் சென்றால் உறவினர்களையும் நண்பர்களையும் சந்திக்கலாம் என்பதால் எங்கள் பயணம் ஐந்து நாள் பயணமாகி விட்டது. ஐந்து நாட்களும் சுவாரஸ்மாகத்தான் இருந்தது.

தில்லியிலிருந்து பெங்களூர் செல்லும்போதும், பெங்களூரிலிருந்து தில்லிக்கு திரும்பியபோதும் விமானநிலைய அனுபவங்கள்தான் சுவாரஸ்யமாக இல்லை. காரணம் அதிக கூட்டம். உண்மையில் விமான நிலையத்தில் பயணிகள் க்யூ வரிசை நீண்டிருந்தது. விமானத்தை தவறவிட்டுவோம் என்றே நாங்கள் நினைத்தோம். “வெப்-செக்” பண்ண மறந்துவிட்டதால் கணினியில் எங்கள் பெயர் இடம்பெறவில்லை. வெப்-செக் பண்ணுவதற்கு ஒருவருக்கு 25 நிமிட நேரம் பிடித்தது. பாதுகாப்பு சோதனை செய்யும் இடத்திலும் நீண்ட வரிசை இருந்தது எங்களுக்கு கவலையை ஏற்படுத்தியது. அந்த நேரத்தில் நாங்கள் பயணிக்க இருந்த விமான நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் எங்களை “பிஸினஸ் கிளாஸ்” பயணிகள் செல்லும் வழியில் எங்களை அழைத்துச் சென்றார். அது முற்றிலும் காலியாகவே இருந்தது.

ஆனால், இந்தியாவில் எதுவும் எளிதானது அல்ல. அங்கிருந்த காவலர் எங்களை உள்ளே நுழைய அனுமதி மறுத்திவிட்டார். உடனே எனது மனைவி, தம்மிடம் இருந்த மூத்த குடிமக்களுக்கான அடையாள அட்டையை காண்பித்தார். அதன் பிறகு தான் அவர் எங்கள் மீது பரிதாபம் கொண்டு உள்ளே செல்ல அனுமதித்தார். நாங்கள் செல்ல வேண்டிய வாயில் 700 மீட்டர் தொலைவில் இருந்ததால் ஓட்டமும் நடையுமாக அங்கு சென்றோம். மூச்சு வாங்கிய நிலையில் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தோம். சுற்றும் முற்றும் பார்த்தபோது அங்கு வேறு எவரும் இல்லை. “ஒருவேளை விமானத்தில் பயணிகள் மிகக்குறைவோ என்னவோ” என்று ஜோக் அடித்த படியே என் மனைவி கைப்பேசியை கையிலெடுத்து யாருடனோ பேச ஆரம்பித்தாள். நான், விமானப் புறப்பாடு பற்றிய தகவல் பலகை யைப் பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஏதோ ஒரு உணர்வு என்னை தட்டியெழுப்பியது. நான் மனைவியிடம் கிளம்பு கிளம்பு என்றேன். விமான நிறுவனம், நுழைவு வாயில் எண்களை திடீரென மாற்றிவிட்டது என்றாள். கோவிட் காரணமாக ஊழியர்கள் பற்றாக்குறையால் அதை அறிவிக்கவில்லை போலும்!

நாங்கள் புதிய வாயிலுக்கு விரைந்து சென்றோம். விமானத்தின் நடுப்பகுதியில் எட்டாவது வரிசை யில் அமர்ந்தோம். பயணத்தை மகிழ்ச்சியுடன் தொடர்ந்தோம். விமானத்தில் தில்லி திரும்பிய கதையைச் சொல்லி உங்களுக்கு சலிப்பு ஏற்படுத்த விரும்பவில்லை. அதுவும் ஏறக்குறைய இதே கதை தான். ஆனாலும் எல்லாவற்றிலும் ஒரு நேர்மறையான பக்கம் இருக்கும். நான் என்னுடைய நண்பரிடம் அதைச் சொன்னபோது இது “பழிவாங்கும் சுற்றுலா,” “நீண்ட தொலைவு பயணம் செய்யாமல் இருப்பதற்கான மக்களின் பழிவாங்கல்” இது என்றாள்.

எனவே, நண்பர்களே, தொடர்ந்து பயணித்து பழிவாங்குங்கள். ஆனால், விமானநிலையத்துக்கு நான்கு மணி நேரம் முன்னதாகவே சென்றுவிடுங்கள். “வெப்-செக்” செய்ய மறந்துவிடாதீர்கள். உங்களுக்கான நுழைவு வாயில் எது என்பதையும் அதில் மாற்றம் இருக்கிறதா என்பதையும் அவ்வப்போது கண்காணித்துக் கொண்டிருங்கள். ஏனெனில் திரும்பி வரும்போது எங்களுக்கு அதுதான் நடந்தது. விமானம் தரையிறங்கிய போதிலும் புதிய நுழைவு வாயில் அறிவிக்கப்பட்டு அது செயல்பாட்டுக்கு வரும் வரை அரை மணி நேரம் நாங்கள் காத்திருந்தோம்.■

# செய்தித் துளிகள்

## ரோட்டேரியன் மருத்துவருக்கு பத்மஸ்ரீ



RID 3262க்கு உட்பட்ட பெர்ஹாம்பூர் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் மருத்துவர் கிருஷ்ண மோகன் பதியிற்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார். ஒடிஸாவின் கஞ்சம் மாவட்டத்தில் பழங் குடியினர் சமூகத்துக்கு அவர் செய்த சேவைக்காக இந்த விருது வழங்கப் பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பழங்குடியினருக்கு சிகிச்சை அளித்து வருகிறார் பதி. மேலும் பழங்குடியினருக்கு இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்கும் பரத்வாஜ் குருகுல ஆசிரமத்தையும் நடத்தி வருகிறார்.



## ராஜஸ்தான மந்திர சபையில் ரொட்டேரியன்

RC ஜெய்பூர் ரவுண்ட்-டவுன், RID 3054, உறுப்பினர் Dr மகேஷ் ஜோஷி ராஜஸ்தான் சட்டசபையில் பதவியேற்றுள்ளார். அவர் நீர் வளம் மற்றும் சுகாதாரத் துறையிற்கு அமைச்சராக உள்ளார்.

## மலாலாவின் திருமணம்



இளைஞர்களிடையே நம்பிக்கை நட்சத்திரமாகவும், பெண் கல்விக்காக பாடுபட்டு வருபவருமான மலாலா யூஸப்சாய், சமீபத்தில் தொழிலதிபரும், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் பொது மேலாளருமான அஸ்ஸர் மாலிக் என்பவரை திருமணம் செய்துகொண்டுள்ளதாக அறிவித்தார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இவரது திருமணம் இங்கிலாந்தில் பர்மிங்ஹாமில் உள்ள அவரது வீட்டில் எளிமையான முறையில் நடைபெற்றது. திருமண படங்களை அவர் டுவிட்டர் மற்றும் இன்ஸ்டாகிராமில் வெளியிட்டார். கணவர் அஸ்ஸர் மாலிக், தன் கையில் முத்தமிடும் காட்சியை அவர் பகிர்ந் கொண்ட போது அதை ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனராம்.

## ஹெலிகாப்டர் சவாரியில் கர்ப்பிணிப் பசுக்கள்



சுவிட்சர்லாந்து நாட்டின் உனர்போடன் பள்ளத்தாக்குப் பகுதிக்கு மலை உச்சியிலிருந்து 12 கர்ப்பிணி அல்லது காயமடைந்த பசுக்கள், வருடாந்திர அணிவகுப்புக்காக ஹெலிகாப்டர் மூலம் தரையிறக்கப்பட்டன. கடல் மட்டத்திலிருந்து 6,400 அடி உயரத்திலிருந்த இந்த பசுக்கள் மலையின் அடிவாரத்துக்கு அழைத்து வரப்பட்டன. இப்படி ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,000 பசுக்கள் ஆல்ப்ஸ் மலையின் உயரமான இடத்திலிருந்து பள்ளத்தாக்கு பகுதிக்கு ஹெலிகாப்டர் மூலம் அணிவகுப்பு விழாவுக்காக கொண்டு வரப்படுகின்றனவாம்.



## 1500 ஆண்டு பழமையான ஒயின் ஆலை

இஸ்ரேல் தொல்பொருள் ஆணையத்தைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், மத்திய இஸ்ரேலில் பைஸன்டைன் காலத்து உலகின் மிகப்பெரிய ஒயின் தயாரிப்பு ஆலையை கண்டுபிடித்துள்ளனர். தலா 2,400 சதுர அடி கொண்ட, திராட்சையிலிருந்து சாறு பிழியும் ஐந்து ராட்சத இயந்திரங்கள், வலைகள், மதுபானங்களை நீண்டகாலம் வைத்திருக்கும் நான்கு கிடங்குகள், உடைந்த நிலையில் சுட்ட களிமண்ணாலான மதுக்குடங்கள் உள்ளிட்டவை கண்டுபிடிக்கப் பட்டன. இந்த மது ஆலை ஆண்டுக்கு 5 லட்சம் காலன் மது தயாரிக்கும் திறன் பெற்றதாம்.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்.

Registered No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT




INTRODUCING

PG DIPLOMA CLINICAL PSYCHOLOGY — RCI APPROVED

B.Sc. FORENSIC SCIENCE

B.Sc. DATA ANALYTICS & ARTIFICIAL INTELLIGENCE (AI)

CERTIFICATE COURSE IN TEXTILE DESIGN

150+ UG/PG/Ph.D./D.Litt./D.Sc. & PROFESSIONAL PROGRAMMES

For More Details Visit onlineadmission.iisuniv.ac.in/

CIVIL SERVICE PREPARATION ALONG WITH GRADUATION

**IIS (deemed to be UNIVERSITY)**
Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur -302 020 (India)
**0141-2397906-07, +91 141 2400160, 2401008**

50% SCHOLARSHIP
OFFERED TO THOSE WHO HAVE LOST AN EARNING PARENT / GUARDIAN TO COVID-19